விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + XVI
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.



Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 தை 12 ஞாயிற்றுக்கிழமை (26.01.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 38

### கேரள கஞ்சாவுடன்
## வவுனியாவில் நால்வர் கைது

(வவுனியா)
வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் கேர்ள கஞ்சாவுடன் நான்கு இளைஞர்களை விசேட அதிரடிப் படையின்ர் கைது செய் 15

## அச்சுறுத்தல் ஏதும் இல்லை

### விரைவில் யாழ் விஜயம் செய்வேன் – ஜனாதிபதி கோட்டாபய

03

### 24 வயது குடும்பப் பெண்
# கிளிநொச்சியில் கணவனால் வெட்டிப்படுகொலை

### தானும் தற்கொலைக்கு முயற்சி; சகோதரிக்கும் கத்திக் குத்து

(கிளிநொச்சி)
கிளிநொச்சியில் 24 வயதான தனது மனைவியை கத்தியால் வெட்டிப்படு கொலை செய்த குடும்பத்தலைவர், சகோதரியைக்காப்பாற்ற முற்பட்ட இளம் பெண்ணையும் கத்தியால் குத்தியுள்ளார். அத்துடன் தானும் கழுத்தை அறுத்து தற்கொலைக்கு முற்சித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையிலும் உயிர்கொல்லி கொரோனா வைரஸ்?

### இரு பெண்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)
உலகைமிரட்டிவரும்கொரோனா வைரஸ் குறித்து இலங்கை விழிப்புடன் நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் இருவர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கப்படும் சீனப் பெண்ணொருவர் உட்பட இருவர் அங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் 15

## காணாமல் போனவர்களுக்கு விசாரணையின் பின்னரே மரணச் சான்றிதழ் - ஜனாதிபதி

(கொழும்பு)
யுத்தத்தின் போது காணாமல் போனவர்கள் தொடர்பில் உரிய விசாரணையின் பின்னரே மரண சான்றிதழ் வழங்கப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த விடயம் தொடர்பில் அண்மையில் முன்வைத்த விடயங்கள் குறித்து சர்வதேச ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளமை தொடர்பில் தெளிவுபடுத்தி ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை யொன்றை வெளியிட்டுள்ளது.
யுத்தத்தின் போது காணாமற் போன 20, 000 பேர் 15

### 22 பேராசிரியர்களால்
## 22 தமிழ் மன்னர்களின் சிலைகள் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)
தமிழர்களின் வாழ்வியலைப் பறைசாற்றும் முகமாக நாவற்குழியில் நேற்று திறந்து வைக்கப்பட்ட சிவபூமி அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த 22 தமிழ் மன்னர்களின் சிலைகளை 22 பேரா 15

### தமிழரின் பிரச்சினை தொடர்பில்
## அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராகவுள்ளோம்
### எம்.ஏ.சுமந்திரன்

(கொழும்பு)
தமிழ் மக்களின் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்துடனான பேச்சுவார்தைக்கு தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
தமிழ் மக்களது பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார் என அரசாங்கம் அறிவித்திருந்தது. இது தொடர்பில் தமிழ்த் தேசி 15

## பூஜித ஜயசுந்தர சாட்சியமளிப்பு

(கொழும்பு)
பதவிவிலக்கப்பட்ட பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் நேற்று சாட்சியம் வழங்கினார். 15

### தமிழ் மக்களின் வாழ்வியலை பறைசாற்றும்
## சிவபூமி அரும்பொருட் காட்சியகம் நாவற்குழியில் நேற்று திறப்பு



(யாழ்ப்பாணம்)
தமிழர்களின் வாழ்வியலை பறைசாற்றும் சிவபூமி அரும்பொருட் காட்சியகம் நேற்று நாவற்குழியில் மிகவும் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. அந்நியர் வருகைக்கு முன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த இருபத்திரெண்டு தமிழ் மன்னர் 15

# உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ்

### 65 மில்லியன் பேர் உயிரிழக்கும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை

15

### சைவ, புத்த ஒற்றுமை நிகழ்வில் கலந்து கொள்ள
### வரக்காகொட, அத்துரலிய
## தேரர்கள் யாழ் வருகை

(கொழும்பு)
அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வரக்காகொட ஞானரத்ன தேரர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் ஆகியோர் எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளனர். 15

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உடல் எடை குறைய வேண்டுமா?

- எடை கூடுகிறதா
- வயிறு மார்பு குறைய வேண்டுமா?
- உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாட்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளர வேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? முடி கொட்டுகிறதா? இளநரையா? தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? புதிதாக முடி முளைக்க வேண்டுமா? பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் குளிசை

இந்த எண்ணெயை பாவித்து பயனடைய (1993)

**077 210 6159 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**


# கரவெட்டியில் கோஷ்டி மோதல்; கைது செய்யப்பட்ட ஏழு பேரும்

## 14 நாட்கள் மறியலில்

(கரணவாய்)

கரவெட்டிப் பகுதியில் கோஷ்டி மோதலில் ஈடுபட்ட ஏழு பேரை 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி நளினி சுபாகரன் உத்தரவிட்டார்.

கடந்த தைப்பொங்கல் தினமான 15ஆம் திகதி கரவெட்டி மேற்கு பகுதியில் இரு பகுதியினருக்கு இடையே ஏற்பட்ட கோஷ்டி மோதலில் வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நால்வர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நெல்லியடி பொலிஸார் அப்பகுதியை சேர்ந்த 7 பேரை கைது செய்து நேற்று சனிக்கிழமை நீதவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தியபோது அவர்கள் ஏழு பேரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (ம-3.60)


**வேலையாள் தேவை** கிளிநொச்சியில் இயங்கும் பிரபல Hotel ஒன்றிற்கு
*உதவி முகாமையாளர் (மும்மொழி தேர்ச்சி)
*சமையலாளர் (இந்தியன், சைனிஸ்)
*சமையல் உதவியாளர் தேவை
உணவு, தங்குமிடம் உண்டு.
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
முன்அனுபவமுள்ள Barman தேவை தொடர்பு - 0779385521 (C-9061)


- 11 இளைஞர்கள் கடத்தல் விவகாரம் -

## வசந்த.கரன்னகொடவை மீண்டும் மன்றில் முன்னிலையாக உத்தரவு



முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஒப் த ப்ளீட் வசந்த கரன்னகொடவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மீண்டும் உத்தரவிடப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு தமிழ் இளைஞர்கள் உட்பட 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த வழக்கு கொழும்பு விசேட மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை. அதனையடுத்து. அவரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு மீண்டும் நோட்டிஸ் அனுப்ப உத்தரவிடப்பட்டது. (ம-3)


## யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### வருடாந்த பொதுக்கூட்டம் - 2020

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் - 2020, எதிர்வரும் 16.02.2020 ஞாயிற்றுக் கிழமை அன்று முற்பகல் 10.00 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவர்கள் எதிர்வரும் 08.02.2020 இற்கு முன்பதாக எழுத்துமூலம் சமர்ப்பிக்கவும். வதிவிட மாற்றம் உள்ளவர்கள் தயவோடு என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

'மத்தியின் மணிக்கொடி நித்திலம் நிலைக்கும்'

தொடர்புகளுக்கு:-
**077 764 2379** (C-9064)

செயலாளர்
யாழ்.மத்திய கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

**சேவை முகவர்**

**வீடு, காணி விற்பனைக்கு**

ஓட்டுமடம் வீடு 2 ½ பரப்பு, பலாலி வீதி திருநெல்வேலி 4 பரப்பு ஆகியன. விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். தரகர் தேவையில்லை. (1995)

சுந்தரம்
**077 481 9801**

## வாடகைக்கு

உரும்பிராய் கிழக்கு கற்புலம் வீதியில் (கோப்பாய் வீதியின் கிளை) சகல வசதிகளுடன் கூடிய 3 அறை வீடு வாடகைக்கு உள்ளது. வாடகை பேசித் தீர்மானிக்கலாம். **தரகர்கள் தேவையில்லை.** (1992)


நேரடித் தொடர்புகளுக்கு
**செல்வா 077 732 8583, 021 492 1728**

## அறை வாடகைக்கு

யாழ்.வேம்படி பாடசாலைக்கு அருகில் அறை வாடகைக்கு உண்டு. (பெண்கள் மட்டும்) (1997)

தொடர்பு:- **0775563030**


## நன்றி நவிலலும் அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அழைப்பும்



## அமரர் கந்தையா சண்முகசுந்தரம்

**(ஓய்வுபெற்ற இரசாயனவியல் ஆசிரியர்)**

எமது குடும்பத் தலைவர் அமரர் கந்தையா சண்முகசுந்தரம் இறைபதமடைந்த 29.12.2019 முதல் இற்றைவரை உடனிருந்து ஆறுதல் கூறி உதவி புரிந்த அன்புள்ளங்களுக்கும் நேரில் வந்தும் தொலைபேசி, முகப்புத்தகம் மூலமாகவும் பத்திரிகை, பதாகைகள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமாகவும் மற்றும் பிறவழிகளிலும் தம் துயரினைப் பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அமரரின் மாணாக்கர்கள் மற்றும் அனைவருக்கும் இறுதிக்கிரியைகளிலும் இறுதி அஞ்சலி கூட்ட நிகழ்விலும் இறுதி ஊர்வலத்திலும் பங்குகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் நாளை மறுநாள் 28.01.2020 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் பங்குகொண்டு சிறப்பிக்கவுள்ள அனைத்து அன்புள்ளங்களுக்கும் எம் சிரம் தாழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வின்போது நாம் உணர்வுகளுக்கு அடிமையாகியிருந்த தருணத்தில் எமது ஞாபகத்துக்கு அப்பாற்பட்ட நிலையில் நாம் யாருக்காவது தனிப்பட்ட அழைப்பைத் தரத் தவறியிருப்பின் அதனை மன்னித்து, பெரு மனதோடு இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

"அரவிந்தம்"
கரணவாய் தெற்கு, கரவெட்டி. (C-9062)

குடும்பத்தினர்
0779013296

## மரண அறிவித்தல்

பிறப்பு
05 - 09 - 1952



இறப்பு
24 - 01 - 2020

## திருமதி புஸ்பமலர் பயஸ் தர்மகுலசிங்கம்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பமலர் பயஸ் தர்மகுலசிங்கம் (குருசாமி) 24.01.2020 அன்று காலமானார்.

அன்னார் பயஸ் தர்மகுலசிங்கத்தின் (குருசாமி) பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற அருளப்பு - ஞானம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஜெனிபப்சன் (லண்டன்), பப்சிக் ராஜியா (ஜேர்மனி), பப்சிக் டயனா (பிரான்ஸ்), ஜெறோமியன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சைலஜா (லண்டன்) சில்வெஸ்ரர் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (27.01.2020) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு புனித மிக்கேல் தேவாலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (1996)


தகவல்: குடும்பத்தினர்
077 447 1107

"நான் விரைவில் யாழ்.விஜயம் செய்வேன்"

# நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை

## ஜனாதிபதி கோட்டாபய திட்டவட்டம்

### கடந்த அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடரும்



(கொழும்பு)

**நாட்டில் பாதுகாப்பு உச்சளவில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே எத்தகைய அச்சுறுத்தல்களும் தற்போது இல்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த அரசாங்கக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை தொடர்வது குறித்து விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்படும். எனவும் நான் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.**

பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் நாட்டிலுள்ள 14 ஆயர்களையும் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடினார். கொழும்பிலுள்ள கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது பல தரப்பட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் இந்த சந்திப்பின்போது வடக்கு- கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். கடந்த அரசாங்க காலத்தில் மேற்கொளளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் சுட்டிக்காட்டிய அவர் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டுமென்றும் எடுத்துக் கூறியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, நாட்டில் மாவட்டங்கள் தோறும் அபிவிருத்திக்குழுக்களை அமைத்து அந்தந்த பகுதிகளை அபிவிருத்தி செய்ய நான் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். வடக்கு- கிழக்கிலும் இத்தகைய அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும்.

கடந்த அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தொடரப்படும். அதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்று ஜனாதிபதி கூறினார்.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் இச்சந்திப்பில் ஆயர்கள் கேள்வி எழுப்பியபோது, அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனது பாதுகாப்பு அணியிலுள்ள பெருமளவானோர் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு படையினர் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளனர். இதன் காரணமாக தற்போது நானும் மக்களும் சுதந்திரமாக நடமாடுகின்றோம்.

நாட்டில் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாது செய்யப்பட்டுள்ளது. விரைவில் நான் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வேன் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (இ-7)

மோசடியாளர்களே அறிக்கை தயாரிப்பு

## பிணைமுறி மோசடி குறித்து புதிய விசாரணை வேண்டும்

### திலும் அமுனுகம தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான தடயவியல் அறிக்கை குறித்து தற்போதைய அரசாங்கத்தின் கீழ் புதிய 'விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கடந்த அரசாங்கத்திலிருந்து குழுவினராலேயே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டது என்றும் அவர்கள் இந்த மோசடிகளுடன் தொடர்புடையவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் உரையாற்றிய அவர், மத்திய வங்கி மோசடி விவகாரத்தால் ஜனாதிபதித் தேர்தலில் கடந்த அரசாங்கம் தோல்வியைச் சந்தித்தது மட்டுமல்லாமல், நாட்டின் பொருளாதாரத்தை அழிவுக்கு இட்டுச் சென்றது எனவும் தெரிவித்தார்.


பிணைமுறி மோசடி குறித்து விசாரணை செய்ய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 3 பேர் கொண்ட குழுவை நியமித்தார் என்றும் அந்தக் குழு பத்திர விவகாரத்தில் எந்த முரண்பாடும் இல்லை எனக் கூறியதனையும் திலும் அமுனுகம சுட்டிக்காட்டினார்.

எனவே தற்போதைய அரசாங்கம் இந்த தடயவியல் அறிக்கை குறித்து புதிய விசாரணையை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதேவேளை நாட்டை பொருளாதார மந்தநிலைக்கு இட்டுச் செல்லும் ஒரு கட்சியுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்கும் எண்ணம் சுதந்திரக் கட்சிக்கு இல்லை என்றும் அவர் கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மக்கள் ஒரு தீர்க்கமான ஆணையை வழங்கியிருந்ததால், ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர மற்ற கட்சிகளுடன் கூட்டணி அமைத்து பொதுத்தேர்தலில் தாங்கள் வெற்றிபெறுவது நிச்சயம் என்றும் திலும் அமுனுகம மேலும் தெரிவித்தார். (இ-7)

## படுகொலையான ஊடகவியலாளரின் 14 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று



(ஏறாவூர்)

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சு.சுகிர்தராஜனின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல். மட்டக்களப்பு- காந்தி பூங்காவில் அமைந்துள்ள ஊடகவியலாளர் நினைவு தூபியில் நேற்று இடம் பெற்றது.

இந் நினைவேந்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், மட்டு.மாநகரசபை மேஜர் தி.சரவணபவன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டில் உயர்தரக் கல்வியை முடித்துவிட்டு, பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருந்த 5 மாணவர்கள், திருகோணமலை- நிலாவெளி கடற்கரையில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவ்வாறு படுகொலை செய்யப்பட்ட மாணவர்களை இவர் படமெடுத்து செய்தி வெளியிட்டிருந்தார்.

மாணவர்களின் இறப்புக்கு கைக்குண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசை திருப்ப முயற்சிக்கப்பட்ட போது, இவர் எடுத்த படங்கள் தலையில் சுடப்பட்டு இறந்ததை தெளிவாக எடுத்துக் காட்டின. இதனால் அரசுக்கு சர்வதேச ரீதியில் அவப்பெயரும் அழுத்தங்களும் ஏற்பட்டன.

இந்நிலையிலேயே 2006 ஜனவரி 24 ஆம் திகதி திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்திற்கு அருகாமையில் வைத்து சுகிர்தராஜன், சுட்டுக் கொல்லப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ரஞ்சனுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளில் தடையேற்படாது

### அமைச்சர் பந்துல தெளிவுபடுத்தல்

(கொழும்பு)

ரஞ்சன் ராமநாயக்க, நாடாளுமன்றத்தை தற்போது திசை திருப்பியுள்ளார். ஆனாலும் அவருக்கெதிராக முன்னெடுக் கப்படும் சட்ட நடவடிக்கைகளில் தடையேற்படாதென அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பாக கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர், "சட்டவாக்க சபையின் தரம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் உரிய வகையில் பேணப்படவில்லை.

அத்துடன் சட்டத்துறைக்கும் இதே நிலை ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய காரணங்களால் நாடாளுமன்றம் மீது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை இல்லாது போகும் பட்சத்தில் நாடு அராஜகமான நிலைமைக்குத் தள்ளப்படும்.

மேலும் மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான அறிக்கையிலுள்ள விடயங்களை அரசாங்கம் ஒருபோதும் மறைக்காது.

இதேவேளை ரஞ்சனுக்கு எதிராக தொடர்ந்து சட்ட நடவடிக்கை நிச்சயம் மேற்கொள்ளப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர்

# விறுவிறுப்பாக நடைபெற்றுவரும் போட்டிகளின் மூன்றாம் சுற்று முடிவுகள்



ஆண்டின் முதலாவது கிராண்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர், தற்போது விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்றுவரும் இத் தொடரில் தற்போது மூன் றாவது சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

சரி தற்போது மூன்றாவது சுற்றின் சில முக்கியமான போட்டிகளின் முடிவுகளை பார்க்கலாம்,

ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டியொன்றில், ஸ்பெயினின் ரபேல் நடால், சகநாட்டு வீரரான பப்லோ கரேனோ புஸ்டாவை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில், ரபேல் நடால், 6-1, 6-2, 6-4 என்ற செட் கண க்குகளில் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

இன்னொரு ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டியொன்றில், பெல்ஜியத்தின் டேவிட் கோஃபினும், ரஷ்யாவின் ஆண்ட்ரி ரூப்லெவ்வும் பலப்பரீட்சை நடத்தினர்.


இரசிகர்களுக்கு உச்ச விறுவிறுப்பை ஏற் படுத்திய இப்போட்டியில், 2-6, 7-6, 6-4, 7-6 என்ற செட் கணக்குகளில் ஆண்ட்ரி ரூப்லெவ் வெற்றி பெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டியொன்றில், ஒஸ்திரியாவின் டோமினிக் தியேமும், அமெரிக்காவின் டெய்லர் ஃபிரிட்ஸ்சும் பலப்பரீட்சை நடத்தினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில், 6-2, 6-4, 6-7, 6-4, என்ற செட் கணக்குகளில் டோமினிக் தியேம், வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்குள் நுழைந்தார்.

இன்னொரு ஆண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டியொன்றில், பிரான்ஸின் கல் மோன்ஃபில்ஸ்சும், லத்வியாவின் ஏர்னெஸ்ட் குல்பிஸ்சும் மோதினர்.

இரசிகர்களின் கரகோஷத்திற்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், 7-6, 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்குகளில் மோன்ஃபில்ஸ் வெற்றிபெற்று நான் காவது சுற்றுக்கு முன்னேறினார்.



# அவுஸ்திரேலிய பகிரங்க டெனிஸ்

## பெண்களுக்கான 3வது சுற்று முடிவுகள்



ஆண்டின் முதலாவது கிராண்ட் ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்ரேலிய பகிரங்க டென்னிஸ் தொடர், தற்போது விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்றுவரும் இத்தொடர், கடினத் தரையில் நடைபெறும் டென்னிஸ் தொட ராகும்.

சரி தற்போது, இத்தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றின் சில முக்கியமான. போட்டிகளின் முடிவுகளை பார்க்கலாம்,

பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டியொன்றில், ரோமேனியாவின் சிமோனா ஹெலப்பும், கஸகஸ்தானின் யூலியா புடிண்ட்சேவாவும் மோதினர்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், 6-1, 6-4 என்ற நேர் செட் கணக்குகளில் சிமோனா ஹெலப் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு முன்னேறினார்.

இன்னொரு பெண்கள் ஒற் றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டியொன்றில், சுவிஸ்லாந்தின் பெலின்டா பென்சிக்கும், எஸ்டோனியாவின் அனெட் கொன்டாவிட்டும் பலப்பரீட்சை நடத்தினர்.

பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில், 6-0, 6-1 என்ற நேர் செட் கணக்குகளில் பெலின்டா பென்சிக் வெற்றிபெற்று நான்காவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டியொன்றில், ஜேர்மனியின் ஏஞ்சலிக் கெர்பரும், இத்தாலியின் கமிலா ஜியோர்கியும் மோதினர்.

இரசிகர்களின் கரகோசத்திற்கு மத்தியில் நடைபெற்ற இப் போட்டியில், 6-2, 7-6, 6-3 என்ற செட் கணக்குகளில் ஏஞ்சலிக் கெர்பர் வெற்றி பெற்று நான்காவது சுற் றுக்குள் நுழைந்தார்.

இன்னொரு பெண்கள் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுப் போட்டியொன்றில், செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவா, ரஷ்யா்வின் அனஸ்தேசியா பவ்லியுசென் கோவாவை எதிர்கொண்டார்.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில் இரண்டு செட்டுகளுமே டை பிரேக் வரை நகர்ந்தன. இதில் சிறப்பாக விட்டுக் கொடுக்காமல் விளையாடிய கரோலினா பிளிஸ்கோவா, 7-6, 7-6 என செட்டுகளை கைப்பற்றி அரையிறுதிக்குள் அடியெடுத்து வைத்தார்.


## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி பதவி வெற்றிடம் நிரப்புதல்

பதவியின் பெயர்:-தொழிலாளி
குறியீட்டு இலக்கம்:-318/17
சம்பளத்திட்டம்:-14725-115X10-130X10=17175.00

### வெற்றிடம்-01

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியில் வெற்றிடமாகவுள்ள மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

### தகைமைகள்

*05ம் வகுப்புச் சித்தியும் நல்ல தேக ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

### வயதெல்லை

*18---45 வயதிற்கு இடைப்பட்டவர்கள்

(தற்போது கொத்தணியில் சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.)

### ஏனைய விபரங்கள்

*இப் பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தை விட மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றுநிருபத்திற்கமைய இதரப்படிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

*விண்ணப்பங்கள் சங்க தலைமைக் காரியாலயத்தில் பெற்று "தலைவர், வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பிப்பிலிச்சந்தி, மானிப்பாய்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

*வயதெல்லை 18-45 வயது வரை (தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.)

*தற்போது கூட்டுறவுச் சேவையிலிருப்பவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும் போது தமது விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்பி வைக்கப்படவேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல், விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் வெளிப்படுடமிடத்து நியமனங்களை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

*நியமனத்துக்கென தெரிவு செய்யப்டும் போது சங்கத்தால் கோரப்படும் ரொக்கப்பிணையை செலுத்த வேண்டும்.

*விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி:-09.02.2020

திகதி:-26.01.2020

**தலைவர்,**
**வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கங்களின்**
**கொத்தணி, மானிப்பாய்**

(c-9065)


# நொதேண் விளையாட்டு கழகத்தின்

## பொங்கல் விழா இன்று

(யாழ்ப்பாணம்)

நொதேண் விளையாட்டு கழகத்தின் தைப் பொங்கல்விழா இன்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல 3.00 மணியளவில் யா/செங்குந்த இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

நொதேண் விளையாட்டு கழகத்தின் தலைவர் க.நிஷாகரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளு நர் P.S.M.சாள்ஸ், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நா.வேதநாயகம்,வடக்கு மாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளர் இ.இளங்கோவன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் இ.குருபரன், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி P.வீரசிங்க கொழும்பு றோயல் கல்லூரி சிரேஷ்ட பொருளியற் துறை ஆசிரியர் க.கலாகரன், விருந்தினர் களாக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப் பாளர் பிரான்சிஸ் சேவியர் அன்ரன், சிறி நதியா நகை மாளிகை உரி மையாளர் நடராஜா சத்தியரூபன்.E.S.P நாகரட்ணம் அன்கோ உரிமையாளர் கல்விக்.காரு ணியன் E.S.P நாகரட்ணம் ஆகியோர் கல ந்து கொள்வர்.

### "நீதிக்கட்டமைப்பை துண்டாட இடமளிக்க முடியாது"

# ரஞ்சனின் கோரிக்கையை நிறைவேற்றாத நீதிபதி கைதாவதை ஏற்க முடியாது

## அமைச்சர் விமல் விளக்கம்

(கொழும்பு)

**நாட்டின் நீதிக் கட்டமைப்பைத் துண்டாடுவதற்கு எவராவது நினைத்தால் அதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. ரஞ்சன் ராமநாயக்கவுடனான நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவின் தொலைபேசி உரையாடல் தகவல்களின்படி ரஞ்சன் ராமநாயக்கவின் கோரிக்கையை நீதிபதி நிறைவேற்றியிருக்காத நிலையில் அவரை கைது செய்ய முன்னெடுக்கும் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக்கூடியவையல்லவென அமைச்சர் விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.**

இந் நிலையில் நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை கைது செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்ற அமரர் ரஞ்சித் டி சொய்சாவின் அனுதாப பிரேரணை மீதான விவாதத்தின் போதே அமைச்சர் விமல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் சட்டம் செயற்படுத்தப்பட்ட முறையை நாம் பார்த்துள்ளோம். சபாநாயகரின் தலை மையில் கூடும் அரசியலமைப்பு பேரவையென ஒன்றுள்ளது.

அந்தப் பேரவையால் பரிந்துரைக்கப்பட்ட சட்டமா அதிபர் டி லிவேரேவே தற்போதும் பதவியில் இருக்கின்றார். அவர்கைது செய்து விளக்கமறியலில் வைக்குமாறு கோரும்போது அதனை செய்தார்கள். இந்த சட்டமா அதிபரே தற்போது நீதிபதி கிஹான் பிலபிட்டியவை உடனடியாக கைது செய்யுமாறு கூறியுள்ளார். ஏன் அப்படி கூறினார் எனத் தெரியவில்லை.

கிஹான் பிலப்பிட்டியவை விடவும் ரஞ்சன் ராமநாயக்கவுடன் கலந்துரையாடும் நீதவான் தொடர்பான வீடியோ பதிவும் இருக்கின்றது. கடுவலை முன்னாள் நீதவானே அவர்.

அவரை கைது செய்யுமாறு சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கவில்லை. ரஞ்சன் ராமநாயக்க எம்.பி தனது நீதிமன்ற செயற்பாடுகளுக்கு அழுத்தம் கொடுத்தார் என முறையிட்ட கிஹான் பிலப்பிட்டியவை கைது செய்யுமாறு உத்தரவிடுகின்றார்.

உண்மையில் கிஹான் பிலப்பிட்டிய, ரஞ்சன் ராமநாயக்கவுடன் மேற்கொள்ளும் தொலைபேசி உரையாடலில் ரஞ்சன் ராமநாயக்கவின் கோரிக்கையை அவர் நிறைவேற்றவில்லை. பௌசியை ஒரு மணி நேரமாவது சிறையில் போடுமாறு அவர் கேட்கின்றார்.

அதனை அவர் நிறைவேற்றவில்லை. இதன் பின்னர் அவர் அது தொடர்பாக முறையிடுகின்றார். முறையிட்டவரை எப்படி சிறையில் போட முடியும்?.

இவ்வாறான சட்டமா அதிபரை நியமித்துக் கொண்டு அடக்குமுறை பொறிமுறைகளை செயற்படுத்திய போதும் நீதிபதி



கிஹான் பிலப்பிட்டியவை கைது செய்யும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார் என விமல் மேலும் விளக்கமளித்தார். (இ-7)

### "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மருதனார்மடம் வீதி உரும்பிராய்ச் சந்தியிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் ஏற்பாட்டில் "பேசாத நாளெல்லாம் பிறவாத நாளே" என்னும் தலைப்பிலான சொற்பொழிவு எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர், துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச் சொற்பொழிவை தமிழ்நாடு விழுப்புரம் இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி பரமசுகானந்த மகராஜ் வழங்குவார்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன் கலந்துகொள்வார். (இ-5)

# மரண அறிவித்தல்

## திருமதி.நடராசா இரத்தினபூபதி (சுந்தரவல்லி)



வேலாயுதபிள்ளை வீதி, நுணாவில் மத்தி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா இரத்தினபூபதி (சுந்தரவல்லி) அவர்கள் 24.01.2020 அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் அமரர் வேலாயுதம்பிள்ளை- சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும் வீரகத்தி- சின்னாச்சிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும்அமரர் நடராசா அவர்களின் அன்பு மனைவியும் சுசிலாதேவி, சுகுணேந்திரன் (SWISS), சுஜாத்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும் தர்மலிங்கம், ஈஸ்வரி (SWISS), சிறீதரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரூபன், நிதர்சன் நிரோஜன், நிரஞ்சன் பிரணவன், சிரணவன், கிரிஜா, வித்தகன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் அக்ஷயா அவர்களின் அன்புப் பூட்டியும் சேனாதிராஜா, அமரர் இராசபூபதி, அமரர் குகமூர்த்தி, குகனேஸ்வரி அமரர் காசிநாதன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 27.01.2020 திங்கட்கிழமை காலை 8 மணியளவில் இடம் பெற்று 10 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிபிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு
SWISS: + 41768302032- viber
076 771 1953

1489

விலாசம்:
வேலாயுதம் வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

## இராசி பலன்

26.01.2020
தை 12, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு
துதியை பின்னிரவு 6.09 மணிவரை
அவிட்டம் முழுவதும்
சுபநேரம் 9.36 - 11.06 மணிவரை
இராகு காலம் - 5.06- 6.36 மணிவரை
காலத்தின் அருமை அறிந்தவர் அதை வீணடிக்கமாட்டார்

வளவன்

கிரகநிலை: ராகு; சுக்; சூரி சந் புத; சனி கேது குரு; செவ்

சந்திராஷ்டமம்: புனர்பூசம்

**மேடம்:** யோகமான நாள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், செய்தொழில் முன்னேற்றம் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்:** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, சேமிப்பு செலவாகாதிருக்க விழிப்புணர்வு அவசியம், எதிர்பாராத வகையில் சில கௌரவக் குறைவுகள் ஏற்படலாம்.

**கடகம்:** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறலாம், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், தொழில் சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**கன்னி:** மன நிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாகத் தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், உயரதிகாரிகளின் பாராட்டுக்கள் கிடைக்கும்.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வளர்ச்சி கூடும் நாள், சேமிப்பு உயர்வதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள்.

**தனுசு:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்:** பயணத்தால் பலன் கிடைக்கும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் வெற்றி பெற பரம் பொருளை வழிபட வேண்டிய நாள்.

**கும்பம்:** சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்லாம், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**மீனம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் நிறைவேறலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

## கணிதம், விஞ்ஞானம் கற்போர் வீதம் போதாது

# வடக்கில் 221 வைத்தியர்கள் வெற்றிடம் நிரப்பப்படவில்லை

## ஆளுநர் கவலையுடன் சுட்டிக்காட்டு

(குப்பிழான்)

வடமாகாணத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரண்டு துறைகளும் மிகவும் சவாலுக்குரியதாக மாறியுள்ளன.

அரச திணைக்களங்களில் போதியளவு மருத்துவர்கள், தாதியர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் காணப்படவில்லை.

விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்று வெளியேறுவோரின் எண்ணிக்கை வடமாகாணத்தில் மிகவும் குறைவாக காணப்படுவதால் ஆட்சேர்ப்பு என்பது மிகவும் சவாலுக்குரிய தொன்றாகவுள்ளது என வடமாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவனும் சட்டத்தரணியுமான ராஜரட்ணம் செல்வாஸ்காந்தன் தனது தாயாரின் ஞாபகார்த்தமாக சொந்த நிதியில் வடமாகாணம் தழுவிய ரீதியில் மாணவர்கள் மத்தியில் 2019 ஆம் ஆண்டில் நடத்திய விஞ்ஞானம், கணிதபாட போட்டிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் 221 வைத்தியர்கள் மற்றும் 200 இற்கும் மேற்பட்ட தாதியர்களின் வெற்றிடம் நிரப்பப்படாமலுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் நாம் இதற்குப் பதிலாகத் தேவையற்ற துறைகளில் மாணவர்களைப் பல்கலைக்கழகங்களில் பயிற்றுவித்துக் கொண்டிருக்கின்றோம்.

நடனம், சங்கீதம், நாடகம் ஆகிய துறைகளில் பயிற்றுவிக்கப்பட்ட பல ஆசிரியர்கள் தற்போது வடமாகாணத்தின் பல பாடசாலைகளில் நிரம்பி வழிகிறார்கள்.


இதேவேளை, வெளிமாகாணங்களில் உள்ளீர்க்கப்பட்ட ஆசிரியர்கள் வடமாகாணத்திற்கு வருகை தருவதற்கு ஆர்வம் செலுத்துகிறார்கள். இங்கு அவர்கள் கேட்கும் பாடங்களுக்கு வெற்றிடங்களில்லை.

எனவே, தேவையான பாடங்களைத் தேர்ந்தெடுத்து மாணவர்கள் பயின்று கொண்டால் நிச்சயமாக சிறந்த வேலைவாய்ப்புத் தேடி வரும்.

வடமாகாண மாணவர்கள் விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரண்டு பாடங்களிலும் சிறுவயது முதல் மிகவும் கவனமெடுத்துக் கற்க வேண்டும்.

இல்லாவிடில் இந்த மாகாணத்தில் வைத்தியர்கள், தாதியர்கள் போன்ற துறைகளில் ஆளணியினரை நிரப்புவதற்கு வெளிநாட்டவர்களை உள்ளீர்க்க வேண்டிய சூழல் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-18)

# முதலாம் தவணைக்குள் அதிபர் வெற்றிடங்கள் 50 சதவீதம் பூர்த்தி



(கொழும்பு)

பாடசாலைகளின் முதலாம் தவணைக்குள் அதிபர் வெற்றிடங்களில் 50 சதவீதம் பூர்த்தி செய்யப்படுமென கல்வியமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அதனை தொடர்ந்துவரும் ஏனைய இரண்டு தவணைகளுக்குள்ளும் மிகுதி 50 வீதம் அதிபர் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாடு முழுவதும் 278 தேசிய பாடசாலைகளில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக அதிபர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஒன்பது வருடங்களாக நிலவிய வெற்றிடம் எதிர்வரும் 5 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படும்.

இதேவேளை இந் நாட்டின் தேசிய பாடசாலைகளின் வலையமைப்பை பலப்படுத்த வேண்டும்.

இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் தரம் ஒன்று, இரண்டு, மூன்று அல்லது இலங்கை அதிபர் சேவையின் தரம் ஒன்றில் சித்தியடைந்தவர்களுக்கே தேசிய பாடசாலைகளில் அதிபர் நியமனம் வழங்கப்படுவதுண்டு.

இலங்கை அதிபர் சேவையில் தரம் ஒன்றில் சித்தியடைந்தவர்களுக்கு அதிபர் நியமனத்துக்கான நேர்முகப் பரீட்சையை 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 23 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் கல்வி அமைச்சு நடத்தியிருந்தது.

இதற்கான தெரிவு அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவை குழுவிடம் ஒப்படைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் அதிகாரிகள் 14 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதிக்கு அமைவாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உதவி பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்கலாக 14 பேருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

இதன்படி யாழ்ப்பாண பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியான டி.தல்துவ மேல் மாகாண புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

பொலிஸ் அதிகாரி டி.எம்.திலகரத்ன அமைச்சரவை பாதுகாப்பு பிரிவிலிருந்து மேல் மாகாண புலனாய்வு பிரிவுக்கு மாற்றப்பட்டதோடு, உதவி பொலிஸ் அதிகாரி எச்.எம்.லெவன்கம, ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவிலிருந்து இரத்தினபுரி பிரிவுக்கு மாற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

இதேபோல, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவரும், இரண்டு பொலிஸ் அதிகாரிகள் மற்றும் உதவிப் பொலிஸ் அதிகாரிகள் சிலரும் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டனர். (இ-7)

## யாழ்.சர்வதேச வர்த்தகக் கண்காட்சி மூலம் உள்ளூர் உற்பத்திகள் சர்வதேச மயப்பட வேண்டும்

# யாழ்.மாநகர முதல்வர் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெறுகின்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சி மூலம் உள்ளூர் உற்பத்திகள் நாடளாவிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட் வலியுறுத்தினார்.

யாழ்.முற்றவெளிப் பகுதியில் நேற்று முன்தினம் ஆரம்பமான சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் விருந்தினராக்க் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒவ்வொரு வருடமும் இச் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்று வருவதையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.

எமது மக்களின் எண்ணங்கள், பிரதிபலிப்புக்கள் தேசிய ரீதியைத் தாண்டி சர்வதேச ரீதியிலும் பயணிப்பதற்கு இக் கண்காட்சி தூண்டுதலாக அமைகிறது. .

2019 ஆம் ஆண்டு இக் கண்காட்சியானது யாழ்.மாநகர சபை வளாகத்தில் இடம்பெற்றது. இம் முறையும் அதை நடத்த வேண்டும் என நாம் விரும்பிய போதிலும் யாழ்.மாநகர சபையின் புதிய கட்டடத்துக்கான நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதால் நடத்த முடியவில்லை.



இருந்த போதும் எமது யாழ். மண்ணை விட்டு வேறு பகுதிகளுக்குச் செல்லாமல் எமது பிரதேசத்திலேயே இக் கண்காட்சியை இம்முறையும் நடத்துவதையிட்டு மகிழ்வடைகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# யோகா புதிய பயிற்சி நெறிகள் நல்லூர்த்தேரடி அருகே ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.யோகா உலகம் அமைப்பு நல்லூர்த்தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மண்டபத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கிறது.

இதன் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யோகா உலகம் அமைப்பின் செயலர் யோ.பிரசாத் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழத்தைச் சேர்ந்த திருமதி சாவித்திரி ரவிச்சந்திரன் உள ஆரோக்கியத்திற்கான யோக வழிமுறைகள் எனும் தொனிப்பொருளிலும் சிரேஷ்ட யோகா போதனாசிரியர் எஸ்.உமாசுதன் யோகா கற்பித்தல் நுணுக்கங்கள் எனும் விடயம் பற்றியும் சிறப்பு விரிவுரைகளை வழங்குவர்.

யோகா உலகம் அமைப்பின் மாணவர்களான காஸ்ரோ, கோபிசங்கர், அபிசன், ஆருதி முதலானவர்களின் யோக அசைவுகளும் இடம்பெறும்.

தொடர்ந்து யோகா வகுப்புக்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் காலை மற்றும் மாலை வேளைகளில் 6 மணி தொடக்கம் 7 மணிவரை தினமும் இடம் பெறும்.

மூன்றாவது பயிற்சிநெறி வார இறுதி நாட்களில் காலை 7.30 தொடக்கம் 8.30 மணிவரையும் நடைபெறும். (இ-7)

# பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும்

(குப்பிழான்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடத்தும் 59 ஆவது பட்டமளிப்பு விழாவும் சைவ மாநாடும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணி முதல் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் அகில இலங்கை சங்கத் தலைவர் சைவப்புலவர் மு.திருஞான சம்பந்தபிள்ளை தலைமையில் இடம்பெறும்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திருமுன்னிலையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன், சிறப்பு விருந்தினர்களாக சிவஸ்ரீ ஆ.சந்திரசேகரக்குருக்கள், பண்டிதர் தி.பொன்னம்பலவாணர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் ச.முகுந்தன், கௌரவ விருந்தினராக் கொடிகாமம் வர்த்தக சங்கத் தலைவர் சு.அருணாசலம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-18)

# செயற்பட்டு மகிழ்வோம்

(கொடிகாமம்)

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு எதிர்வரும் 29 ஆம் திகதி அதிபர் கா.கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வைத்தியர் தி.குமணன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

# அரசமைப்பில் மாற்றம் தேவை

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்து

(பொலநறுவை)

**நாட்டை முன்னேற்ற வேண்டுமெனில் அரசமைப்பில் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.**



பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றிய மைத்திரி, இந்தச் செயற்பாட்டை மேற்கொள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயார் என்றும் உறுதியளித்தார்.

அவர் மேலும்' தெரிவிக்கையில், "ஜனாதிபதியிடமிருந்த அதியுச்ச அதிகாரங்களை நான் நாடாளுமன்றுக்கு வழங்கினேன். சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு வழங்கினேன். பிரதமருக்கு வழங்கினேன். இலங்கையின் ஜனாதிபதியின் பதவிக் காலம் 6 வருடங்களாக இருந்தது.

நான்தான் இதனை ஒரு வருடம் குறைத்துக்கொள்ளுமாறு கூறினேன். இதனை நான் அன்று மேற்கொள்ளவில்லை என்றால் இன்றும் நான் ஜனாதிபதியாகத்தான் இருந்திருப்பேன்.

இவ்வாறான செயற்பாடுகளை நான் மேற்கொள்ளாமல் இருந்திருக்கலாம். அப்படியானால், இந்த வருட நவம்பரில்தான் ஜனாதிபதித் தேர்தல் நடந்திருக்கும்.

அத்தோடு, 19 ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டுவரவும் நான்தான் அதிகமாக முற்பட்டேன். இதில் சில குறைபாடுகள் இருக்கின்றன.

இதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதனால்தான் நான் இதற்கு எதிர்ப்பை வெளியிடுகிறேன். இதனால், நாட்டை முன்னோக்கிக் கொண்டுச்செல்ல முடியாது. அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தினால் மட்டும் தான் நாட்டை சக்தி மிக்கதாக மாற்ற முடியும்.

இதனை தற்போதுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கூட மேற்கொள்ள முடியாது. அவருக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை பலம் இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை நாட்டுக்கு சிறந்தொரு தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விளங்குகிறார். இப்படியான ஒருவருக்கு நாம் எம்மால் முடிந்த ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## "சைவத் திருத்தல யாத்திரை திலகம்" பட்டம் வழங்கிக் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

எவர் சைன் கல்வி நிலைய இயக்குநர் செல்லையா ஜெயபாலசிங்கத்திற்கு சிதம்பரம் தேசிகர் பேரவையினர் "சைவத்திருத்தல யாத்திரை திலகம்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்ததுடன் ஞாபகார்த்தமாக நடராஜர் சிலையையும் சிதம்பரம் தில்லை வாழ் அந்தணர் முருகன் தீட்சகர் வழங்கினார்.

இந்நிகழ்வில் அண்ணாமலை பல்கலைக்கழக அத்தியட்சகர் கணேசனும் அவரது பாரியாரும் கலந்து கொண்டனர். (இ-2)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## 7 இராஜாங்க அமைச்சர்களுக்கான விடயதானங்கள் குறித்த வர்த்தமானி இதுவரையில் வெளியிடப்படவில்லை

(கொழும்பு)

7 இராஜாங்க அமைச்சர்களுக்கான விடயதானங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் இதுவரையில் வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய சுசந்த புஞ்சி நிலமே, பிரியங்கர ஜெயரத்ன, விதுர விக்கிரமநாயக்க, சேகான் சேமசிங்க, லோஹான் ரத்வத்த, தாரக பாலசூரிய மற்றும் நிமால் லன்சா ஆகிய இராஜாங்க அமைச்சர்களுக்கான விடயதானங்களே இதுவரை அறிவிக்கப்படாதுள்ளன.

இராஜாங்க அமைச்சர்களுக்கான கடமைகள் மற்றும் பொறுப்புக்களை வழங்குமாறு அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

இராஜாங்க அமைச்சர்கள் கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

**கல்யாணமாலை**
**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி 2செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L, சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: உள்நாடு<br>தொ.இ: B/ 10402 | பிறப்பு: 1991 கிறிஸ்தவம்<br>தகைமை/தொழில்: IT ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: G/ 10401 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 24 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி, France<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/ 10404 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3சூரி செவ் 11 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc(Hons), Medical Student, UK<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor<br>தொ.இ: G/ 10403 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: O/L, அரசதொழில்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10405 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 1<br>கி.பா: 23<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: B.Pharm, Chemist<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி, வெளிநாடு<br>தொ.இ: G/ 10407 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2 சூரி செவ் 6 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: Civil Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/10408 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 3<br>கி.பா: 36 ½ செவ் 1 இல்<br>உயரம்: 148cm<br>தகைமை/தொழில் BAF, தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, விவாகரத்தும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/ 10412 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

**மணமகன் தேவை**

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியராக கடமை புரியும் மணமகளுக்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு Tel:- 077 340 5951
E.mail:- engchelvam@gmail.com
(1974)

**மணமக்கள் தேவை**

அமெரிக்காவில் உள்ள 1989 அனுசம், 1985 (Holland) ஆகிய இரு மணமகனுக்கும் படித்த மணமக்கள் தேவை, (அவுஸ்திரேலியா) 1984 (சபை வேதம்), 1984 (RC) வேதம் கனடா இவர்களுக்கு பல்கலைக்கழகம் படித்த மணமகன்கள் தேவை, (1987, 1989, 1990) கனடா சைவம் இவர்களுக்கும் படித்த மணமகன்கள் தேவை மற்றும் வெளிநாட்டில் உள்ள மணமகன், மகளுக்கு இலங்கையில் உள்ள மணமக்கள் தேவை.

0094 77 745 6837 (imo)
076 559 0349
(1973)

"நீதிமன்றங்களைப் பாதுகாப்போம்"

# நீதிபதியை கைது செய்ய சட்டத்தரணிகள் எதிர்ப்பு



(கொழும்பு)

எம்பிலிப்பிட்டிய மேல் நீதிமன்றின் நீதிபதியாக இருந்த பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட நீதிபதி கிஹான் பிலப்பிட்டியவை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் பொலிஸாருக்கு வழங்கிய உத்தரவு சட்டத்துக்கு முரணானது எனக் கூறி கொழும்பு நீதவான் நீதிமன்றின் சட்டத்தரணிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

புதுக்கடையிலுள்ள நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக சட்டமா அதிபருக்கு எதிரான பதாகைகளைத் தாங்கி இந்த அமைதி வழி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

"பிலப்பிட்டியவுக்கு அமுல் செய்யும் சட்டம் தில்ருக்ஷிக்கு எங்கே? நீதி, நியாயம் சட்டமா அதிபரின் மலர்ச்சாலை இல்லை, சட்டமா அதிபரின் அச்சுறுத்தலிலிருந்து மேல் நீதிமன்றங்களைப் பாதுகாப்போம் போன்ற வாசகங்கள் அடங்கிய தமிழ், சிங்கள, ஆங்கில பதாகைகளை தாங்கி இந்த ஆர்ப்பாட்டத்தை சட்டத்தரணிகள் முன்னெடுத்தனர். (இ-7)

## ஆயிரம் ரூபா வழங்க முடியாவிடின் தோட்டங்களை ஒப்படையுங்கள்

### கம்பனிகளிடம் ஜயரத்ன கோரிக்கை



(கண்டி)

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பள உயர்வை வழங்கி நியாயத்தை நிறைவேற்ற முடியாவிடின் தோட்டங்களை அரசாங்கத்திடம் கையளிக்குமாறு கம்பனிகளுக்கு பகிரங்கமாக கோரிக்கை விடுப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் அநுராதா ஜயரத்ன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா சம்பள உயர்வை வலியுறுத்தும் சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு நியாயத்தை நிலை நிறுத்தவென 1,000 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்திருந்தார்.

தோட்டத் தொழிலாளர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர். இன்று தொழிலாளர்களாக அவர்கள் பெருந்தோட்டங்களில் பணிப்புரிய தயார்நிலையில் இல்லை.

நகர்ப்புறத் தொழில்களை நோக்கி அவர்கள் நகர்ந்து வருகின்றனர். இளைஞர்கள் பெருந்தோட்டத்துறையில் பணிபுரிய தயார் நிலையில் இல்லை. 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் அதிகமாகவுள்ளனர். பெருந்தோட்டத்துறை அந்நியச் செலாவணி மற்றும் சுற்றுலாத்துறையில் பாரிய தாக்கத்தை செலுத்துகிறது.

'சிலோன் டீ' உலகளாவிய ரீதியில் பிரசித்தமானதுடன் எமது சுற்றுலாத்துறைக்கும் ஊக்கத்தை கொடுக்கிறது. இவர்களை இத்தொழில்துறையில் தக்கவைக்க கடந்த காலத்தில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

துரிதமாக 1,000 ரூபா சம்பள உயர்வை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும். தொழில் பிரச்சினையுடன் தற்கொலைகளும் அதிகம் இடம் பெற்று வருகின்றன. நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடையும் சந்தர்ப்பத்தில் இங்கு தற்கொலைகள் இடம்பெறுவது பாரிய பிரச்சினையாகும் என மேலும் தெரிவித்தார். (ஜ)

பொறுப்பை நிறைவேற்றத் தவறிய எதிர்க்கட்சி

# ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அரசு மீது மக்களுக்கு அதிருப்தி

## திஸ்ஸ சுட்டிக்காட்டு



(கண்டி)

கடந்த ஆண்டு இறுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் அரசாங்கத்தின் மீது பொதுமக்கள் வைத்திருந்த நம்பிக்கை குறைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர், பொதுமக்களின் தேவைகள் குறித்து பேசாமல் முக்கியமற்ற பிரச்சினைகளுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் அரசாங்கம் பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது.

வாழ்க்கைச் செலவு தொடர்பிலான பிரச்சினை, பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், வேலை வாய்ப்புக்கள் போன்ற பல விடயங்களில் பொதுமக்களுக்கு அதிக எதிர்பார்ப்பு இருப்பதாகவும் திஸ்ஸ சுட்டிக்காட்டினார்.

எனவே இந்த விடயங்களுக்கான தீர்வு தொடர்பாக அரசாங்கத்தின் தரப்பிலிருந்து எந்தவொரு பதிலும் இல்லாததால் தற்போது பொதுமக்கள் கடும் பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இருப்பினும் அரசாங்கத்தில் மக்கள் அதிருப்தியில் இருக்கும் போது, எதிர்க்கட்சி தனது பொறுப்பையும் நிறைவேற்றத் தவறிவிட்டது என்றும் திஸ்ஸ மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)


இறுப்பிட்டி சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இறுப்பிட்டி விளையாட்டுக்கழக மைதானத்தில் கழகத் தலைவர் தினேஸ் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுத்துறை விரிவுரையாளர் மா.இளம்பிறையான், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் பி.பேர்ட்நிஜாந் ஆகியோர் கலந்து கொள்வர்.

இவ் இறுதிப் போட்டியில் புங்குடுதீவு பாராதி விளையாட்டுக் கழக அணியும் வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளன. (ஜ-5)

# போதைப்பொருள் அச்சுறுத்தலை உடன் கட்டுப்படுத்த வேண்டும்

## பொலிஸாருக்கு பாதுகாப்புச் செயலர் வலியுறுத்து



(கொழும்பு)

அதிகரித்துள்ள போதைப் பொருள் அச்சுறுத்தலை உடனடியாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன பொலிஸாரை வலியுறுத்தினார்.

கூட்டு முயற்சி மற்றும் சிறந்த திட்டமிடுதல் மூலம் போதைப் பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைக் கட்டுப்படுத்த சிறப்பு நடவடிக்கைகளை தொடங்குவதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த பாதுகாப்புச் செயலாளர், சட்டவிரோத ஆக்கிரமிப்பு, மிரட்டி பணம் பறித்தல், தனியார் நிலங்களை கட்டாயமாக கையகப்படுத்துதல், சட்டவிரோத மணல் அகழ்வு, போக்குவரத்து நெரிசல் மற்றும் பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் ஆகியவற்றில் ஈடுபட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தினார்.

மேலும் ஒரு பாதுகாப்பான தேசத்தையும் சட்டத்தை மதிக்கும் சமூகத்தையும் உருவாக்குவதே ஜனாதிபதியின் எதிர்கால திட்டம் என்றும் பாதுகாப்புச் செயலாளர் பொலிஸாருக்கு எடுத்துக் கூறினார்.

அத்தோடு அந்த குற்றவாளிகளை கைது செய்வதற்கும் ஒழுங்கமைக்கப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கும் பொலிஸாருக்கு மேலதிக உதவி தேவைப்பட்டால் விசேட குழுக்கள் மற்றும் முப்படைகளை வழங்கத்தயார் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 115 | 120 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 250 | 400 |
| தக்காளி | 250 | 350 | 350 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 80 |
| கோவா | 160 | 160 | 160 | 120 | 160 |
| கரட் | 350 | 350 | 400 | 250 | 500 |
| பூசணி | 80 | 60 | 60 | 100 | 120 |
| புடோல் | 120 | 120 | 140 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 90 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300-400 | 250 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 120 | 150 | 120 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 160 | 120 | 120 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 | 90 | 100 |
| பயற்றங்காய் | 150 | 150 | 140 | 180 | 200 |
| லீக்ஸ் | 300 | 350 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 100 | 180 | 120 | 220 | 120 |
| கறிமிளகாய் | 250 | 280 | 280 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 1000 | 550 | 1000 |
| போஞ்சி | 200 | 220 | 220 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | — | 80 | 80 |
| கீரை -1பிடி | 50 | 50 | 30-40 | 30 | 40 |
| தேசிக்காய் | 40 | 50 | 50 | 50 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 35-50 | 55 | 40-60 |
| இராசவள்ளி | 180 | 200 | 200 | 150 | 200 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 240 | 230 | 280 |
| முள்ளங்கி | 50 | 70 | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | — | 110 | 120 |

# வறுமையை ஒழிக்க புதிய செயலணி

## ஜனாதிபதி கோட்டா நடவடிக்கை

(கொழும்பு)

**நாட்டிலிருந்து வறுமையை ஒழிக்க மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக 12 பேர் அடங்கிய செயலணியொன்று உருவாக்கப்பட்டது. ஓய்வு பெற்ற பிரதி திறைசேரி செயலாளர் எஸ்.பிதிவாரத்ன தலைமையிலான இந்தச் செயலணி ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவால் உருவாக்கப்பட்டது.**



ஓய்வுபெற்ற அமைச்சுக்களின் செயலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், விசேட வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட துறைகளை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் இந்த செயலணிக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தச் செயலணி மூலம் குறைந்த வருமானத்தை பெறும் மக்களின் பிரச்சினைகள் ஆராயப்படவுள்ளன.

சுகாதாரம், போசாக்கான உணவுகளை உட்கொள்ளச் செய்தல் மற்றும் சுற்றாடலைப் பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகள் இந்தச் செயலணியின் முக்கிய செயற்பாடுகளாகும்.

அத்துடன் கிராம மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதலும் இந்தப் புதிய ஜனாதிபதி செயலணியின் பிரதான நோக்கமாகும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது. (இ-7)

## தேசப்பற்றாளரின் புதல்வி பயன்படுத்திய வார்த்தைகள் வேதனைக்குரியவை-திலங்க



(கொழும்பு)

தேசப்பற்று கொண்ட பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் புதல்வி பாராளுமன்றத்தில் பேசிய வார்த்தைகள் கவலையளிப்பதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபால, பொதுத் தேர்தலில் சின்னம் தொடர்பில் எவ்வித முரண்பாடுகளும் ஏற்படாது என்றும் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் திலங்க சுமதிபாலவின் இல்லத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசப்பற்றாளர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் புதல்வி ஹிருணிக்கா சபையில் பயன்படுத்தியிருக்கும் வார்த்தைகள் மிகவும் கவலைக்குரியவை.

நான் ஹிருணிகாவின் தந்தையுடன் இணைந்து சேவையாற்றிய ஒருவன். அவர் இந்த நாட்டிற்கு ஆற்றிய சேவைகள், நன்மைகள் பற்றிப் பெரிதும் அறிந்துள்ளேன்.

அவரின் வழியில் வந்தவர் இவ்வாறான வார்த்தைகளைப் பிரயோகித்திருந்தது எல்லோருக்கும் அதிர்ச்சியளித்திருந்தது.

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர அக்காலப்பகுதியில் இடதுசாரி கொள்கைகளுடன் இணைந்து எம்முடன் செயற்பட்டார் எனவும் அவர் நினைவுபடுத்தினார்.

மேலும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளன.


மேலும் 14 சகோதர கட்சிகளுடன் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளோம். இது ஜனாதிபதி தேர்தல் அல்ல பொதுத் தேர்தல். ஜனாதிபதித் தேர்தல் போன்று தனியான ஒரு சின்னம் வழங்கப்படுவதில்லை.

பொதுத் தேர்தல்களில் நாங்கள் 15 மாவட்டங்களில் வெற்றிலை சின்னத்துடன் போட்டியிட்டிருந்தோம். 7 மாவட்டங்களில் கைச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தோம். சின்னம் தொடர்பில் எவ்வித முரண்பாடுகளும் ஏற்படாது.

1994 ஆம் ஆண்டு கதிரை சின்னத்தில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டிருந்தோம். 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் வெற்றிலை சின்னத்தில் போட்டியிட்டிருந்தோம். நாங்கள் அனைத்து கட்சிகளுடனும் ஒன்றிணைத்து செயற்படுவோமே தவிர சின்னம் தொடர்பில் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள மாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## புதிய அரசு பதவியேற்றபின் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்

### எரான் தகவல்



(கொழும்பு)

புதிய அரசாங்கம் பதவியேற்று 60 நாட்களில் பல ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நல்லாட்சியின் நான்கரை வருட காலப்பகுதியில் எந்தவொரு ஊடகவியலாளரும் நாட்டை விட்டு வெளியேறவில்லை.

ஆனால் புதிய அரசாங்கம் பதவியேற்று 60 நாட்களில் ஊடகத்துறையுடன் தொடர்புடைய பலர் நாட்டை விட்டு வெளியேறினர்.

தற்போதைய அரசாங்கம் மக்களைப் போலவே ஊடகங்களையும் அச்சுறுத்தி நாட்டுக்குள் ஒழுக்கத்தை நிலைநாட்ட முயல்கின்றது.

ஆனால் சட்டத்தை உரிய முறையில் செயற்படுத்தினால் மாத்திரமே ஒழுக்கத்தை ஏற்படுத்த முடியும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஆட்கொல்லி வைரஸ் பரவுவதைத் தடுக்க விசேட வைத்தியபீடம்

(கொழும்பு)

உலகில் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள 'கொரோனா ஆட்கொல்லி வைரஸ்' நோய்த்தொற்று நாட்டுக்குள் பரவுவதைத் தடுப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சுகாதார சேவைகள் அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ் விடயம் தொடர்பில் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் என்னிடம் கேட்டறிந்து கொண்டதுடன், நோய்த்தொற்று நாட்டுக்குள் ஊடுருவாமல் தடுப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறு பணிப்புரை விடுத்தனர்.

இதற்கமைய நாட்டுக்குள் வரும் விமானப் பயணிகளுக்கு இந் நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அது குறித்து விமான நிலையத்திலுள்ள விசேட சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். இதற்காக விமான நிலையத்தில் விசேட வைத்திய பீடமொன்று அமைக்கப்பட்டது.

'கொரோனா வைரஸ்' நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் நாட்டில் இருப்பது குறித்து இதுவரை எந்தவிதமான தகவல்களும் பதிவாகவில்லை. 'கொரோனா வைரஸ்' நோயினால் பாதிக்கப்பட்ட சீனக் குழந்தையொன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும், அக் குழந்தை சாதாரண காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தமை பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது என்றார்.

இதேவேளை சீனா உள்ளிட்ட நாடுகளில் பரவி வரும் 'கொரோனா வைரஸ்' தாக்கத்திலிருந்து பயணிகளையும் சேவையாளர்களையும் பாதுகாப்பதற்காக ஸ்ரீலங்கன் விமான சேவைகள் பல பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

இதனடிப்படையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் விமானப் பணியாளர்கள் மற்றும் ஏனைய சேவையாளர்களுக்கு விமானத்திலும் விமான நிலையத்திலும் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கனுடன் தொடர்புபட்ட ஏனைய விமான சேவைகள், சுகாதார அமைச்சு மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள சுகாதார அதிகாரிகளுடனும் ஸ்ரீலங்கன் விமான சேவைகள் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

சீனாவில் கொரோனா வைரஸ் கடும் அச்சுறுத்தல்கள் காரணமாக இதுவரை 25 பேர் உயிரிழந்தனர். சீனாவின் ஹுவாங்காங்க் நகரில் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இலங்கை மாணவர்களுடன் முடிந்த வரை தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பீஜிங் நகரிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அறித்துள்ளது.

'கொரோனா வைரஸ்' பரவியதன் காரணமாக சீனாவின் ஹுவாங்காங்க் நகரத்தை முழுமையாக மூடுவதற்கு அந்நாட்டு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு கல்வி பயிலும் 44 இலங்கை மாணவர்கள் தொடர்பில் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஹுவாங்காங்க் நகரில் உள்ள இலங்கை மாணவர்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அந்த மாநில அரசாங்கத்திடம் இலங்கை அரசாங்கம் கோரியுள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். (இ-7)

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2020- 12.02.2020



விகாரி வருட தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சனிபகவான் மாதத் தொடக்கத்தில் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு இலாபாதிபதி குருவும் இணைந்திருக்கிறார். எனவே, பொருளாதார பற்றாக்குறை அகலும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். தொட்டது துலங்க, துணையாக இருப்பவர்கள் உதவி செய்வர். செய்யும் தொழிலில் ஏற்படும் சேதாரங்கள் குறைந்து ஆதாயங்கள் அதிகரிக்கும். தேங்கிக் கிடந்த வர்த்தகம் இனி வெற்றி நடைபோடும். வளர்ச்சிக்கு முதலீடு செய்ய, நண்பர்கள் உதவியாக இருப்பார்கள். பழைய கடன்கள் பைசலாகும்.

மாதத் தொடக்கத்தில் தொழில் ஸ்தானாதிபதி செவ்வாய், சொந்த வீட்டான விருச்சிக ராசியில் சஞ்சரிக்கிறார். இலாப ஸ்தானமும், தொழில் ஸ்தானமும் பலம் பெற்றிருப்பதால் உங்களுக்கு இம்மாதம் ஒரு இனிய மாதமாக அமையும். உடன்பிறப்புகள் உங்களுக்கு உதவிகரமாக இருப்பர். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். 'உற்சாகத்தோடு பணி புரிந்து உன்னத நிலையை அடைய வேண்டும்' என்ற எண்ணத்தை உருவாக்கிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர்பதவிகள் தேடி வரலாம். அது மட்டுமல்லாமல் சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவலும் உண்டு.

உங்கள் இராசிக்கு 12ஆம் இடத்தில் சூரியனும், புதனும் இணைந்து புத-ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார்கள். உங்கள் இராசிக்கு பஞ்சம, அஷ்டமாதிபதியாக விளங்குபவர் புதன், அவர் 12 இல் சஞ்சரிப்பதால் 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கு ஏற்ப பல நல்ல பலன்கள் உங்களுக்கு வந்து சேரும். பொதுவாக தடையாக இருந்த சில காரியங்கள் இப்பொழுது தானாக நடைபெறும். இடையிடையே ஏற்பட்ட மன வருத்தங்கள் மாறும். அரசு வழி அனுகூலங்கள் கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்காக கடன் கேட்டு வங்கிகளில் விண்ணப்பித்திருந்தால், நல்ல பதில் உங்களுக்கு கிடைக்கும்.

பஞ்சம ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் பிள்ளை களால் சில விரயமுண்டு. அது கல்வி சம்பந்தமாகவும் இருக்கலாம், கடல் தாண்டிச் சென்று பணிபுரியும் வாய்ப்புக்காகவும் இருக்கலாம். அல்லது கல்யாணம் போன்ற சுப நிகழ்வுகள் நடப்பதற்காக எடுக்கும் முயற்சிக்காகவும் இருக்கலாம். அதே சமயம் பிள்ளைகளை உங்கள் மேற் பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. பஞ்சம ஸ்தானத்தை குரு பார்ப்பதால் பூர்வீக சொத்துக்களில் நடைபெற்ற பஞ்சாயத்துக்கள் உங்களுக்கு சாதகமாக முடியலாம்.

இம்மாதம் தைப்பூசம் வருவதால் அன்றைய தினம் முருகப்பெருமானை வழிபட்டு வாருங்கள். தை அமாவாசையன்று முன்னோர்களை வழிபடுங்கள். அதனால் உங்கள் வளர்ச்சி அதிகரிக்கும்.

### நண்பர்களால் நல்ல தகவல்கள் கிடைக்கும்

கும்ப புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு பஞ்சம, அஷ்டமாதிபதியான புதன் மாதத் தொடக்கத்தில் விரய ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும், ஜனவரி 28 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இக்காலம் உங்களுக்கு இனிய காலமாக அமையும். செலவு நடைகள் கூடினாலும், வரவுகள் அதற்கு ஏற்ற விதத்தில் வந்து சேரும். அதே நேரத்தில் சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல்கள் ஏற்படலாம். நோய்க்கான அறிகுறி தோன்றுபொழுதே மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது.

உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசியில் சஞ்சரித்து வரும் சுக்கிரன், பெப்ரவரி 4 ஆம் திகதி மீன இராசிக்கு செல்கிறார். அது சுக்கிரனுக்கு




உச்ச வீடாகும். உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். சுக ஸ்தானம் மற்றும் பிதுர் ராஜ்ஜிய ஸ்தானத்திற்கு அதிபதியான சுக்கிரன் உச்சம் பெறும் பொழுது, நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். தாய்வழி ஆதரவு உண்டு. வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். தந்தைவழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். பங்காளி பகை மாறும். இடமாற்றம், வீடு மாற்றங்கள் போன்றவை நன்மை தரும் விதத்தில் அமையும். கட்டிய வீட்டை பழுது பார்ப்பது அல்லது வீட்டை விரிவு செய்து கட்டுவது போன்றவற்றில் ஆர்வம் செலுத்துவீர்கள்.

தனுசு செவ்வாய் சஞ்சாரம்

விருச்சிக இராசியில் சொந்த வீட்டில் சஞ்சரித்து வரும் செவ்வாய், பெப்ரவரி 9 ஆம் திகதி தனுசு இராசிக்கு செல்கிறார். அங்குள்ள குருவோடு இணைந்து குரு-மங்கள யோகத்தை உருவாக்குகிறார். எனவே, உங்களுக்கோ உங்களைச் சார்ந்த குடும்பத்தில் உள்ளவர்களுக்கோ இதுவரை கல்யாணம் பேசி விட்டுப் போயிருந்தால், இப்பொழுது அது கைகூடும். சுபச் செலவுகள் அதிகரிக்கும் நேரம் இது. மணவிழா, மணிவிழா, பவள விழா, பெண் குழந்தைகளின் பூப்புனித நீராட்டு விழா போன்ற சுப நிகழ்வுகள் அடுக்கடுக்காக நடைபெறும் வாய்ப்பும் ஒரு சிலருக்கு உண்டு. எனவே திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். இம்மாதம் சனிக்கிழமைதோறும் வாலில் மணி கட்டிய அனுமனை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான
சிறப்புப்பலன்கள்

இம்மாதம் உங்களுக்கு யோகமான மாதமாகும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதியவர்கள் அறிமுகமாவர். கணவன் - மனைவிக்குள் திருப்தியான உறவு ஏற்படும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டு மற்றவர்களுக்கு முன் உதாரணமாக வாழ்க்கை நடத்துவீர்கள். ஆடை - ஆபரணங்கள் வாங்கி மகிழும் வாய்ப்பு கிட்டும். பிள்ளைகளால் திடீர் விரயம் உண்டு. தாய் மற்றும் சகோதரத்தின் ஒத்துழைப்புகள் மனத்திருப்தி தரும். சுக்கிர பெயர்ச்சிக்கு பிறகு வருமானம் உயரும். பணிபுரியும் பெண்களுக்கு வெளி மாநிலங்கள் அல்லது வெளிநாட்டு யோகம் கூட உண்டு. திருமணத் தடை அகலும். தெய்வ பிரார்த்தனைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்தில் மதிப்பும் மரியாதையும் உருவாகும். குரு வழிபாடும், ஆஞ்சநேயர் வழிபாடும் குதூகலத்தை வரவழைத்துக் கொடுக்கும்.

**ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்**



விகாரி வருடம் தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது, மாதத் தொடக்கத்திலேயே குரு பகவான் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு சனியும், கேதுவும் இணைந்திருக்கிறார்கள். '10இல் குரு வந்தால் பதவி பறிபோகும்' என்பது பழமொழி. ஆனால் உங்கள் இராசியை பொறுத்தவரை, உங்கள் இராசிநாதனாகவும், 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குருபகவான் நல்ல மாற்றங்களையே வழங்குவார். சனிபகவான் உங்கள் இராசிக்கு லாபாதிபதியாகவும், விரயாதிபதியாகவும் விளங்குபவர். அவரோடு குரு இணையும் பொழுது தொழில் வளர்ச்சியில் எந்த பாதிப்புகளும் ஏற்படாது என்றாலும் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாகவே இருக்கும். தொழில் பங்குதாரர்களை நம்பி எதையும் செயல்படுத்த முடியாது. "பங்கை பிரித்துக் கொள்வோம் அல்லது நாங்களே முழுமையாக எடுத்து நடத்துகிறோம்" என்று வாதிடுவர்.

சனிப்பெயர்ச்சி வரை நீங்கள் எந்த முடிவும் எடுக்க வேண்டாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் ஊர் மாற்றங்களைக் காண்பர். எதிர்பாராத விதத்தில் நீண்ட தூரத்திற்கு மாறுதல்கள் கிடைக்கலாம். 'பணி நிரந்தரமாகவில்லையே' என்ற கவலை இனி மாறும். திசாபுத்தி பலமிழந்திருந்தால், மேலிடத்து நிர்ப்பந்தத்தின் பேரில் பதவி இறக்கம் கூட ஏற்படலாம். எனவே, இதுபோன்ற காலங்களில் உத்தியோகத்தில் உள்ளவர்கள் மிகுந்த கவனமுடன் நடந்துகொள்ள வேண்டும். உங்களிடம் ஒப்படைத்த பொறுப்பை யாரிடமேனும் கொடுத்தால், அது சரியாக நிறைவேறாமல் சங்கடத்தில் ஆழ்த்தும். அதனால் வீண் பழிகள் கூட வரலாம்.

இலாப ஸ்தானத்தில் சூரியன், புதனோடு இணைந்து புத - ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். எனவே, மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும். வெளிநாடு செல்லும் முயற்சியில் ஒரு சிலர் ஆர்வம் காட்டுவர். ஜலராசி பலம் பெற்றிருக்கும் ஜாதகம் அமைந்தவர்கள் அல்லது பயண வாய்ப்புகள் ஏற்படும் விதத்தில் திசா புத்தி அமையப் பெற்றவர்கள், வேலை காரணமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். ஆனால் அது நல்ல கம்பனி தானா? என்பதை ஆராய்ந்து சேர்ந்து கொள்வதே உத்தமம். என்னயிருந்தாலும் 10இல் குரு இருக்கும் பொழுது, மன பயம் அதிகரிக்கத்தான் செய்யும். எனவே குரு பீடங்களுக்கு சென்று சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள். தைப்பூச திருநாளில் முருகப் பெருமானை தரிசியுங்கள். சண்முக கவசம் பாடி வழிபட்டால் கவலைகள் தீரும்.

### அவசரத்தை தவிர்த்தால் அமைதி கிடைக்கும்

கும்ப புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் ஜனவரி 28 ஆம் திகதி கும்ப இராசிக்கு வருகிறார். கும்ப இராசி உங்கள் இராசிக்கு 12 ஆம் இடமாகும். 'கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம், மறைவிடத்திற்கு வரும்பொழுது யோகத்தை செய்யும்' என்பது விதி. எனவே அந்த அடிப்படையில் இப்பொழுது நல்ல பலன்கள் நடைபெறும். சுப செய்திகள் வந்தவண்ணமாக இருக்கும். கல்யாண முயற்சிகள் கைகூடும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் மங்கல நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்துவீர்கள். பொதுநல ஈடுபாட்டில் இருப்பவர்களுக்கு, புதிய பொறுப்புகள் கூட கிடைக்கலாம்.

உச்ச சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், சுக்கிரன். அவர் பெப்ரவரி 4 ஆம் திகதி உங்கள் இராசியிலேயே உச்சம் பெறுகிறார். எனவே சகோதர வழி ஒத்துழைப்போடு ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். சென்ற மாதத்தில்




நடைபெறாத சில காரியங்கள் இப்பொது நல்ல விதமாக நடைபெறும். இடமாற்றம், ஊர் மாற்றம், வீடு மாற்றங்கள் எளிதில் அமையும். கொடுத்த கடன்கள் வசூலாகலாம். கடமையில் இருந்த தொய்வு அகலும். தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். பிள்ளைகளுக்கான கல்யாண சீர்வரிசை பொருட்கள் வாங்கும் வாய்ப்பு உருவாகும்.

தனுசு செவ்வாய் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் பெப்ரவரி 9 ஆம் திகதி தனுசு இராசிக்கு செல்கிறார். தொழில் ஸ்தானத்தில் தனாதிபதி செவ்வாய் சஞ்சரிக்கும்பொழுது, எதிர்பார்த்த இலாபம் எளிதில் கிடைக்கும். நண்பர்களின் ஆதரவோடு வளர்ச்சி காண்பீர்கள். புதிய முதலீடுகள் செய்ய, பெற்றோர்கள் உங்களுக்கு துணையாக இருப்பார்கள். பூமி வாங்கும் யோகம் சிலருக்கு உண்டு. என்றைக்கோ வாங்கிப் போட்ட இடம், இப்பொழுது பல மடங்கு விலைக்கு விற்பனையாகி, அதன் மூலம் இலாபம் கிடைக்கலாம். என்ன இருந்தாலும் செவ்வாய் குருவோடு சேர்ந்து குரு -மங்கள யோகத்தை உருவாக்குவதால் தடைப்பட்டு வந்த சுப நிகழ்வுகள் அனைத்தும் தானாக நடைபெறும். இம்மாதம் சதுர்த்தி விரதமிருந்து விநாயகப் பெருமானை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான
சிறப்புப் பலன்கள்

இம்மாதம் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படும். புதிய திருப்பங்களும் ஏற்படும். ஆரோக்கியத்தில் இருந்த கவலை அகலும். அன்றாடப் பணிகளை உற்சாகத்துடன் செய்து முடிப்பீர்கள். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். குழப்பங்களில் இருந்து விடுபடுவீர்கள். இடமாற்றம், வீடு மாற்றங்கள் எண்ணியபடியே நடைபெறும். கடன்கள் பாதிக்கு மேல் குறையும். கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். பெற்றோர் வழி ஒத்துழைப்பும் உண்டு. பிள்ளைகள் வழியிலும் நல்ல தகவல் கிடைக்கும். சகோதர சச்சரவுகள் அகலும். தன வரவு திருப்தி தரும். பதவி மாற்றங்கள் பரிசீலனையில் இருக்கும். சுக்கிர பெயர்ச்சிக்கு பிறகு பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். வாகனங்கள் வாங்கும் யோகமுண்டு. விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். பிரதோஷ வழிபாடு உங்களுக்கு பெருமை சேர்க்கும்.

(முற்றும்)

# ஐ.தே.க.முழுமையாகப் புறக்கணிக்கப்படும்
# சஜித் பிரேமராவது வெறும் கனவு

## கனக ஹேரத் உறுதி

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை பிரத மராக தெரிவு செய்ய ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் தற்போது மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் வெறும் கனவாகவே அமையும். பொதுத் தேர்தலில் அந்தக் கட்சியை மக்கள் முழுமையாகப் புறக்கணிப்பார்கள் என துறைமுக அபிவிருத்தி இராஜா ங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார். பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் தொடர்ந்து இணக்கமாக செயற்பட முடியாது என்று எதிர்த்தரப்பினர் தற்போது தவறான அரசியல் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். பிரதமராக சஜித் பிரேமதாஸ தெரிவு செய்யப்பட்டு ஜனாதிபதியுடன் இணைந்து பலமான அரசாங்கத்தை கொண்டு செல்லவுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியினர் குறிப்பிடுவது நகைப்பிற்குரியது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை பிரதமராக நியமிக்க ஐக்கிய தேசியக் கட்சியினர் முன்னெடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வெறும் கனவாகவே அமையும். ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை புறக்கணித்த மக்கள் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியையும் முழுமையாகப் புறக்கணிப்பார்கள். ஜனாதிபதி கோத்தபாய ராஜபக் ஷவுக்கும் பிரதமர் மகிந்த ராஜபக் ஷவுக்கும் இடையில் எவ்வித அதிகார போட்டி தொடர்பான முரண்பாடுகளும் தோற்றம் பெறவில்லை.

இருவரும் ஒன்றிணைந்தே சிறந்த அரச நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்கின்றார்கள். பிரதமர் பதவிக்கு மஹிந்த ராஜபக் ஷ பொருத்தமானவர்



என்பதை பெரும்பான்மை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடை யில் அதிகார முரண்பாட்டை தோற்று வித்துள்ள அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும். இதற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான ஆதரவு அவசியமாகும். அரசியல் ரீதியில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு நிலையான பாராளுமன்றத்தை தோற்றுவிக்க வேண்டுமாயின் மக்கள் பெரும்பான்மையான ஆதரவை ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுக்கு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கைப் பெண்ணுக்கு கொரோனா வைரஸா?
## இத்தாலியில் பரிசோதனை

இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவர் கடும் காய்ச்சல் மற்றும் கடுமையான சுவாசக் கோளாறால் இத்தாலியில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து கொரோனா வைரஸ் தொற்று நோய் குறித்த மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டார்.

63 வயது இலங்கை பெண் இத்தாலியில் நேபிள்ஸ் நகரத்திலுள்ள கோட்டுக்னோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக இத்தாலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனவில் வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று குறித்து பெண் சோதனை செய்யப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த பெண் கடந்த 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இலங்கையிலிருந்து இத்தாலிக்கு சென்றிருந்த நிலையிலேயே அவருக்கு நோயின் அறிகுறிகள் காட்டத் தொடங்கியதாக தெரிய வருகிறது. (இ-7)

# உலகை அச்சுறுத்தும் கொரோனா
## அரசிடம் சஜித் முக்கிய கோரிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் இலங்கைக்குள் பரவாத வகையில் அரசாங்கம் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) 27ஃ2 இன் கீழ் விசேட கூற்றை முன்வைத்து, கொரோனா வைரஸ் தொடர்பாக அறிவித்தல் விடுத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது நாட்டில் சில காலத்திற்கு முன்னர் சார்ஸ் மற்றும் மேர்ஸ் என்ற வைரஸ்கள் பரவியன. இந்நிலையில் தற்போது கொரோனா என்ற வைரஸ் காரணமாக சீனாவில் இரண்டு நகரங்கள் முற்றாக முடங்கியுள்ளன.

இந்த வைரஸ் பாதிப்பு ஆபத்தான நிலைக்கு வந்துள்ளதாக கூறப்படுகின்றது. இது இப்போது ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் வரையில் பரவியுள்ளது. இந்நிலையில் இந்த மாதம் 25ஆம் திகதி முதல் பெப்ரவரி 8ஆம் திகதி வரையில் சீன புத்தாண்டு காலமும் ஆரம்பிக்கப்படுகின்றது.

இந்நிலையில் எமது நாட்டில் 2014 முதல் 2016ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி புள்ளி விபரங்களுக்கமைய சீனாவிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை விட தற்போது வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்கால் அதிகரித்துள்ளது.

70 ஆயிரம் பேர் வரையில் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். தற்போது சீனாவில் குறித்த வைரஸ் பரவியுள்ள நிலையில், சீன புத்தாண்டு காலத்தையொட்டியதாக சீன சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் எமது நாட்டுக்கு வரலாம்.

இதனால் இந்த விடயம் தொடர்பாக அரசாங்கமும் சுகாதார அமைச்சரும் உரிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றேன்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சகல ஊழியர்களுக்கும் காப்புறுதி
## இராஜாங்க அமைச்சர் சி.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

புகையிரத திணைக்களத்தில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் காப்புறுதியை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க தெரிவித்தார்.

அதேபோல் புகையிரத ரல்வே ஊழியர்களின் பிள்ளைகளுக்காக விசேட புலமை பரிசில் வழங்கும் வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துக்கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நூலகத்துறையில் புதுமைகளைப் புகுத்தி உயர் சிந்தனைகளுக்கு வழிகாட்டிய ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம்



ஈழத்து நூலக வான்பரப்பில் வட்டமிட்டு ஒளியூட்டிய ஒப்பற்றதொரு ஒளிநிலா அண்மையில் மறைந்துவிட்டது. யாழ்ப்பானப் பல்கலைக்கழக நூலகத்தின் பிரதம நூலகராய் பிறரும் வியந்து போற்றும் வண்ணம் பணிபுரிந்த ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார்.

ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்களுக்கு நூலகவியல் மேலிருக்கும் அதீத ஆர்வத்திற்கும், அளப்பரிய பற்றுணர்வுக்கும், துறைசார் அனுபவ அறிவுக்கும், நூலகத்துறையின் மீது அவர்கொண்டிருந்த எதிர்கால கரிசனைக்கும் சாட்சியாகவும் சான்றாகவும் , அவரெழுதிய நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் விளங்குகின்றன.

யாழ்ப்பாணத்தின் இணுவில் என்னும் ஊரில் அருளானந்தம் அவர்களுக்கு 1961ம் ஆண்டு சித்திரை மாதம் எட்டாம் திகதி ஸ்ரீகாந்தலட்சுமி அவர்கள் புதல்வியாகப் பிறந்தார்.

பாடசாலைக் கல்வியை இராமநாதன் மகா வித்தியாலத்தில் கற்றார். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் இணைந்து பொருளியல் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார்.

அறிவுச்சாளரம்நோக்கி சமூகத்தை அணிவகுக்க வைக்க வேண்டும் என்ற வைராக்கியம் உந்தப்பெற நூலகவியல் கல்வியில் கால்பதித்தார். 1989ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் உதவி நூலகராக இணைந்தார்.

அதன் பின்னர் 2012ம் ஆண்டு பிரதம நூலகராக பதவியுயர்வு பெற்று, இறக்கும்வரை நூலகத்தை திறம்பட வழிநடாத்தினார். நூலகவியல் துறையில், தனது பிரதான மையமான யாழ். பல்கலைக்கழக நூலகத்திலும் ,பல்கலைக்கழகத்திற்கு வெளியேயுமான இரு தளங்களிலும் அவரது நூலகப்பணி சிறந்து விளங்கியதனைக் காணலாம்.

நூலகங்களை அறிவுக் கோயில்களாகவே அவர் கருதினார். கோயிலொன்று அருள் பொழியும் தலமாக அமைவதோடு, கலை நயங்களையும் பேணிப் பாதுகாத்து அடுத்த சந்த திக்கு எவ்வாறு கடத்துமோ, அதுபோலவே நூலகமென்னும் கோயிலும் அறிவென்னும் பேரருளை வழங்குவதோடு, அரும் பொருட்கள் சேகரிப்பு ஊடாக முன்னைய காலத்தையும் காட்சிப்படுத்தும் மையங்களாக விளங்க வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருந்தார்.

இதற்காக இவர் மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டார். பல்கலைக்கழக நூலகத்தை 24 மணிநேரமும் திறந்து , அறிவுப் பசிக்கு இல்லையென்னாது வழங்கும் அமுதசுரபிகளாக நூலகத்தை செயற்பட வைக்கவேண்டும் என்பரது அன்னாரது ஆழ்மன ஆசையாகும்.

ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்கள் நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் நிறுவுனராவர். 2005ம் ஆண்டு இந் நிறுவகம் ஸ்தாபிக்கப்பட்டது. நூலக விழிப்புணர்வு நிறுவகமென்பது, இலங்கையில் நூலகங்களில் பணிபுரிபவர்களையும், நூலகத்துறையின் மீது ஆர்வம்கொண்டு இயங்குபவர்களையும் ஒருங்கிணைத்து, அறிவுசார் தளத்தில் அறிவுசார் செயற்பாடுகளோடும் நூலகவியல் சார் வழிப்படுத்தலோடும் பயணிக்கவைப்பதாகும்.

நூலகவியல் நோக்கில் அன்னார் ஆற்றிய இன்னொரு அருந்தொண்டு அறிதூண்டல் மையமாகும். அறிதூண்டல் மையத்தின் அலுவலகத்தை தன்வீட்டிலேயே அமைத்து அறிவுப்பணி புரிந்தார். அறிதூண்டல் மையமூடாக நூற்வாசிப்பு , அறிவுடையோர் கலந்துரையாடல்கள், அனுபவப்பகிர்வுகள் போன்றபல நிகழ்வுகளை நிகழ்த்தினார்.

ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்கள் இலங்கை நூலகச் சங்கத்தின் தலைமைப்பதியை வகித்த பெருமைக்குரியவராவர். 2017ம் ஆண்டு இலங்கை நூலகச் சங்கத்தின் தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

தமிழர் ஒருவர் இந்த பதவிக்கு தெரிவு செய்யப் பட்டமை இதுவே முதல் தடவையாகும். நூலகவியலில் கொண்டிருந்த ஆழ்ந்த புலமையும் அபரிமிதமான ஆற்றலும் இவரை இப்பதவிக்கு பொருத்தமானவராக இனங்காட்டியது.

இவரது நூலகப் பணிகள் எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போன்று, இவரெழுதிய நூலகவியல்சார் நூல்கள் காணப்படுகின்றன. நூலகவியல் துறையில் கல்விபயிலும் மாணவர்களுக்கும், கற்பிக்கும் ஆசான்களுக்கும் ,நூலகத்துறையில் தொழில்நிமித்தம் பயணிப் பவர்களுக்கும் இந்நூல்கள் பெரும் வரப்பிரசாதகமாகவுள்ளன.

சு.நவநீத கிருஷ்ணன்

### பல இலட்சம் பெறுமதியான மின்பிறப்பாக்கிகளை

# 6 வருடங்களாக பூட்டி வைத்துள்ள கரைதுறைப்பற்று பிரதேச சபை






(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகர மத்தியில் அமைந்துள்ள பிரதான பொதுச்சந்தையின் பாவனைக்காக US AID நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட பின்பிறப்பாக்கி இயந்திரத் தொகுதி கடந்த 6 வருடங்களுக்கும் மேலாக சந்தை வியாபாரிகளின் பாவனைக்கு வழங்கப்படாது பூட்டியே வைக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொதுச்சந்தை வியாபாரிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் உள்ள இந்த சந்தையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகவும் வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். இந்த நிலைமை குறித்து சந்தை வியாபாரிகள் மேலும் தெரிவிக்கையில்,

போரால் முற்றாக அழிவடைந்த பொதுச்சந்தை கடந்த 2013 ஆம் ஆண்டு US AID நிறுவனத்தால் 5 கோடியே நாற்பது இலட்சம் ரூபா செலவில் அமெரிக்க மக்களின் அன்பளிப்பாக அதிநவீன வசதிகளுடன் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பராமரிப்பில் கையளிக்கப்பட்டது. அன்றிலிருந்து பிரதேச சபை சட்ட விதிகளுக்கு அமைவாக வாடகை செலுத்தி வியாபாரம் செய்து வருகின்ற போதிலும் வாடகையைப் பெற்றுக் கொள்ளும் பிரதேச சபை பெறுமதியான முறையில் தொண்டு நிறுவனத்தால் நன்கொடையாக வழங்கப்பட்ட குறித்த பொதுச்சந்தையை முறையாக பராமரிப்பதில்லை எனக் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மேலும் குறித்த சந்தையோடு இணைந்து மின்சாரம் இல்லாது போகின்ற நேரத்தில் மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்காக பல இலட்சம் ரூபா செலவில் இரண்டு பெறுமதியான புதிய மின்பிறப்பாக்கிகள் அடங்கிய தொகுதி அமைக்கப்பட்டு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் பராமரிப்பில் வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட நாளிலிருந்து அந்த பின்பிறப்பாக்கிகள் தொகுதி அடங்கிய அறை பூட்டியே வைக்கப்பட்டுள்ளதால் மின்சாரம் தடைபடுகின்ற நாட்களில் சந்தை வியாபாரிகள் சிரமங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவித்துள்ளனர். இவை பயன்படுத்தப்படாது பூட்டியே வைக்கப்பட்டுள்ளதால் இயந்திரத் தொகுதியும் பராமரிப்பின்றி பழுதடைந்து செல்லும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளது. பிரதேச சபைக்கு போதிய வருமானம் இல்லை, அபிவிருத்திகளை செய்ய முடியாது எனக் கூறும் கரைதுறைப்பற்று பிரதேச சபை பல கோடி ரூபா பெறுமதியில் நன்கொடையாக வழங்கிய குறித்த மக்களின் சொத்தை ஒழுங்காக பராமரிப்பதில்லை எனவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் கனகையா தவராசா குறித்த மின்பிறப்பாக்கி கலாசார மண்டபத்தின் பாவனைக்காகவே வைக்கப்பட்டுள்ளதாகவும் சந்தைக்கு மின்சாரம் இல்லாது போனால் இந்த மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்த முடியாது அதற்கான ஏற்பாடுகள் இல்லை எனவும் தெரிவித்தார். இருந்த போதிலும் குறித்த மின்பிறப்பாக்கிகள் கலாசார மண்டப பாவனைக்குக்கூட இது வரையில் திறந்து பாவிக்கப்படவில்லை என்பதோடு பொதுச் சந்தையின் மின்சார கட்டமைப்பிலேயே இணைக்கப்பட்டு சந்தை வளாகத்திலே சந்தையின் பாவனைக்காக பயன்படுத்தக்கூடிய முறையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9)




# பேருந்து-டிப்பர் விபத்து

### 11 பேர் படுகாயம்



(தருமபுரம்)

முரசுமோட்டை பகுதியில் பயணித்த தனியார் பேருந்துடன் டிப்பர் வாகனம் மோதி விபத்துக்குள்ளானதில் 11 பேர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். நேற்று நண்பகல் பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி தனியார் பேருந்து ஒன்று சென்றுள்ளது.

முரசுமோட்டைப் பகுதியில் பின்னால் சென்ற டிப்பர் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து தனியார் பேருந்தை மோதியது. இந்த விபத்தில் டிப்பர் சாரதி மற்றும் உதவியாளர் இருவரும் படுகாயம் அடைந்துள்ள துடன் பேருந்தில் பயணித்த 8 பேர் காயமடைந்தனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (9-312-316)

## நெல் காயவைக்கும் தளம் திறந்துவைப்பு



(நெளுக்குளம்)

வவுனியா நொச்சிக்குளத்தில் ஒரு மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நெல்காயவைக்கும் தளம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நொச்சிகுளம் கமக்காரர் அமைப்பின் தலைவர் கு.இராசேந்திர குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்ட வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சகிலா பானு தளத்தினை திறந்து வைத்தார்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியான ஒரு மில்லியன் ரூபா செலவில் குறித்த நெல் தளம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாளிகை, நொச்சிக்குளம், அலைகல்லு போட்டகுளம் பகுதிகளைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-299)

## தருமபுரம் வைத்தியசாலைக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுமா? பொதுமக்கள் கேள்வி

(தருமபுரம்)

கிளிநொச்சியின் கண்டாவளைப் பிரதேசம் மற்றும் அதனை அண்டிய முல்லைத்தீவின் புதுக்குடியிருப்பு பிரதேசம் ஆகியவற்றினைச் சேர்ந்த மக்களது பிரதான சிகிச்சை மையமான தருமபுரம் வைத்தியசாலை காணப்படுகிறது.



இருப்பினும் இரவு வேளைகளில் உத்தியோகப்பற்றற்ற வகையில் மூடப்படுவதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது.இரவு வேளைகளில் அவசர சிகிச்சைகளுக்காகச் செல்லும் நோயாளர்கள் மறுநாள் காலை ஆறு மணிக்கு வருமாறும் அவசரம் எனில் நேரடியாக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்குச் செல்லுமாறும் பணிக்கப்படுகின்றனர்.

அதையும் மீறி தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்க கோரும் நோயாளிகள் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டாலும் அவர்கள் வைத்தியர்களால் மறுநாள் காலையிலேயே பார்வையிடப்படுகின்றனர்.

வெளிநோயாளர் பிரிவிற்கு வருகை தரும் நோயாளர்களை வைத்தியர்கள் சரியாக பார்வையிடுவதில்லை எனவும் நோயாளி நோயை கூறுவதற்கு முன்பாகவே வைத்தியர் மருந்துச்சிட்டையை வழங்குவதாகவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் குறித்த வைத்தியசாலையில் பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட வைத்திய சாலை கட்டடம் இதுவரை திறக்கப்படவில்லை என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். சாதாரண குருதிப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டுமாயின் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சரவணபவனை தொடர்பு கொண்டு கேட்ட போது குறித்து விடயம் தொடர்பில் தனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதாகவும் தான் வைத்தியாலைக்கு நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளை ஆராய்ந்ததாகவும் மக்களின் குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவற்றுக்கு தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்தார். (9-316-350)

# தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

### உண்ணாவிரதம் இருக்கும் வர்த்தகர் தெரிவிப்பு

(பரந்தன்)

தீர்வு கிடைக்கும் வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லை. தீர்வு கிடைக்க வேண்டும் இல்லையேல் நான் இறக்க வேண்டும் என கரைச்சிப்பிரதேச சபை தவிசாளருக்கு உண்ணாவிரதம் இருக்கும் வர்த்தகர் தெரிவித்தார்.



ஆதனவரியை குறைக்க கோரி கிளிநொச்சி நகரில் உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்து வரும் வர்த்தகரை நேற்றுக் காலை கரைச்சி பிரதேச சபை தவிசாளர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த சந்திப்பு சுமார் பதினைந்து நிமிடம் இடம்பெற்றது. இதன்போது தவிசாளரால் ஆதன வரி தொடர்பான விளக்கம் வழங்கப்பட்டதுடன் உங்கள் கோரிக்கையை மதிக்கின்றோம். ஆனால் இது ஒரு அரச கடமை. நான் தவிசாளர் என்ற வகையில் தன்னிச்சையாக எதனையும் செய்ய முடியாது. வரி செலுத்துகின்ற பல ஆயிரம் மக்கள் இருக்கிறார்கள். அதில் எதிர்ப்பது நீங்கள் மட்டுமே. அதனால் இது தொடர்பில் ஆராய வேண்டும். சபை தீர்மானம் எடுக்க வேண்டும். மீண்டும் வர்த்தமானப்படுத்த வேண்டும். ஆகவே இது ஒரு நீண்ட செயற்றிட்டம். அதுமட்டுமல்லாது வரி குறைப்பு தொடர்பாக நாம் பரிசீலனை செய்து வருகின்றோம். பொதுமக்களுடன் கலந்தாலோசித்து வருகின்றோம்.

அதுமட்டுமல்லாது கடந்த சபை அமர்வில் இது தொடர்பில் அறுபது நாட்களுக்குள் ஆராய சபை தீர்மானம் எடுத்துள்ளது. ஆனால் இவ்வருடத்திற்கு அது சாத்தியப்பாடாக இருக்குமா? என்பது கேள்விக்குறியே. ஏனெனில் இதுவரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் ஆதனவரியை செலுத்தி விட்டார்கள். எனவே அவர்கள் தொடர்பிலும் நாம் அக்கறையாக இருக்க வேண்டும்.

ஆனால் அடுத்த வருடம் குறைப்பு செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். குறித்த தீர்மானத்தை ஆறாம் மாதத்திற்குள் சபைக்கு சமர்ப்பித்து சாதகமான தீர்வை வழங்குகின்றேன். சபையும் உங்களுக்கு சாதகமான பதிலை சபை வழங்கும் என நம்புகின்றேன். அவ்வாறு முன்னெடுக்காவிடில் நீங்கள் போராட்டத்தை தொடருங்கள். இப்பொழுது கைவிடுங்கள். அதுமட்டுமல்லாது குறைப்பு தொடர்பான செயற்றிட்டத்தை முன்னெடுக்கும் போது பின்தங்கிய கிராமங்களில் உள்ள மக்களின் அபிவிருத்தி தொடர்பில் அவர்கள் பாதிக்காத வகையில்தான் தீர்மானங்களை எடுப்போம் என தவிசாளர் வேழமாலிதன் தெரிவித்தார். அதற்கு பதிலளிக்கும் போதே குறித்த வர்த்தகர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (9-312)

தோல்வி பெற்றாலும் வெற்றி பெற்றாலும் முயற்சியைக் கைவிடாதே - யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஈழத் தமிழ் மக்களை இந்தியா காப்பாற்ற வேண்டும்

இன்று இந்திய தேசத்தின் 70ஆவது குடியரசு தினம்.

70ஆவது குடியரசு தினத்தைக் கொண்டாடுகின்ற பாரத மக்களுக்கு ஈழத் தமிழ் மக்களின் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

இந்தியா எம் அண்டை நாடு மட்டுமல்ல. எங்கள் உடன் பிறப்புக்கள் வாழ்கின்ற பூமி.

தவிர மகாத்மா காந்தி, ஜவர்கலால் நேரு, நேதாஜி, அன்னை இந்திரா காந்தி என இந்திய தேசத்தின் உத்தமர்களை ஈழத் தமிழ் மக்கள் என்றும் தங்கள் மரியாதைக்குரியவர்களாகப் போற்றுகின்ற அளவில், இந்தியாவுக்கும் ஈழத் தமிழர்களுக்கும் இருக்கக் கூடிய தொடர்புகள் எத்துணை நெருக்கமானதென்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும்.

மகாத்மா காந்தியின், நேருவின், நேதாஜியின், இராமகிருஷ்ண பரமகம்சரின், சுவாமி விவேகானந்தரின் உருவப்படங்களை தங்கள் வீடுகளில் வைத்துப் போற்றுமளவுக்கு ஈழத் தமிழர்கள் இந்தியாவை தங்களின் சொந்தத் தேசமாகக் கருதினர்.

இந்தியாவின் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள் ஈழத் தமிழர்கள் மீது மிகுந்த கருசனை கொண்டிருந்தார்.

1983 ஜூலைக் கலவரத்தின்போது சிதம்பரம் கப்பலை அனுப்பி ஈழத் தமிழர்களுக்கு அன்னை இந்திரா காந்தி செய்த உதவியை நாம் ஒருபோதும் மறந்தவர்கள் அல்ல.

எனினும் 2009ஆம் ஆண்டு நடந்த வன்னிப் போரின்போது தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டவேளை, அதனை இந்திய தேசம் பார்த்திருந்தமை ஈழத் தமிழர்களுக்குப் பெரும் துயரமாய் அமைந்தது.

இலங்கைப் பேரினவாத ஆட்சியாளர்கள் எங்கள் மீது கை வைத்தால் அவர்களை இந்தியா அதட்டும் என்று நம்பியிருந்த எமக்கு; வன்னிப் போரின்போது இலங்கை அரசுக்கு இந்தியாவும் உதவியது என்ற செய்தி மிகப் பெரும் ஏமாற்றமாக அமைந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்றும் பணியை இந்திய மத்திய அரசு செய்தே ஆகும் என்று நாம் நம்பியிருக்க, தமிழர்களைக் கொன்றொழிக்கும் கொடும் போருக்கு இந்தியாவும் உதவியது என்றறிந்து கடும் வேதனை கொண்டோம்.

ஆனாலும் இன்றுவரை இந்தியா எங்களைக் காப்பாற்றும் என்பதுதான் ஈழத் தமிழர்களின் நம்பிக்கை.

இந்த நம்பிக்கையை, குடியரசு தினத்தை இன்று கொண்டாடும் இந்திய தேசத்துக்குத் தெரியப்படுத்தும் அதேவேளை,

இன்றிருக்கக்கூடிய நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பது இந்திய தேசத்தின் முகதாவில் முன்னெடுக்கப்பட்டால் மட்டுமே அது சாத்தியமாகும்.

ஆக, ஈழத் தமிழர்களை காப்பாற்றுகின்ற பொறுப்பு இந்தியாவுக்கு உண்டு. அந்தப் பொறுப்பை காலதாமதமின்றி இந்தியா செய்ய வேண்டும் என்பதுதான் எங்களின் கோரிக்கை.

# திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பெண்கள் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் திருட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்ட பெண்கள் மூவரை வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் நேற்று கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில்,

வவுனியா சந்தை சுற்று வட்ட வீதியிலுள்ள சதொச விற்பனை நிலையத்தில் நேற்று மதியம் 12மணியளவில் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக சென்ற பெண்கள் தாம் அணிந்திருந்த ஆடைக்குள் இன்னுமொரு ஆடை அணிந்து அவ் ஆடைக்குள் பொருட்களை திருடிச் சென்றுள்ளனர். சந்தேகமடைந்த சதொச பணியாளர் சி.சி.ரி.வி வீடியோவை பார்வையிட்ட போது திருடிச்சென்றது தெரிய வந்துள்ளது.

வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து சி.சி.ரி.வி வீடியோவின் உதவியுடன் மூன்று பெண்களை கைது செய்துள்ளதாகவும் கொழும்பு, பாணந்துறையை சேர்ந்த 22,45,62 வயதுடையவர்களென்றும் திருடப்பட்டவை 35000 ரூபா பெறுமதியான பொருட்களெனவும் வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் முன்னர் திருடியுள்ளதாகவும் விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ம-3,299)

# ஆறு.திருமுருகன் தானும் வாழ்ந்து பிறருக்கும் வழிகாட்டியாக விளங்குகின்றார்

## நல்லைக் குருமுதல்வர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் தானும் வாழ்ந்து தான் வாழும் காலத்தில் பிறருக்கும் வழிகாட்டியாக விளங்குகிறார் என நல்லை ஆதின குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் புகழாரம் சூட்டினார்.

யாழ்.நாவற்குழிப்பகுதியில் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்ட சிவபூமி அரும்பொருட் காட்சியகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆறுதிருமுருகன் தமிழ் மக்களுக்கும் சைவ சமயத்திற்கும் தன்னால் ஆன பணிகளைச் சிறப்பாக செய்து வருகின்றார்.

அவரால் மேற்கொள்ளப்படும் திறப்பு விழாக்கள் பலவற்றுக்கு என்னையும் அழைப்பார். அப்போதெல்லாம் அவரிடம் அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள் எனக் கேட்பேன்.

அப்படிப்பட்ட சிறந்த இறைபக்தியிலான சிந்தனையுடைய ஆறு. திருமுருகன் இம்மண்ணிற்குப் பல்வேறு கைங்கரியங்களைத் தொடர்ந்தும் ஆற்ற வேண்டும்.

இவ் அரும்பொருட் காட்சியகத்திற்கு பொதுமக்கள் தமக்கு கிடைக்கப் பெறுகின்ற புராதன பொருட்களை வழங்கி இதனை மேலும் சிறப்படையச் செய்ய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-3.10)

# சுதந்திரக்கட்சி -பெரமுன கூட்டணி கதிரைச் சின்னத்தில் களமிறங்கும்

## ரோஹன லக்ஷ்மன் பியதாஸ

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இணங்க, பொதுத் தேர்தலின்போது கதிரைச் சின்னத்திலேயே சுதந்திரக் கட்சி- ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணி களமிறங்கும் என்று சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

"ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காக தீவிரமாக செயற்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது, தாமரை மொட்டுச் சின்னத்தில் அன்றி பொதுச் சின்னத்தில் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவோம் என்று கூறியிருந்தோம்.

எனினும், அது முடியாமல் போய்விட்டது. இருப்பினும், நாம் தாமரை மொட்டுச் சின்னத்துக்கு ஆதரவளித்து அன்று பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தோம்.

இதனால்தான் அவரது வெற்றி மகத்தான வெற்றியாக மாற்றமடைந்தது. தற்போது பொதுத் தேர்தல் ஒன்று இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலில் கதிரைச் சின்னத்தில் களமிறங்கவே அன்று, இரண்டு தரப்பும் தீர்மானித்தது.

இதுதொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் இரண்டு தரப்பும் செய்து கொண்டுள்ளது. 17 கட்சிகள் இதற்கு ஒத்துழைப்பு வழங்கின.

எனினும், சிலர் மீண்டும் தாமரை மொட்டுச் சின்னத்தில் களமிறங்க வேண்டும் என்று கோரி வருகின்றனர். இது ஏன் என்றுதான் தெரியவில்லை. எமது கட்சியின் பலத்தை இல்லாது செய்யவோ, எமது கட்சியை க்ட்டுப்படுத்தவோ எந்தத் தரப்பாவது முற்பட்டால், நாம் அதற்கு முகம் கொடுக்கவும் தயாராகவே இருக்கிறோம்" என மேலும் தெரிவித்தார்.


(ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

மனவலிமை இல்லாதவர்களைத்தான் தீமை துன்புறுத்துகின்றது. மனவலிவு படைத்திருப்பவர்களுக்கு தீமையுமில்லை, துன்பமுமில்லை.

-சுவாமி சித்பவானந்தர்

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- நிலையில்லாச் செல்வத்தில் நம்பிக்கை வைக்காமல் வாழ்வில் நிறைவளிக்கும் கடவுளை மட்டுமே எதிர்நோக்கி இருக்க வேண்டும்.
- உங்களிடம் இருக்கிற துணிவைக் கைவிடாதீர்கள். இதற்கு மிகுந்த கைமாறு எப்போதும் உண்டு.
- நம்பிக்கை இல்லாத தீய உள்ளம், வாழும் கடவுளை விட்டு விலகும். இத்தகைய தீய உள்ளம் உங்கள் எவருக்கும் இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.
- கடவுளுக்காக நம்பிக்கையுடன் காத்திருப்பவர்கள் அனைவரும் உள்ளத்தில் வலிமையும் உறுதியும் கொண்டிருக்க வேண்டும்.
- ஒரு காலத்தில் இருளாக இருந்த நீங்கள் இப்போது கடவுளுடன் இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள். ஆகவே ஒளி பெற்ற மக்களாக வாழுங்கள்.
- அமைதிக்கு வழி வகுப்பவற்றை நாடுவதுடன், பிறருக்கு வளர்ச்சி தருபவற்றைச் செய்யவும் முயற்சிக்க வேண்டும்.
- உடன் பிறப்புகள் போன்று வாழ்க்கையில் எப்போதும் ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுவதுடன், அனைவருக்கும் எப்பொழுதும் நன்மை செய்யவே நாடுங்கள்.




கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் க.இளங்கோவன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் தலைவருமான கலாநிதி திருமதி.ஜெயலக்ஷ்மி இராசநாயகம், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக கணிதபாட ஆசிரிய ஆலோசகர் க.ஸ்ரீகணேசன், கௌரவ விருந்தினர்களாக பளை மத்திய கல்லூரி ஆசிரியர் நா.கேதீஸ்வரன், ஜே/342 கரம்பைக்குறிச்சி கிராம உத்தியோகத்தர் மோ.பிரகாஷ் கலந்து கொண்டனர்.




கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

(படங்கள்:-கிளிநொச்சி செய்தியாளர்)





யாழ்.வரணி மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் ப.செல்வவிநாயகம் தலைமையில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராக பழைய மாணவனும் மன்னார் மாவட்ட உதவிச் செயலருமான வி.சிவராஜா, சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய நிர்வாக அலுவலகர் வி.ரவீந்திரன், கௌரவ விருந்தினராக வரணி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்தியர் பி.அச்சுதன் கலந்து சிறப்பித்தனர். நிகழ்வில் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். சோழன் இல்லம் முதலாம் இடத்தினையும் சேரன் இல்லம் இரண்டாம் இடத்தினையும் பாண்டியன் இல்லம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டன.

# பங்களாதேஷ் அணிக்கெதிரான தொடரில் பாகிஸ்தான் அணிக்கு முதல் வெற்றி



பங்களாதேஷ் அணிக்கெதிரான முதலாவது இருபது-20 போட்டியில், பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில், 1-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது.

லாகூர்- கடாபி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 141 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மொஹமட் நய்ம் 43 ஓட்டங்களையும், டமீம் இக்பால் 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சில், ஷாயீன் அப்ரிடி, ஹரிஸ் ரவூப் மற்றும் சதாப் கான் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 142 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19.3 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால் பாகிஸ்தான் அணி 5 விக்கெட்டுகளால் வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சொயிப் மாலிக் 58 ஓட்டங்களையும், அஹ்சன் அலி 36 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 45 பந்துகளில் 5 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 58 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட பாகிஸ்தானின் சொயிப் மாலிக் தெரிவு செய்யப்பட்டார்.(ஐ-2)

# எல்லைக்கோட்டில் அசத்தல் கேட்டு மிரள வைத்த ரோஹித்




நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் இருபது-20 போட்டியில் இந்திய வீரர் ரோஹித் சர்மா எல்லைக் கோட்டிற்கு அருகே பிடித்த கட்ச் அனைவரின் கவனத்தையும் ஈர்த்து வருகிறது.

ஆக்லாந்தில் நடந்த இருபது-20 போட்டியில் இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட இரபது-20 தொடரில் 1-0 என்ற வெற்றி கணக்கில் இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. முதல் இன்னிங்ஸில் 7 ஆவது ஓவரை இந்திய வீரர் சிவம் துபே வீச, துடுப்பாடி நியூசிலாந்து ஆரம்ப துடுப்பாட்டக்காரர் குப்தில் பந்தை பறக்க விட்டார்.

எல்லைக் கோட்டிற்கு மிக அருகே பந்தை கட்ச் பிடித்த ரோஹித், கோட்டை தொடவிருந்த நிலையில் பந்தை மேலே வீசி, பின்னர் மீண்டும் கட்ச் பிடித்து அசத்தினார். இது இருபது-20 கிரிக்கெட்டில் இந்தியாவுக்காக சிவம் துபே எடுத்த முதல் விக்கெட்டாக அமைந்தது. அதிரடியாக விளையாடிய குப்தில் 19 பந்தில் 30 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார். எல்லைக் கோட்டில் அசத்தல் கட்ச் பிடித்த ரோஹித்தை அனைவரும் பாராட்டினார். (ஐ-2)

## உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ்...

உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தலாக மாறிவரும் கொரோனா வைரஸ் காரணமாக 65 மில்லியன் வரையான மக்கள் உயிரிழக்கும் அபாயம் காணப்படுவதாக பிரித்தானிய ஊடகம் ஒன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

எதிர்வரும் 18 மாதங்களில் இந்த உயிரிழப்புகள் ஏற்படும் அபாயம் உள்ளதாக அமெரிக்காவின் ஜோன் ஹொப்கின்ஸ் வைத்திய பரிசோதனை பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

வேகமாக பரவி வரும் கொரோனா வைரஸ் தொடர்பில் வைத்திய பரிசோதனை நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் டொக்டர் எரிக் டொனர் கருத்து வெளியிட்டுள்ளார்.

முதற்தடவையாக சீனா புஹான் மாநிலத்தில் கொரோனா வைரஸ் பரவியமை அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த வைரஸ் இதற்கு முன்னர் இருந்த சார்ஸ் வைரஸை விடவும் வேகமாக பரவும் வைரஸாக காணப்படுகிறது.

இது உலகம் முழுவதும் 6 மாதத்திற்குள் பரவும் நிலை காணப்படுவதாகவும் வைத்தியர் குறிப்பிட்டுள்ளார்.

1918 காலப்பகுதியில் இந்த ஆட்கொல்லி வைரஸ் வேகமாக பரவிய சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஸ்பெயினில் பரவிய காய்ச்சலை தொடர்ந்து அதனால் உலகம் முழுவதும் 500 மில்லியன் பேர் வரையிலானோர் பீடிக்கப்பட்டதுடன் 50 மில்லியன் வரையானோர் உயிரிழந்திருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று தற்போதைய கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவும் அபாயம் காணப்படுவதாகவும் அவ்வாறு பரவினால் பல உயிரிழப்புகளை சந்திக்க நேரிடுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று அவுஸ்திரேலியா, அமெரிக்கா, பிரான்ஸ், சிங்கப்பூர், ஹொங்கொங், தாய்லாந்து, தென்கொரியா, நேபாளம், தாய்லாந்து, தாய்வான் உள்ளிட்ட நாடுகளிலும் பரவ ஆரம்பித்துள்ளது.

இந்த வைரஸ் தாக்கம் காரணமாக இதுவரை 47 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கிளிநொச்சியில் கணவனால்...

இளம் குடும்பப் பெண் உயிரிழந்த நிலையில் அவரது சகோதரியும் கொலையாளியும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரபலனந்தனாறு மயில்வாகனபுரம் பகுதியில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றது.

பச்சிளைப்பள்ளி பிரதேச சபையில் பணியாற்றும் சுகந்தன் சகுந்தலா (வயது -25) என்ற குடும்பப்பெண்ணே கொல்லப்பட்டார்.

அவரது கணவரான கொலையாளி சுகந்தன் (வயது-24), கொல்லப்பட்டவரின் இளைய சகோதரி கிருஷ்ணசாமி பிரியங்கா (வயது-22) ஆகிய இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சகுந்தலாவுக்கும் சுகந்தனுக்கும் 5 வருடங்களுக்கு முன்னர் திருமணம் இடம்பெற்றது. எனினும் அண்மைக்காலமாக இருவருக்கும் முரண்பாடு இருந்துள்ளது.

நேற்று அதிகாலை மனைவியை கத்தியால் வெட்டி சுகந்தன் கொலை செய்துள்ளார். அதனைக் கண்ட சகுந்தலாவின் சகோதரி தடுக்க முற்பட்டுள்ளார். அதனால் மனைவியின் சகோதரியின் தலையில் கொலையாளி கத்தியால் குத்தியுள்ளார்.

அத்துடன், தானும் கழுத்தறுத்து தற்கொலைக்கு கொலையாளி முயன்றுள்ளார்.

கொலையாளி தற்போது பொலிஸ் காவலில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (ம-3.100.312.316)

## 22 தமிழ்...

சிரியர்கள் திறந்து வைத்தனர்.

இவ்வாறு 22 தமிழ் மன்னர்களின் சிலைகளையும் 22 பேராசிரியர்கள் திறந்து வைத்தமை அந்த நிகழ்வின் சிறப்பினை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது. (ம-3.10)

## வவுனியா...

துள்ளனர்.

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் கேரள கஞ்சா பரிமாற்றம் இடம்பெறுவதாக விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து விசேட அதிரடிப்படையினர் புதிய பேருந்து நிலையத்தில் சந்தேகத் திற்கிடமான முறையில் நின்ற நான்கு இளைஞர்களை சோதனைக்குட்படுத்தினர்.

இதன் போது கேரள கஞ்சாவினை தம்வசம் வைத்திருந்த வவுனியாவை சேர்ந்த 35,33, 32,28 வயதுடைய நான்கு இளைஞர்களை விசேட அதிரடிப் படையினர் கைது செய்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இவர்களிடமிருந்து 40 கிராம், 20 கிராம், 20கிராம், 20 கிராம் விகிதம் 100 கிராம் கேரள கஞ்சாவினை கைப்பற்றியுள்ளனர். (ம-3)

## தேரர்கள்...

யாழில் இடம்பெறும் சைவ புத்த ஒற்றுமைக்கான நிகழ்ச்சியின் முதல் நாள் நிறைவு 29ஆம் திகதி புதன்கிழமை வண்ணார்பண்ணை நீராவியடியில் இடம்பெறும்.

அதில் வரக்காகொட ஞானரத்ன தேரரும் 30ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.முட்டாசுக் கடைச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள தனியார் விடுதியில் இடம் பெறும் நிகழ்வில் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-3.10)

## பூஜித ஜய...

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்க தவறிய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பூஜித ஜயசுந்தர, நேற்று பல முக்கியமான விவகாரங்களை வெளிப்படுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, நேற்றையதினம் மாவனெல்லை கிராமசேவகர், இரண்டு பொதுமக்களும் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர். (ம-3)

## அரசுடன் பேச்...

யக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனை தொடர்பு கொண்டு வினவியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார். (ம-3)

## காணாமல் போனவர்களுக்கு...

உயிரிழந்துள்ளதாக ஜனாதிபதியை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளதாகவும், ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஹனா சிங்கருடனான கலந்துரையாடலில் ஜனாதிபதி அவ்வாறான எண்ணிக்கை தொடர்பில் குறிப்பிடவில்லை யெனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

காணாமற்போனோர் தொடர்பில் மரண சான்றிதழ் வழங்குதல், அவர்களின் குடும்பத்தை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான உதவிகளை உரிய விசாரணைகளின் பின்னரே வழங்கு வதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-3)

## இலங்கையிலும் உயிர்கொல்லி...

டுள்ளனர்.

இதேவேளை, சீனாவில் வசிக்கும் மூன்று இலங்கை மாணவர்கள் நாடு திரும்பியுள்ளதாகவும், அவர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்படவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் கொரோனா வைரஸால் இலங்கை மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சுகாதார அமைச்சு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

சீனாவிலுள்ள இலங்கையர்களைப் பாதுகாக்கும் வகையில் அந்நாட்டிலுள்ள இலங்கை தூதரகமும் விசேட ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

சீனாவில் சுமார் 1,287 பேர் இந்த வைரஸ் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளதுடன் 41 பேர் இதுவரை உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சீனாவில் புத்தாண்டு கால விடுமுறையென்பதால் சுற்றுலாப் பயணிகளின் இலங்கை வருகை அதிகரித்துள்ளது. இந்நிலையிலேயே சீனாவின் முக்கிய பகுதிகளில் பரவி வரும் கொறொனா வைரசின் தாக்கம் அவுஸ்ரேலியா, அமெரிக்கா, தாய்லாந்து, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகளுக்கும் பரவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த வைரஸ் தாக்கத்தினால் சீனாவில் உள்ள இலங்கையர்களுக்கு எந்தவித பாதிப்புக்களும் இல்லை என சீனாவின் பீஜிங்கிலுள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது. (ம-3)

## சிவபூமி அரும் பொருட் காட்...

களின் உருவச்சிலைகளை யாழ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இருபத்திரெண்டு பேராசிரியர்களால் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

குறித்த அரும்பொருட் காட்சியகமானது தமிழ் மக்களின் வரலாற்று ஆதாரங்களையும் வாழ்க்கை முறைகளில் பயன்படுத்தப்பட்ட புராதன அரிய பொக்கிஷங்களையும் காட்சிப்படுத்துவதாக அமைகிறது.

மூன்று மாடிகளைக் கொண்ட இவ் அரும்பொருட்காட்சியகத்தில் கீழ்த் தளத்தில் தமிழ் மக்களினால் பயன்படுத்தப்பட்ட புராதன பொருட்களும் இரண்டாம் தளத்தில் தமிழ் சட்டசபை உறுப்பினர்களின் புகைப் படங்களும், மூன்றாவது தளத்தில் யாழ் பல் கலைக்கழக மாணவர்களால் வரையப்பட்ட கருத்தோவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் சிவபூமி அறக் கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன், வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இலங்கை இந்தியத் துணைத்தூதர் கே.பாலச்சந்திரன், நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்,

சின்மயாமிஷன் சிதகாசானந்தா சுவாமிகள், வீணாகான குருபீட முதல்வர் சபா வாசுதேவக் குருக்கள், மாவிட்டபுரக்கந்தன் ஆலய ஆதீன கர்த்தா து.ஷ.இரத்தின சபாபதிக்குருக்கள், சிவகுருநாத பீட சுவாமி வேதவித்தியாசாகர்,

நாக விகாரையின் விகாராதிபதி விமலதேரர், யாழ் பல்கலைக்கழக வேந்தர் சி.பத்மநாதன், யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர்கள், வைத்திய நிபுணர்கள், பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கோப்பாய் கல்வியற் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-3.10.18.30.114)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1115
சீட்டிழுப்பு திகதி 25.01.2020 சனிக்கிழமை
F 05 49 59 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.92,390,560

அத கோடிபதி
சீட்டிழுப்பு இல: 863
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2020.01.25
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,131,245/-
வெற்றி இலக்கங்கள் 32 44 50 56 V

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3292 திகதி: 2020.01.25
பச்சை சனிக்கிழமை
1308
வெற்றி இலக்கங்கள் 21 36 38 53 O
30,000,000/-

ராசி அதிர்ஷ்டம்
திகதி 25.01.2020 வெற்றி வாரம் 2749 வர்ணம் இளநீலம்
வெற்றி இலக்கங்கள் இடபம் 14 18 26 33
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 25,64,256

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/01/25
சீட்டிழுப்பு இலக்கம் 1498
06 08 25 40 62 54 12

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 25-01-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2372
I 04 10 46 69

செவண
திகதி 25/01/2020
சீட்டிழுப்பு இலக்கம் 256
P 05 18 41 67

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 25/01/2020
சீட்டிழுப்பு இலக்கம் 1012
E 9 6 6 7 5 7 5 7

அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில்

## மலேசியாவிலிருந்து வந்த குழுவினருடன் ஆளுநர் சார்ள்ஸ் சந்தித்துப் பேச்சு



(யாழ்ப்பாணம்)

மலேசியாவில் இருந்து வந்திருந்த குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸை சந்தித்து பல்வேறு அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில் உரையாடினர்.

முதலீட்டு வாரியம் தொடர்பான சாதக பாதக தன்மைகள் தொடர்பில் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

ஆளுநர் அலுவலகத்தின் சிறப்பு அதிகாரஙகளைக் கொண்டு முன்னெடுக்க இருககும் திட்டங்கள் தொடர்பில் அவர்கள் பல விடயங்களை கேட்டு அறிந்து கொண்டனர்

எந்தெந்த துறை சார்ந்த எத்தகைய செயற்றிட்டஙகளுக்கான முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள் வடக்கில் உள்ளன என்பதை தெரியப்படுத்துமாறும்,

பல்வேறுபட்ட வர்த்தக மற்றும் சேவை நோக்க செயற்பாடுகளில் தாம் ஆர்வமாக இருப்பதாகவும்,

சுத்தமான குடிநீரை வளிமண்டல நீர்ப் பதனை பயன்படுத்தி பெற்றுக்கொள்ளும் நவீன வசதியை வடக்கிலுள்ள மக்களுக்காக அறிமுகப்படுத்தும் திட்டம் தொடர்பில் அவர்கள் கூறிய போது வடக்கிலுள்ள கைத்தொழில் பேட்டையில் அதற்கான வசதிகளை பெற்றுத்தர வாய்ப்புள்ளதாகவும் அதற்கான முன்மொழிவுகளையும் ஒழுங்குகளையும் விரைவாக செய்யும்படி வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் ஆலோசனை வழங்கினார் .

வடக்கின் விமான நிலையத்தினூடான பல்வேறுபட்ட வசதிகளை மேம்படுத்த பல யோசனைகளும் இங்கு முன்மொழியப்பட்டன.

நிபுணத்துவம் வாய்ந்த ஆங்கில ஆசிரியர்களை தருவித்து சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் குறுகியகால நவீன பயிற்சிகளால் இளைஞர்களை அறிவூட்டி அவர்களை சர்வதேச தரத்தில் நல்ல திறமையை பெறவைத்து உலகில் வேகமாக வளர்ந்துவரும் குறித்த துறைகளில் அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புகளை பெற வழிகாட்டவும் தாம் தயாராக இருப்பதாக அவர்கள் வடக்கு ஆளுநரிடம் தெரிவித்தனர். (ம-3)

## விகாரைகளை துரிதமாக அமைக்க நடவடிக்கை எடுப்பேன் – மகிந்த

விகாரைகள் அமைக்கப்பட வேண்டிய பகுதிகளை இனங்கண்டு அதன் பின்னர் குறித்த பகுதிகளில் விகாரைகளை துரிதமாக அமைக்க நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹொரவத்பொத்தான குடாகம பகுதியில் அமைக்கப்பட்ட விகாரை ஒன்றை திறந்து வைக்கும் புனித நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும்போதே பிரதமர் இதனை கூறினார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், "1000 விகாரைகள் நாட்டில் உள்ளன. அவற்றில் பெரும்பாலான விகாரைகளில் பிக்குகள் இல்லை. இந்த நிலைமை பிரச்சினைக்குரியதாகும்.

என்னுடன் விளையாட குடும்பத்தில் 9 பேர் இருந்தனர். ஆனால் இன்று அவ்வாறு இல்லை. ஒரு குடும்பத்தில் ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள் மாத்திரமே உள்ளனர்.

முன்பு துறவிகளாகுவதற்கு பிள்ளைகள் இருந்தனர். யுத்தம் செய்யக்கூடிய பிள்ளைகள் இருந்தனர். அதேபோல் விவசாயத்தில் ஈடுபடக்கூடிய பிள்ளைகள் இருந்தனர்.

ஆனால் இன்று இவற்றுக்கு அனுப்ப மக்கள் மத்தியில் பிள்ளைகள் இல்லை.

இந்த நிலைமை குறித்து பௌத்த மக்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றார். (ம-3)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மூளாய் கிழக்கு பொற்புலம்பதி அருள்மிகு மஹா காளியம்பாள் தேவஸ்தான அலஙகார உற்சவம் நாளை 27ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவுள்ளன.

இதில் எதிர் வரும் 5ஆம் திகதி கும்பாபிஷேக தினத்தில் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (இ-5)


**வேலைவாய்ப்பு**

யாழ்.நகரில் இயங்கும் சேவை நிறுவனம் ஒன்றுக்கு நிறுவன உதவியாளர் (ஆண்) தேவை.

தகைமை
1. யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. A/L சித்தி
3. வயதெல்லை 18 - 35

(C-9066)

தொடர்புகளுக்கு:- 0770277365, 0770696816

**வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி (C-3022)

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்

கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்

முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு

UK–550*/=Kg

DELIVERY IN 3-5 DAYS

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● திருகோணமலை ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● மானிப்பாய் ● மருதங்கேணி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-8785)

0768226240 V2 TRAVELS

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.

(ஆண் / பெண் இருபாலாரும்)

(1987)

தொடர்புகளுக்கு 0774656325

**Oblate Institute for Higher Education**

Annai Illam, Kanakampikaikulam, Kilinochchi.

அமல மரித்தியாகிகளின் (OMI Fathers) உயர் கல்வி நிலையம் நடாத்தும் கற்கைநெறிகள்

**Diploma in English from Basic Level to Diploma Level**

(ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி)

In Affiliation to Aquinas University College, Colombo

(கொழும்பு அக்குவானஸ் பல்கலைகழகத்தின் அனுமதி பெற்றது)

**Diploma in Sinhala from Basic Level to Diploma Level**

(சிங்கள டிப்ளோமா கற்கைநெறி)

**Computer Assistant**

(தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர் சான்றிதழ்)

(NVQ Level 3/4)

**Pharmacy Management**

(மருந்தக மேலாண்மை சான்றிதழ்)

(NVQ Level 3/4)

விண்ணப்ப முடிவுத் திகதி 31.01.2020

தொடர்புகளுக்கு:- T.P. 077 44 24 491, 077 99 74 639

வகுப்புகள் வார நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் நடைபெறும்.

க.பொ.த, சாதாரன தர, உயர்தர (O/L, A/L) பரீட்சை எழுதிய மாணவர்கள் முதல் அனைத்துத் தரப்பினரும் இவ் கற்கை நெறிகளை மேற்கொள்ள முடியும்

(1990)

விண்ணப்ப படிவங்களை தொடர்பகம் , 657/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் மற்றும் அன்னை இல்லம் கனகாம்பிகை குளம், கிளிநொச்சியிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி நகர மத்தியில் புகையிரத நிலைய வீதியில், A9 வீதி நகர சபை, பஸ் நிலையம், புகையிரத நிலையம் இவற்றுக்கு மிக அண்மையில் திருமண மண்டபம், விடுதி, தொடர் மாடி, ஹோட்டல் அமைக்கக்கூடிய ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இரு வழிப் பாதையும் நன்நீர்க் கிணறும் உள்ளது.

(1976)

தொடர்புகளுக்கு:- 077 790 5438, 076 863 7930

**விற்பனைக்கு**

1. கொழும்புத்துறை - புதிய மாடி வீடு 1 1/4 பரப்பு
2. நல்லூர் - சிவன் அம்மன் வீதி பருவக்குளம் - 1 ½ பரப்பு
3. அரியாலை - காணி
4. அளவெட்டி - கடை
5. உரும்பிராய் - காணி
6. கேரதீவு - காணி

(1994)

0775660000, 0772216683

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

**சாவகச்சேரியில்...**

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/= ஜேர்மனி - 640/= இத்தாலி - 690/= கனடா - 950/= நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-9015)

**யாழ் சர்வதேச கண்காட்சியில் STALL NO C-19** 24,25,26 திகதிகளில் வெள்ளி,சனி,ஞாயிறு

கனடாவில் வேலைவாய்ப்பு/உயர்கல்வி

3 year work permits

குடும்பத்துடன் நிரந்தரமாக தங்கலாம்

வருடத்திற்கு 5000 வீசா வாய்ப்புக்கள்

அடிப்படைக்கல்வித்தகுதி :- A/L

● வயதெல்லை :- 19 முதல் 50 வரை

SRILANKAN AIRLIINES உட்பட பல்வேறு விமான சேவைகளில் வேலை செய்வற்கான கற்கைநெறிகள்

SriLankan Airlines · SriLankan Aviation College

STUDY IN INDIA 100% SCHOLARSHIP

இந்தியாவில் கல்வி,தங்குமிடம் உணவு 100% இலவச புலமை பரிசில் வாய்ப்புக்கள் (C-9038)

நேரில் சந்தித்து விபரங்களை அறிந்து பயன்பெறுங்கள் 0768226243


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 262

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 | 26.01.2020 | தொலைபேசி : 021 222 3378



சிவபூமி அரும்பொருட்காட்சியகம்

## வரலாற்றுச் சாதனை



# ஆலடி மாநாடு



## அப்ப சனங்கள் கதைக்கிறது உண்மையாக இருக்குமோ?

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் எண்டு வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

நாவற்குழியில் அமைக்கப்பட்ட அரும்பொருட்காட்சியகம் 25.01.2020 நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. எங்கட தமிழினத்தின் வாழ்வியல் அடையாளங்களைப் பாதுகாக்கின்ற அரும்பொருட்காட்சியகத்தை அனைவரும் சென்று பார்க்க வேணும்.

அதிலும் குறிப்பாக மாணவர்கள் அரும்பொருட்காட்சியகத்திற்கும் திருவாசக அரண்மனைக்கும் சென்று அவற்றைப் பார்வையிடுவது கட்டாயமானதாகும். இவ்வாறு வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையுரை ஆற்றினார்.

அதனைத் தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** தீர்வினைத் தராவிட்டால் சர்வதேசம் தலையிடும் எண்டு சம்பந்தர் ஐயா மீண்டும் கூறியிருக்கிறார்.

**பண்டிதர்:** அவற்ற முதுமையில எது கதைக்கிறது, எது கதைக்கக்கூடாது எண்டு தெரியாமல் போயிற்றுது...

**மூப்பர்:** சர்வதேசம் தலையிட வேணும் என்பது தானே எங்கட கோரிக்கை. ஈழத்தமிழ் மக்களின்ர பிரச்சினையில சர்வதேசம் இன்னும் தலையிடவில்லை எண்டு நாங்கள் கவலைப்படுகிறம். ஆனால் சம்பந்தர் ஐயாவோ சர்வதேசம் தலையிடப் போகுது இலங்கை அரசாங்கம் கவனமாக இருக்க வேணும் எண்டு எச்சரிக்கை செய்யிறார் போல...

**கங்காணி:** அவர்தான் என்ன செய்யிறது, தமிழரசுக் கட்சிக்குள்ளயும் ஏகப்பட்ட முரண்பாடுகள். தமிழரசுக் கட்சியின்ர தலைவருக்கே அடுத்த பாராளுமன்றத் தேர்தலில போட்டியிட வாய்ப்பு வழங்கப்படமாட்டாது போல இருக்குது.

**சாத்திரியார்:** அதுமட்டுமல்ல தமிழரசுக் கட்சியின்ர இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில கடும் போட்டி நடக்குதாம்.

ஒரு எம்.பிக்கு அடுத்த தேர்தலில சீற் கொடுக்கிறதில்லை என்பதில தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் மிக இறுக்கமாக இருப்பதாகவும் கேள்வி.

**சிறாப்பர்:** தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட வேணும் எண்டு கேட்கிறதெல்லாம் வீண் என்பதாகப் போயிற்றுது. இனி, தமிழ் மக்கள் தான் தங்கட அரசியல் தலைமை யார் என்பதை முடிவு செய்ய வேணும்.

**விதானையார்:** கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது யாரை ஆதரிப்பது என்ற விடயத்தை தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும் எண்டு சொல்லுறது தான் பொருத்தம் என்பது கூடத் தெரியாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எதிர்வரும் பொதுத் தேர்தலில என்ன சொல்லப் போகினமோ தெரியல்ல...

**வாத்தியார்:** சரி...சரி... அரசியல் கதைத்துக் கொண்டிருந்தால் அது தொடர்ந்து கொண்டே இருக்கும். அதை விட்டிட்டு எங்கட மக்களுக்குத் தேவையான விடயத்தைக் கதைக்கிறது தான் நல்லது எண்டு நினைக்கிறன்.

(வாத்தியார் சற்றுக் கோபத்துடன் கூறியதும் ஆலடியில் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்)

**சாத்திரியார்:** நாம் இதுகளைச் சொன்னால் மதவாதம் எண்டு சிலர் சொல்லுகினம். ஆனால் ஊரில சனங்கள் இதுபற்றித்தான் கதைக்கினம்.

**பண்டிதர்:** எதைப்பற்றிக் கதைக்கினம் எண்டு சொல்லாமல் திடீரென்று ஊரில இது பற்றித் தான் கதைக்கினம் எண்டால் என்னெண்டு எங்களுக்கு விளங்கும்.

**சாத்திரியார்:** வடபகுதியில கிறிஸ்தவ மதத்தை முதன்மைப்படுத்திற வேலை நடக்கிறதாகவும் அந்த ஏற்பாட்டில தான் வடக்கு மாகாணத்தின்ர முக்கியமான பதவிகளில கிறிஸ்தவ மதம் சார்ந்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கதைபடுகுது.

**வாத்தியார்:** இப்படியெல்லாம் கதைத்தால் எங்களிட்ட எப்படி ஒற்றுமை ஏற்படும்.

**சாத்திரியார்:** இந்தா நான் சொன்னன்... ஊரில கதைக்கிறதைத்தான் சொன்னனானே தவிர நானாகச் சொல்லல்ல.

**விதானையார்:** வடக்கு மாகாண ஆளுநர் பதவியேற்ற கையோட யாழ்ப்பாண ஆயரைச் சென்று சந்தித்த போது பெரிய விமர்சனம் ஏற்பட்டது. இருந்தும் இரண்டு நாட்கள் கடந்து நல்லை ஆதீன சுவாமிகளையும் ஆளுநர் சந்தித்தவர்.

**கங்காணி:** கிறிஸ்தவ சமயம் சார்ந்தவர்களை வடபகுதியின்ர முக்கியமான பதவிகளில நியமிக்கிறது எண்ட கதை சும்மா வரல்ல.

**சிறாப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:** தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள்ள கிறிஸ்தவம் சார்ந்தவர்களை நியமித்து அதன் மூலம் கூட்டமைப்பின்ர தலைமையைத் தங்களுக்குரியதாக ஆக்கிற முயற்சி நடக்கிறதான கதைகளை கூட்டமைப்பின்ர உறுப்பினர்கள் சிலரே வெளிப்படுத்தியிருக்கினம். இதற்காக யாழ்ப்பாண மாநகர முதல்வரை எதிர்வரும் பொதுத் தேர்தலில போட்டியிட வைக்கிற முயற்சி நடக்கிறதோட, தற்போதைய யாழ்ப்பாண மேயர் பாராளுமன்றத் தேர்தலில போட்டியிட்டால் அவரின்ர மேயர் பதவியிலும் கிறிஸ்தவர் ஒருவரை நியமிக்க வேணும் என்ற திட்டங்கள் வகுக்கப்பட்டு அதற்கான ஏற்பாடுகளும் நடக்குதாம்.

**விதானையார்:** நானும் அறிந்தமட்டில மன்னாரில கிறிஸ்தவ பாராளுமன்ற உறுப்பினர்கள். அதேபோல யாழ்ப்பாணத்திலும் கிறிஸ்தவம் சார்ந்தவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்களாக ஆக்கி விடுகிற முயற்சிகள் நடப்பதான செய்திகள் கசிந்திருக்குது.

இதாலதான் வடபகுதியில ஆளுநர், பிரதம செயலாளர், மாநகர முதல்வர் என பெரும் பதவிகளில கிறிஸ்தவ சமயம் சார்ந்தவர்கள் நியமிக்கப்படுவதான கதை அடிபடுகுது.

**வாத்தியார்:** நாங்கள் மதவாதத்தை தடுத்து எங்கட தமிழினத்தை ஒற்றுமைப்படுத்திற முயற்சியில தான் ஈடுபட வேணும்.

மதத்தின் பெயரால தமிழினம் பிரிபடுவதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஈழத்தமிழர்கள் விவகாரத்தில் மையம் கொண்டுள்ள சீன - இந்திய பனிப்போர்



கடந்த சில தினங்களுக்குள் இலங்கை அரசியலில் மூவர் வெளியிட்ட கருத்துக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.


அண்மையில் வட மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சென்னைக்கு பயணம் மேற்கொணடிருந்த போது அங்கு அவர் தெரிவித்திருந்த கருத்துக்களும், அதற்கு எதிர்வினை ஆற்றும் வகையில் இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள கருத்துக்களும் இவை.

இரண்டுக்கும் மத்தியில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட சீன வெளிவிவகார அமைச்சர் வாங்ஜி தெரிவித்துள்ள கருத்துக்களும் இலங்கையின் எதிர்கால அரசியல் போக்கை தெளிவுற எடுத்துக்காட்ட வல்லவைகளாய்க் காணப்படுகின்றன.

இலங்கையில் எந்தளவுக்கு தமிழ் மக்கள் ஒடுக்கப்படுகின்றார்களோ, எந்த அளவுக்கு அவர்களின் பூர்வீக வடக்கு-கிழக்கு தாயகம் ஆக்கிரமிக்கப்படுகின்றதோ அந்தளவுக்கு அது இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்தானது என்பதை மறந்துவிடாதீர்கள்.

அதாவது இந்தியாவின் பாதுகாப்பு இலங்கையில் தமிழ் மக்களைப் பாதுகாப்பதில்தான் தங்கியுள்ளது. இதனை இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும். எமது நாட்டின் (இலங்கையின்) சிங்களத் தலைவர்களுக்கு இந்தியாவின் மீது பற்றோ பரிவோ இல்லை.

இவ்வாறு கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை சென்னையில் ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் உரையா



ற்றுகையில் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இச்செய்தி இந்திய-இலங்கை ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண்டது. இதன்பின்பு செவ்வாய்க்கிழமை 14ஆம் திகதி இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தமிழ் ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போது பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட் டார்.

வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு - தமிழர் பிரச்சினைக்கு- தீர்வை இந்தியா தரவேண்டும் என்பது போன்ற செய்திகளை ஊடகங்களில் வெளியாகின. அதில் எனக்கு உடன்பாடில்லை. தீர்வு எம்மிடமே உள்ளது. அதைவிடுத்து தீர்வை வெளியில் தேடுவதில் அர்த்தம் இல்லை. நாம் எமது பிரச்சினைகளை ஒன்றுபட்டு தீர்க்க வேண்டும்." என்று அவர் குறிப் பிட்டார்.

அதேவேளை அன்றைய தினம் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை யும் சந்தித்து உரையாடிய சீன வெளி விவகார அமைச்சர் வாங்ஜி தெரிவித்த கருத்தும் இங்கே கவனத் துக்குரியது.

இலங்கையின் இறையாண்மையை சீனா எப்போதும் மதிக்கின்றது. அதன் உள்நாட்டு விவகாரங்களில் எந்த ஒரு வெளியாரின் தலையீட்டையும் அது ஒரு போதும் அனுமதிக்காது **(China would always respect Sri Lanka"s sovereignty and not allow any " outside interferen ce " in its internal affairs "").**

அதேவேளை சீன வெளிவிவகார அமைச்சர் வாங்ஜி கொழும்புக்கு விஜயம் மேற்கொள்ள இருந்த தருணத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக பாஜகவின் தேசிய செயலாளர் ராம் மாதவ் திடீரென கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பிற்கு விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து இரகசியமாக உரையாடியதாக ஒரு செய்தி வெளியா கியுள்ளது.

எப்படியோ சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பனிப்போர் தற்போது ஈழத் தமிழர்கள் விவகாரத்தில் மையம் கொண்டுள்ளது என்பதில் ஐயமில்லை.

தனது உலகளாவிய ஆதிக்கத்திற்கான ஒரு தடம் ஒரு வீதி **( "One belt one road")** என்ற கொள்கையை நிறைவேற்றுவதற்கான அச்சாணியாக இலங்கையை ஆக்கிக்கொள்ளப் பெரும்பாடு பட்டு சீனா விடாக்கண்டன் கொடாக்க ண்டன் நிலைப்பாட்டில் நின்று செயற்ப டும் நிலை காணப்படுகின்றது.

ஆசியாவில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலும் பெரும் வல்லரசாய் விளங்க வல்ல "சீன ட்ராகன் " தனது முற்றமும் வாசல்படியுமாய் விளங்கும் இலங்கை யில் காலடி பதிப்பதை இந்தியா அச்சத்து டனும் வெறுப்புடனுமே பார்க்கின்றது.

சீனா இவ்வாறு உலகளாவிய ஏகாதிபத்தியப் பெரு வல்லரசாக வளர்வது என்பது இந்தியாவிற்கு மட்டுமல்ல அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகளுக்



கும் கூடவே ஜப்பானுக்கும் அது பெரும் சவாலாக அமைந்துள்ளது.

இப்பின்னணியில் சீனா - இந்தியா- அமெரிக்கா தலைமையிலான நாடுகளைக் கொண்ட ஒரு முக்கோண முரண்பாடும் போட்டியும் உலகலாவிய அரசியலில் எழுந்துள்ள காலமாய் இது காணப்ப டுகின்றது.

இத்தகைய முப்பெரும் தரப்புக்களுக்கு இடையே ஏற்படக்கூடிய "கூடலிலும், மோதலிலும்" திருவிழா பார்க்கப்போன தவழையின் கதையாய் இலங்கைத்தீவின் பரிதாப நிலை காணப்படுகின்றது.

இனப்பிரச்சினை என்பது ஒருபோதும் உள்நாட்டுப் பிரச்சினை அல்ல அது எப்போதும் சர்வதேசப் பிரச்சினை.

இன அழிப்பை மேற்கொள்வதற்கும் அதனை நியாயப்படுத்துவதற்குமாக அப் பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை என்றும் அத்தகைய நாட்டின் உள்விவகாரங்களிலும் இறைமையிலும் தலையிடக் கூடாது என்று கூறிக்கொண்டு அந்நிய நாடுகளின் உதவிகளைப் பெற்று அந்த தமிழ் மக்களை அழிக்கும் பணியை இலங்கை அரசு செய்து வருகிறது.

சீனாவின் "பட்டுப் பாதைக்கு" இலங்கை அரசு அச்சாணியாய் இருப்பதன் பின்னணியில் தமிழினத்தை அழித்தொழிக்கும் இலங்கை அரசின் செயலை நியாயப் படுத்துவதற்காக ஈழத் தமிழர்களின் தேசிய பிரச்சினையை உள்நாட்டுப் பிரச்சினை என்றும் அதனை இலங்கை அரசே பார்த்துக் கொள்ளும் என்றும் சீனா உறுதி படக்கூறி அதற்கான அனைத்துவகை ஆக்கமும், ஊக்கமும் உதவியும் ஒத்தாசையும் சீனா புரிந்து வருகின்றது.

ஈழத் தமிழர்கள் இந்தியாவை தாமாக முதலில் நாடவில்லை. ஈழத்தமிழர்கள் ஐக்கிய இலங்கைக்குள் ஒன்றுபட்டு சிங்கள மக்களுடன் இணைந்து வாழவே உண்மையில் விரும்பினார்கள். அதற்கான முயற்சிகளை தான் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து அவர்கள் 20 நூற்றாண்டின் நடுப்பகுதிவரை எடுத்தார்கள்.

தமிழும் சிங்களமும் உத்தியோக மொழிகளாக வேண்டும் என்கின்ற மசோதாவை 1955 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் டாக்டர் என். எம். பெரேரா நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்து அதற்காக வாதிட்டார்.

அதற்கு மறுப்பு தெரிவித்து உரையாற்றிய எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க இந்தியா பற்றிய அச்சத்தை எழுப்பி, இந்தியாவில் தமிழர்கள் வாழ்வதை காரணம் காட்டி அத்தகைய பின்னணியில் தமிழையும் உத்தியோகமொழியாக ஆக்க முடியாது என்று கூறினார்.

அப்போது தமிழ் மக்கள் அதனை ஒரு உள்நாட்டுப் பரிமாணம் கொண்டதாகவே பார்த்தார்கள். அவர்கள் இந்தியாவை நாடவில்லை, அப்போது ஈழத் தமிழர்களை இந்தியாவுடன் சம்பந்தப்படுத்தி தமிழருக்கான உரிமையை மறுத்தது சிங்கள ஆட்சியாளர்கள்தான்.

1958ஆம் ஆண்டு இனப்படுகொலை கலவரத்தை பண்டாரநாயக்க அரசாங்கம் நடத்தியபோது அன்றைய இந்திய பிரதமர் நேருவின் தலையீட்டின் பெயரில் அந்தப் படுகொலையை இலங்கை அரசு தொடர முடியாது நிறுத்த வேண்டி ஏற்பட்டது.

1983 ஆம் ஆண்டு கறுப்பு யூலை இனப்படுகொலையின்போது அதனைத் தொடர்ந்து கொண்டிருந்த ஜெயவர்த்தன அரசாங்கத்திற்கு எதிராக அன்றைய இந்திய பிரதமர் திருமதி . இந்திரா காந்தி மேற்கொண்ட காட்டமான அரசியல் - இராஜதந்திர நடவடிக்கைகள் மூலமே அதை நிறுத்த முடிந்தது.

எப்படியோ தற்போது ஈழத் தமிழர்களின் விவகாரம் இந்தியா - சீனா - அமெரிக்கா உள்ளிட்ட அரசுகளின் நலன்களோடும் அவர்களின் பிரச்சினைகளோடும் பின்னிப் பிணைந்துவிட்டது. ஆதலால் இதனை அத்தகைய அரசுகளோடு தொடர்புபடுத்தாமல் இனிமேல் ஒருபோதும் அணுக முடியாது.

இத்தகைய பின்னணியிற்தான் விக்னேஸ்வரனின் கருத்தும் நிலைப்பாடும் முக்கியத்துவம் பெறுகிறது. சென்னைக்கு அவர் மேற்கொண்ட பயணம் அவர் எதிர் பார்த்திருக்க கூறியதையும்விட அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப் படுகின்றது.

அவரின் பயணத்திற்கு இந்திய ஊடகங்களும் இந்திய அரசியல்வாதிகளும் கொடுத்த முக்கியத்துவம் பெரிதும் கவனத்துக்குரியது. கருத்துக்கள் இந்தியத் தரப்பில் குறிப்பாக மக்கள் மத்தியிலும் அரசியல்வாதிகள் மத்தியிலும் அதிகம் சிரத்தைக்கு உரியவையாக காணப்பட்டன.

ஈழத் தமிழரின் நலனுக்காகத்தான் இந்தியா ஈழத்தமிழருக்கு உதவ வேண்டும் என்ற ஒரு பொதுவான கருத்துநிலையும் கண்ணோட்டம் இந்திய மக்களிடம்



பரவலாக உண்டு.


ஆனால் அதற்கும் அப்பால் இந்தியாவின் நலன் ஈழத்தமிழரின் நலனோடு பின்னிப்பிணைந்து இருக்கின்றது என்ற கருதை இந்திய மக்கள் மத்தியில் உணரத்தும் வகையில் விக்னேஸ்வரன் கருத்துக்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாய் அமைந்துள்ளன.

தமிழ் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சாத்வீகமான ஒரு தலைவர் என்கின்ற வகையில் விக்னேஸ்வரன் தெரிவித்த கருத்துக்கள் அதிகம் இந்திய ஊடகங்களாலும் மக்களாலும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டும் நிலை காணப்படுகிறது.

அவர் தெரிவித்திருக்கும் அந்தக் கருத்துக்கள் அன்றோடு முடிந்திருக்க கூடியவையல்ல. அவை நின்று நிலைத்து மக்கள் மத்தியிலும், ஊட்கங்கள் மத்தியிலும் , அரசியல் தலைவர்கள் மத்தியிலும் ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தவல்லவை என்பதில் சந்தேகமில்லை.

19ஆம் நூற்றாண்டில் ஹொங்கொங் துறைமுக நகரை 99 வருட குத்தகைக்கு பிரித்தானியா எழுதிக் கொண்டது. அதனை பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு என்று கூறி அதற்கெதிராச் செயற்பட்டு வந்த சீன நாடானது இன்று இலங்கையில் அம்பாந்தோட்டை துறைமுக நகரை 99 வருட குத்தகைக்கு எழுதி வைத்துக் கொண்டு இலங்கை அரசுடன் கைகோர்த்து அதன் தமிழின அழிப்பு கொள்கையை ஆதரித்து உதவுவதான.நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

இந்த இன அழிப்புக் கொள்கையில் மையம் கொண்டுதான் சீன அரசு இல



ங்கை அரசுடன் தனது உள்நாட்டு வெளிநாட்டு ரீதியான உறவுகளை வடிவமைத்துள்ளது. இத்தகைய கண்ணோட்டத்துடன் தான் இனி வரப்போகும் காலங்களில் காணப்படக்கூடிய இலங்கை - இந்திய - சீன - அமெரிக்க உறவுகளையும் தமிழர்களின் இனப்பிரச்சினையையும் நினைத்துப் பார்க்க வேண்டியுள்ளது.

ஆதலால் உள்நாட்டு , வெளிநாட்டு அர்த்தத்தில் வரப்போகும் சில ஆண்டுகள் இலங்கை அரசியலிலும், ஈழத் தமிழர் விவகாரத்திலும் தீர்க்கமான காலகட்டமாய் அமையும் என்பதில் இம்மியளவும் சந்தேகமில்லை. இதனை எதிர்கொள்ளவும் கையாளவும்வல்ல அறிவையும், ஆற்றலையும், ஆளுமையையும் திறனையும், புத்திசாதுரியத்தையும் தமிழ் தலைவர்கள் காட்டுவார்களா என்பதிலேயே தமிழ் மக்களின் எதிர்காலம் தங்கியுள்ளது





# பதஞ்சலி முனிவர் அளித்த யோகம்

யோகம் செய்வதற்கு ஒரு யோகம் வேண்டும். இலட்சக்கணக்கான யோக ஆசனங்களை நமக்கு அளித்துச் சென்றிருக்கும் ஆசான் பதஞ்சலி முனிவர் அருளிய வார்த்தைகள் இவை.

யோகம் என்பதை சாதாரணமாக நாம் அதிர்ஷ்டம் என்று சொல்கிறோம். யோகக் கலையைக் கற்றுக் கொள்வதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும். அப்படி அந்த யோகக் கலையில் என்ன இருக்கிறது.

நம் மனதையும் உடலையும் தன்வசம் இழுக்கும் மாயைகள் பல நிறைந்த உலகில் நாம் சுழன்று கொண்டிருக்கிறோம். நம் உடலைக் கெடுக்கவென்று பல விடயங்கள் இருப்பதுபோல நம் மனதை மறக்கடிப்பதற்கும் மயங்க வைப்பதற்கும் ஏராளமான விடயங்கள் நம்மை சுற்றிலும் இருக்கின்றன. தொலைக்காட்சியில் நூற்றுக்கணக்கான அலைவரிசைகள், கம்பியூட்டரில் ஆயிரக்கணக்கான விளையாட்டுக்கள், வீடியோக்கள், கைத்தொலைபேசியில் குவியும் கவர்ச்சிகரமான சமூக வலைத்தளங்கள். இவற்றையெல்லாம் சில நிமிடங்கள் ஒதுக்கி வைத்துவிட்டு ஓரிடத்தில் இரண்டு கால்களையும் மடக்கி முதுகை நேராக்கி உணர்வுகளை உள்ளிருத்தி முகத்தில்



அமைதியைக் கொண்டு வந்து கண்களை மூடி "இறைவா என்று அமர்வ தற்கு அதிர்ஷ்டம் இருந்தால் மட்டுமே முடியும்" நம் நேரத்தையும் உடல் நலத்தையும் விழுங்கக்கூடிய எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு நாம் அமைதியாக வாழக்கூடிய நாட்கள் எத்தனை!

இந்த உலகில் நீண்டகாலம் வாழவேண்டும் என்ற ஆசை பலருக்கும் இருக்கிறது. அப்படி ஆயுள் வரை நாம் என்ன செய்யவேண்டும். காலத்தை செலவு செய்தால் காலத்தை பெற முடியும். காலத்தை எவ்வளவு விலை கொடுத்தாலும் வாங்க முடியாது என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் நாம் நினைத்தால் காலத்தை வாங்கலாம். எப்படி? காலத்தை நம் ஆரோக்கியத்திற்காகச் செலவு செய்தால் நம்முடைய வாழ்நாளை நீட்டித்துக் கொள்ள முடியும்.

காலத்தைச் செலவு செய்வது எப்படி? உங்க ளுக்கு இருக்கும் 24 மணிநேரத்தில் ஒரு மணி நேரத்தைச் செலவழித்தால் போதுமானது. செலவு என்பது கூட வேண்டாம். முதலீடு என்றே வைத்துக்கொள்ளலாம். எனவே உங்கள் ஆயுளும் ஆரோக்கியமும் அதிகமுள்ள மனிதர்களாக மாற யோகத்தைப் பயிலுங்கள்.

யோகக்கலையைப் பயிற்சி செய்வதன் மூலமாக உங்களை நீண்ட ஆயுள் உள்ளவர்களாக ஆரோக்கியம், சந்தோசம் உள்ளவர்களாக வாழ்க்கையில் நிறைந்த அமைதியும் நிம்மதியும் அடைந்தவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள். குழந்தைகளையும் பயிற்றுவித்து எதிர்காலத்தை ஒளிமயமாக அமைத்துக்கொள்ளவும்.

-சிவனடியான்-



சா.பிரகாஷன்,
தரம் 8, யா/ஹாட்லிக்கல்லூரி பருத்தித்துறை.

## அணிலும் புனிலும்

தத்தித்தத்தி நடக்கும் புனில்
தானே பாய்ந்து ஓடும் அணில்
கொத்தித்தின்னும் பறவை புனில்
கொறித்து உண்ணும் உயிரி அணில்

சாம்பல் நிறத்தில் இருக்கும் அணில்
தவிட்டு சிறத்துப் பறவை புனில்
நான்கு கால்களில் ஓடும் அணில்
இரண்டு கால்களால் தத்தும் புனில்

மூன்று அழகிய கோடுகளை முதுகில்
கொண்டது அழகு அணில்
எந்த நேரமும் ஏழு சகோதரிகள்
ஒன்றாய்ச் சேர்ந்து இருக்கும் புனில்
சோடி சோடி ஆக மரங்களில் மேல்
சுழன்று தாவும் சாம்பல் அணில்
குஞ்சு பொரிக்கும் பறவை புனில்
குட்டிபோடும் மிருகம் அணில்

கவிதா
ஏறாவூர்



தி.சதுர்ணவி,
தரம் 3பி,
யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

## பழமொழிகள்

- நித்திரை சுகம் அறியாது.
- நிழலின் அருமை வெயிலில் தெரியும்.
- நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் போவது போல்.
- நிறைகுடம் தளம்பாது.
- நின்ற வரையில் நெடுஞ் சுவர். விழுந்த அன்று குட்டிச் சுவர்.
- நீர் ஆழம் கண்டாலும் நெஞ்சு ஆழம் காண முடியாது.
- நீர் உள்ள மட்டும் மீன் குஞ்சு துள்ளும்.
- நீர் மேல் எழுத்து போல்.
- நீள நீளத் தெரியும் மெய்யும் பொய்யும்.
- நூலளவே யாகுமாம் நுண்ணறிவு.
- நெருப்பு இல்லாமல் புகை எழும்புமா?
- நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்கும் பாயும்.
- நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.
- நொறுங்கத் தின்றால் நூறு வயது.
- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
- நோய் கொண்டார் பேய் கொண்டார்.
- பகலில் பக்கம் பார்த்துப் பேசு இரவில் அதுதானும் பேசாதே.
- பகுத்தறியாமல் துணியாதே. படபடப்பாகச் செய்யாதே.
- பகைவர் உறவு புகை எழு நெருப்பு.
- பசியுள்ளவன் ருசி அறியான்.
- பசி வந்திடில் பத்தும் பறந்து போம்.
- பஞ்சும் நெருப்பும் ஒன்றாய்க் கிடக்குமோ?









**தீவகத்தின் கல்வி வளர்ச்சிக்கு உங்கள் ஆலோசனை என்ன வியாசரே?**

**பண்ணையில் மருத்துவபீட மாணவியை வெட்டிக் கொன்ற கொடுஞ் செயலை என்ன சொல்ல?**

**முள்ளிவாய்க்கால் தமிழனின் முடிவா?**

**பரமேஸ் — வதிரி**

**ரஜினிகாந்தை சந்தித்தால் தமிழர்களின் பிரச்சினை தீர்ந்துவிடுமா?**

ஏதோ மோடியைச் சந்தித்து விட்டால் அவரின் பொக்கற்றில் இருந்து தமிழர்களுக்கான தீர்வை எடுத்து கையோடு கொடுத்து விட்டிருப்பார் என்பது போலக் கோட்கிறீரே.

முதலில் குறிகிய வட்டத்தில் நின்று யோசிப்பதை விடுத்து கொஞ்சம் வெளி உலகத்திற்கு வாருங்கள் பிளீஸ்.

**சுதன் — கரவை**

**பௌத்த திணிப்புகள் பற்றி எம் தலைமை மூச்சே விடுவதில்லையே ஏன்?**

இல்லையே குண்டு வெடிக்கும், போர் மூளும், பாரிய ஆர்ப்பாட்டம் நடக்கும், விளைவுகள் வேறு மாதிரி இருக்கும், கடுமையாகக் கண்டிக்கின்றோம், எம் இறையாண்மையை யாரும் தட்டிப்பறித்துவிட முடியாது சர்வதேச சமூகமே இதற்கான தீர்வைத் தரவேண்டும் என்று எம் தலைமைகள் அறிக்கை விட்டார்களே பத்திரிகைகளில் வாசிக்கவில்லையா? ஓ... அறிக்கை மட்டும் தான் விட்டார்கள்.

**சுதன் — குப்பிளான்**

**இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் எப்படிப் புலிகளால் கொல்லப்பட்டிருப்பார்கள்?**

அடப்பாவி டேய்.
சும்மா இருக்கிற என்ற வாய்க்குப் பொரியைப் போட்டு என்னை பொரிய வைக்கப் போறியேடா.

இப்ப இதைப்பற்றிப் பேசி என்னைப் புண்ணாக்க என்ற உடம்பிலை தெம்பில்லையடா தம்பி கடவுள் இருக்கிறான் அவன்ர தீர்ப்பிலை இருந்து யாரும் தப்ப முடியாது. விடு அவன் பார்த்துக் கொள்வான்.

**திகலன் — யாக்கரு**

**தமிழ் தலைமைகளை தமிழ் ஊடகங்கள் ஒன்றிணைக்காதா?**

ஒன்றுபடச் சொல்லி எழுதி எழுதி எத்தனை பேனாக்கள் தீர்த்துவிட்டன. ஒன்றுபடச் சொல்லி கத்திக் கத்தி எத்தனை ஆசிரியர்களின் தொண்டைத் தண்ணீர் வற்றிவிட்டது.

ஒன்றுபடச் சொல்லி நடயாய் நடந்து எத்தனை பேரின் செருப்புத் தேய்ந்துவிட்டது. அவர்கள் ஒன்றுபடவே மாட்டார்கள். ஆனால் எதிர்ப்பு அறிக்கை மட்டும் எழுதிக் கொண்டே இருப்பார்கள்.

தமிழர் நலனில் அக்கறை இருந்தால் அவர்கள் ஒன்று படுவார்கள். அந்த எண்ணம் அவர்களிடம் இருப்பது போலத் தெரியவில்லை.

**தர்ணிகா — கவுந்தில்**

**முள்ளிவாய்க்கால் தமிழனின் முடிவா?**

முள்ளிவாய்க்கால் ஒன்றும் தமிழினத்தின் முடிவல்ல அதுவே தமிழன் என்ற அடையாளத்தின் ஆரம்பம்.

எம் இனத்தின் குருதி கொப்பளித்து சென்நிறமாகிய நந்திக்கடல் அதற்குச் சாட்சியாய் கிடக்கிறது.

இயற்கையைக் கட்டுப்படுத்த எந்த சக்தியாலும் முடியாது.

தமிழனுக்கு நீதிதர அந்த இயற்கையே சாட்சியாகும்.

**லாவன்யா — தொண்டைமானாறு**

**ஐ.தே.கவின் தலைமை மாறுமா?**

தலைமை மாறினால் தமிழர் தலைவிதி மாறும் என்றால் இது பற்றிப் பேசலாம்.

மாறாத தலைவிதியில் இந்த மாற்றம் பற்றிப் பேச எமக்கென்ன தலைவிதியோ?

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**கதிர் — அல்வாய்**

**கூட்டமைப்பு செய்தவற்றைத் தானே மற்றைய தமிழ் உறுப்பினர்களும் செய்கிறார்கள். இவர்கள் தமிழ் மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தரவா போகிறார்கள்?**

பெரும்பான்மை சிங்கள அரசு நினைத்தாலே ஒளிய வேறு யாராலும் தமிழர் பிரச்சினை தீர்க்க முடியாது.
முதலில் அதைப் புரிந்து கொள்ளுங்கள்.

என்ன கூட்டமைப்பு ஆட்சியாளர்களிடம் எதிர்ப்பது போல எதிர்ப்புப் பாசாங்கு காட்டிக் கொண்டு எமக்குத் துரோகம் செய்தது. அதே மற்றயவர்கள் அரசுடன் இணைந்து ஏதோ எமக்கு வித்தை காட்டுகிறார்கள் அவ்வளவு தான்.

**சயன் — யாழ்ப்பாணம்**

**பண்ணையில் மருத்துவபீட மாணவியை வெட்டிக் கொன்ற கொடுஞ் செயலை என்ன சொல்ல?**

காதல்-சந்தேகம்-தாழ்வுச்சிக்கல் என்கின்ற எல்லைக்குள் சிக்குண்டு ஒரு உயிர் அநியாயமாகப் போகிறது என்றால் அதை ஏற்கமுடியாது.

இறந்தது சிங்கள மாணவி இறந்த இடம் வடக்கு. கொலை செய்தவர் அவரின் காதலன்-கணவன் அவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரை உடன் கைது செய்தது தமிழருக்கு ஆறுதல் அளிக்கும் விடயமே.

இல்லையேல் இந்தக் கொலையை வைத்து தெற்கு இனவாத அரசியல்வாதிகள் மீண்டும் புலிச்சாயம் பூச ஆரம்பித்திருப்பார்கள். ஒரு பெரும் முறுகல் தவிர்ந்தது என்ற மன நிம்மதியுடன் தமிழர் பெருமூச்சு விட்டனர்.

**யாழினி — கிளிநொச்சி**

**மாற்றம் ஒன்றே மாறாதது. இதற்கு உங்கள் கருத்து என்ன வியாசர் மாமா?**

ஒரு நிறுவனம் இருக்கிறது. அதில் முகாமையாளர் என்ற பதவியை எடுத்துக்கொள்வோம். அந்தப் பதவிக்குரியவர் மாறிக் கொண்டே இருப்பார். ஆனால் அந்தப் பதவி மட்டும் அப்படியே இருக்கும்.
இதுதான் அது.

**டிலக்ஷன் — கற்கோவளம்**

**இந்த ஆண்டின் தொடக்கம் கொலைகளுடன் தொடங்கியுள்ளதே?**

என்ன செய்ய மற்றைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2020 கதி கலக்கும் ஆண்டாகத் தான் ஆரம்பித்திருக்கிறது. அவுஸ்திரேலிய காட்டுத்தீயில் தொடங்கி ஈரான்-அமெரிக்க முறுகல் மூன்றாம் உலகப் போர் என்று பேசும் அளவில் இருக்கிறது நிலை.

**ஆர்.ஜே.அன்ரனி — ஊர்காவற்றுறை**

**தீவகத்தின் கல்வி வளர்ச்சிக்கு உங்கள் ஆலோசனை என்ன வியாசரே?**

அதிக கல்விமான்களை உருவாக்கிய ஓர் அற்புத பூமி தீவகம்.

போர் இடம்பெயர்வு என்பவற்றால் செல்வம் கொளித்த அந்தப் பூமி தேடுவாரற்று வறண்டு கிடக்கிறது.

இப்போது அதற்கு எம் கல்வியாளர்கள் வைத்திருக்கும் பெயர் கஷ்ட பிரதேசம். இப்படிச் சொல்லிச் சொல்லியே அதை கஷ்ட பிரதேசம் ஆக்கிவிட்டார்கள்.

முதலில் அந்த சொற்பதத்தைத் தூக்கி எறிந்து விட்டு சேவை என்ற மனநிறைவுடன் பணி செய்யுங்கள். மீண்டும் தீவகம் முதலிடத்திற்கு வரும்.


**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

# தண்டனை இதுவல்ல

**மதுசுதன்**

சகோதரா
நீ செய்ததை சரியா பிழையா என
தர்க்கிக்க முயலவில்லை
நீ எடுத்த முடிவு உனக்கு
அக்கணம் சரியாகப்பட்டிருக்கலாம்
இனிவரும் கணங்களில்
அது பிழையாகக் கூட தோன்றலாம்
அது பற்றி ஆராயவும் ஆவலில்லை.
உன் காதலின் நீளமும்,
அகலமும், ஆழமும் என
அதன் கனவளவுகளை
உன்னாலும் அவளாலும்
தான் கணக்கு பார்க்க முடியும்
எத்தனை வார்த்தைகள்
எத்தனை முத்தங்கள்
எத்தனை அர்ப்பணிப்புக்கள்
எத்தனை அரவணைப்புக்கள்
எத்தனை அந்தரிப்புக்கள்
எத்தனை அந்தரங்கங்கள்
எத்தனை சண்டைகள்
எத்தனை சமாதானங்கள்
எத்தனை விட்டுக்கொடுப்புக்கள்
எத்தனை பரிசுகள்
எத்தனை ஸ்பரிசங்கள்
எத்தனை உதவிகள்
எத்தனை உபத்திரவங்கள்
எத்தனை தவிப்புக்கள்
எத்தனை பரிதவிப்புக்கள் என
அத்தனையும் உங்களுக்குள்
மட்டும் தெரிந்த
சிதம்பர இரகசியங்கள்
காவலரணில் காவல்காத்த போதும்
உன்னுள் காதல்பூத்த காவலரணாக
அவளே இருந்திருக்கக் கூடும்
அவளை முன்னேற்ற
வேண்டும் என்றுகூட
முன்னரணில் நீ காவல்
கிடந்திருக்கக் கூடும்
அதுபற்றி எமக்கொன்றும் தெரியாது
அது நீ வெட்டிச்சாய்த்த அவளுக்கும்
அவள் குத்திச்சாய்த்த
உனக்குமே வெளிச்சம்
பல கடற்கரைகளில்
காதல் பேசி திரிந்தபோதும்
பண்ணை கடற்கரையில்
அவளுயிர் பிரிந்தபோதும்
என்னென்ன நிகழ்ந்திருக்கும் என
அந்த கடற்கரைக்கே வெளிச்சம்
முதுகில் யார் குற்றியது
முகத்தில் யார் குற்றியது என்று
உனக்கோ இல்லை
குற்றிச்சாய்ந்த
அவளுக்கோ இல்லை
சாய்ந்து கிடந்த அவள்
குடைக்கோதான் தெரியக்கூடும்
யார் ஏமாற்றியது
யார் ஆழமாக குற்றியது என்பதும்
உங்களுக்கே வெளிச்சம்
ஒருவேளை
அன்பு எனும் பேர்கொண்டு
நம்பிக்கை துரோகம்
எனும் வாள்கொண்டு
அவளுன் மார்பில் சாய்ந்து
முதுகில் குற்றியிருந்தாலும்
நீ முகத்தில் குற்றியவள்
உயிர் பறித்ததை
எப்படியும் ஏற்றுக்கொள்ள முடியாது
ஏனெனில்
அவள் இனி உயிருடன் இல்லை
நீ இனி உலகத்தின் வெளியே இல்லை
கொடுப்பதற்கு இங்கு சாவை விட
பெரிய தண்டனைகளுமுண்டு

## இப்படியும் சிலர்



ஒரு சிறைக்கைதி
தன் உள்ளக்கிடக்கைகளை
வரிசைப்படுத்தி கவி வடிக்கிறான்
படித்துப் பார்த்தவர்கள் பாராட்டுகிறார்கள்
பொறாமைப்பட்ட சிலர் கிழிக்க முனைகிறார்கள்

ஒரு சிறைக்கைதி
கதை எழுதிப்பரிசு பெறுகிறான்
வழிவிட்டவர்கள் வாழ்த்துகிறார்கள்
காழ்ப்புணர்வு கொண்ட சிலர்
வழிமறித்து மனம் வெதும்புகிறார்கள்

ஒரு சிறைக்கைதி
விதவிதமாய் கைப்பணிகள் செய்கிறான்
விருப்புள்ளவர்கள் ஊக்கப்படுத்துகிறார்கள்
இயலாத சிலர் பிழைபிடித்து பெயர் வாங்கி
தமக்குள் பெருமையும் கொள்கிறார்கள்

ஒரு சிறைக்கைதி
கலைகள் பயின்று நிலை உயர
உடனிருப்பவர்கள் தட்டிக் கொடுக்கிறார்கள்
எரிச்சல் பிடித்த இன்னும் சிலர்
இடைஞ்சல் செய்து தட்டிக் கழிக்கிறார்கள்
எம்மவர்களின் மகத்தான துயரங்களில் ஒன்று
ஒருவனது நற்செயல்களை கண்டுகொண்டால்
எப்படியாவது தடைகளைப்
போட்டு தடுக்க நினைப்பது

**விவேகானந்தனூர் சதீஸ்**

## வாழ்க்கை வாழ்வதற்கே 04

எப்போதும் உங்களை
தனிமைகளுக்குப் பழக்கப்படுத்துங்கள்
அதற்காய் தனித்து வாழ்வதென்று
பொருளல்ல
இந்த உலகத்தை எதிர்கொள்ள
தனிமை ஒரு நல்ல ஆசானாகிறது

வீரம் என்பது கொடிய சிங்கத்தை
எதிர்த்துப் போரிடுவது மட்டுமல்ல
மடிந்த சிங்கத்தை
அவமதிக்காமையுமே

உன் வெற்றியை இந்த
உலகமே கொண்டாடும்
அப்போது மங்காத புகழென்ற
மயக்கம் தலைக்கேறும்
நான் என்ற நான்
இதயத்தை ஆக்கிரமிக்க ஆரம்பிக்கும்
அடித்து "நான்" என்பவனை
முடித்து மூலையில் போடுங்கள்

இல்லையேல் உங்கள் முடிவு
அந்த நான் அவன் கைகளில்
என்பதை மறந்து விடாதீர்

வெற்றிகள் உங்களைத் தேடி வரும்போது
நல்லவர்களுடன் சில
நரிகளும் உங்களுடன் இணைவர்
இனங்காணுங்கள்- நரிகளை
இழுத்தெறியுங்கள் இல்லையேல்
உங்களைத் தோல்விகள் இழுத்து விழுத்தும்

உங்களுக்குப் பிடித்தது எதுவோ
அதைத் தயங்காமல் செய்யுங்கள்
அது மற்றவர் மனதை
காயப்படுத்துகிறது என்றால்
மறுகணமே மன்னிப்புக் கேளுங்கள்
அது உங்களை ஒருபடி மேலுயர்த்தும்

**மாவை. நா.கஜேந்திரன்**

## மௌனத்தின் தேடல்- 482



## விதியின் வரைவு

நம் தேசத்தின்
அரசியல் ஆட்டத்தில்
தோற்றுப்போன
விழிமூடா முகங்களோடு
வலிசுமந்து நாமிங்கே நலிவது
மீண்டும் மீண்டும்
ஆதாயம் பண்ண வலைவிரிக்கும்
நம் அரசியல் வேடர்களின்
கண்களுக்கு தெரிவதில்லையா?

**நல்லூர் தேன்நிலா**

## நீ அழிவதற்குள்

தளிருடலில் ஒட்டுத்
துணியுமில்லை முகத்தில்
தெளிவுமில்லை கண்ணீரில்
தெரிகிறது கவலை கண்களால்
புழிகிறது இதயத்தைப்
பூரிப்பாய் ஆக்குதற்கு நீ
அழிவதற்குள் அரவணைத்து
ஆன்மா சாந்தியடையும்
ஆவன செய் மானுடமே

**கந்தன் மைந்தன்**
**காவலூர்**

## மீண்டும் வேண்டும்

நம்நாட்டில் இவளைப்போல்
யுத்தம் சப்பித் துப்பிய
எச்சில்களாய்
பல சிறுமிகள் மனதில் தினம்
ஏக்கத்துடன் வாழ்கிறார்கள்
உறவுகளை இழந்த அவர்களுக்கு
ஆறுதல் சொல்லி அன்புடன்
அரவணைக்க இந்தப்பூமியிலே
மீண்டும் இன்னொரு
அன்னை தெரேசா அவதரிப்பாளா?

**சு.ஜெயரூபன்**
**பருத்தித்துறை**

## திடங்கொண்ட நெஞ்சம்

உடல் மொழியால்
உளம் உருக்கும்
திடம் கொண்ட நெஞ்சும்
தீய்ந்தழியும் பார்வை
தடம்பதிக்கும் போரின்
தாங்கொணா வடுவால்
இடங்கொடு இரங்கி
இதயத்தில் தாங்குதற்கு
இவ்வுயிரை ஏற்றிடுக

**சிவமணி, சுருவில்**

## உன் ஆட்சி

கலங்கிடும் கண்மணியே!
காரணம் யாமறியோம்
சத்தியத்திற்கு
சோதனையோ
சரித்திரத்திற்கு
நீதான் சாதனையோ!
விழிகளில் துளிகள் ஏன்!
வழிகளில் வலிகள் ஏன்!
தன்னம்பிக்கை என்னும்
ஆயுதம் கொண்டு
நீ போராடு
தரணி எங்கும்
உன் ஆட்சி
நாளை நடைபோடும்

**எஸ்.அகல்யா**
**சண்டிலிப்பாய்**

## கண்ணிரெண்டும்

கண்ணிரெண்டும் முழுக்
கவலையையும் கொட்டினவே
மண் பிறந்த மானுடமே
மன உறுதி பெற்றிடுங்கள்
கண்போன பின் சித்திரத்தை
களித்திடுதல் ஆகிடுமா
பெண்பிள்ளையாய் பிறப்பு
பெற்றவரை இழந்ததனால்
விண்சொரியும் மாமழையாய்
விழிநீரே கொட்டுறதே
எண்ணங்கள் எழட்டும்
இவ்வுயிரைக் காக்கட்டும்

**சிவனடியான்**
**சரவணை**

## மௌனத்தின் தேடல் -483



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## திரண்டெழுக

கண்ணீரேன் கண்மணியே
கடும் போரில்
காணாமல்
எண்ணிறந்தோர்
ஆக்கியதில்
இக்குழந்தைப் பெற்றோரும்
பண்பற்றோர் பறைசாற்றும்
பொய்வார்த்தை ஏமாற்றம்
திண்ணம் இழந்தனையோ
தீன் உடை உறையுளிலாரை
தேற்றுதற்கு மானுடரே
திரண்டெழுக
இறைபணியாம்

**க.தவமணிதாசன்**
**நல்லூர்**

## யார் வாழவைப்பார்?

பிஞ்சுக் குழந்தைதனை
வஞ்சகப் பேய்கள்
போதை தலைக்கேற
காமக்குரோதங்கொண்டு
வன்புணர்வுக்காளாக்கினரோ
கண்போலப் போற்றி வளர்த்த
அன்னை தந்தையுமில்லை
போடச் சட்டையுமின்றி
போவதற்கு இடமுமின்றி
வாடிக்கிடக்கும் உன்னை
வாழவைக்க யாரிருக்கார்

**துரை, தென்மட்டுவில்**

## பெண்ணென்றால் கண்ணீரோ

புவியில் உதித்த அன்றே
பெண்ணின் கண்ணீர்
சொந்தமான வற்றாத சொத்தாகிவிட்டது
சொந்த பந்தங்களை
இழந்தாயோ அநாதையாக
தனிமைப்படுத்தப்பட்டாயா?

**அபிகுலமாலிகா, சங்கானை**




# மாற்றுதவி

இருள் விலகிக் கொண்டிருந்த அந்த அதிகாலை வேளையில் மதியழகன் வீட்டு வாசலில் ஒரு ஆட்டோ வந்து நின்றது. ஆட்டோவின் ஹோர்ன் சத்தம் கேட்டு நித்திரையில் ஆழ்ந்து போயிருந்த மதியழகனும் மனைவியும் திடுக்கிட்டு எழும்பி வாசலுக்கு விரைந்தனர்.

அங்கே ஆட்டோவிலிருந்து சாமான்களை இறக்கிக் கொண்டிருந்தார் சிவசேகரன். மைத்துனரைக் கண்ட ஆச்சரியத்தில் மதியழகனுக்கு கை,கால் ஓடவில்லை. "என்ன அத்தான் சொல்லாமல் கொள்ளாமல் வந்திருக்கிறியள்?" வியப்புடன் வார்த்தையை உதிர்த்தவனைப் பார்த்து சிவசேகரன் புன்னகைத்தார்.

"ஒரு சர்ப்பிரைஸாய் இருக்கட்டுமே என்று பார்த்தன்" சொல்லிக் கொண்டே அவர் ஆட்டோக்காரனுக்கு பணத்தைக் கொடுத்து அனுப்பி வைக்க மதியழகனும் மனைவியுமாக அவரது பயணப் பொதிகளை உள்ளே எடுத்துச் சென்றனர். அவர்களுடன் அவரும் கூட நடந்தார்.

"இருந்தாப்போல வெளிக்கிட்டனான். அதுதான் அறிவிக்க முடியாமல் போய்ச்சுது"

"என்ன அத்தான் சொல்லுறியள். அறிவிக்கிறது பெரிய வேலையே. ஒரு கோல் குடுத்திருக்கலாம் தானே"

"சரி சரி அதுக்கிப்ப என்ன. நான்தான் வந்து சேர்ந்திட்டனே" மதியழகனின் மனைவி ஆவி பறக்கும் தேநீரைக் கொண்டு வந்து நீட்டினாள்.

"முதல்ல இதைக் குடியுங்கோ அண்ணை"

தேநீரை வாங்கிப் பருகியவர் சொன்னார்.

"நான் ஒருக்கா குளிக்கவேணும். அப்பத்தான் பயணக்களை தீரும்"

"அதுக்கென்ன குளிக்கலாம். அதுசரி உங்கட திசர் விஜயத்தைப் பற்றிச் சொல்லுங்கோ. முந்தநாள் அக்காவோட கதைச்சனான். அவகூட ஒரு வார்த்தை சொல்லேல்ல.

" அவ எப்பிடிச் சொல்லுவா. நேற்று நான் சங்கீதாவோட கதைச்சனான். பிள்ளை தனக்கு கல்யாணம்என்று சொல்லிச்சுது. உடனேயே நான் கிளம்பிட்டன்.

"எட உதுதானே விசயம்"

மதியழகனுக்கு சப்பென்று இருந்தது. சில வருடங்களுக்கு முன் சிவசேகரன் குடும்பத்தோடு அவுஸ்திரேலியாவில் இருந்து மதியழகன் வீட்டிற்கு வந்திருந்தார். அப்போதுதான் அவர் எதேச்சையாக சங்கீதாவை சந்திக்க நேர்ந்தது. மதியழகன் வீட்டாருக்கு சமையல் செய்யும் பொறுப்பு சங்கீதாவின் அம்மாவுடையது. ஆம், கணவனை இழந்த அவள் வசதி படைத்த நான்கு வீடுகளுக்குப் போய் சமையல் செய்து கொடுத்து அந்த ஊதியத்தில் மகளையும் படிக்க வைத்து குடும்பத்தையும் நடத்தி வந்தாள்.

அன்று அவளுக்குக் காய்ச்சல். தலைதூக்க முடியாமல் தவித்தவள், தன்னை நம்பியிருக்கும் மதியழகன் வீட்டிற்குப் போய் சமைத்துக் கொடுக்க முடியவில்லையே என அங்கலாய்த்தாள். அம்மாவின் ஆதங்கத்தைப் புரிந்துகொண்ட சங்கீதா, "அம்மா! நீங்கள் கவலைப்படாதையுங்கோ. நான் போய் சமைக்கிறேன்" என்று கூறி ஆறுதலளித்தார்.

பாடசாலைக்கு மட்டம் போட்டுவிட்டு மதியழகனது சமையலறையில் சுழன்று கொண்டிருந்தவளை தற்செயலாக அங்கு வந்த சிவசேகரன் கண்டுவிட்டார். அவளைத் துழாவித் துழாவி விசாரித்து அவர்களது ஏழ்மை நிலை பற்றி அறிந்து கொண்டவரது மனதில் ஒரே உளைச்சல் தோன்றி அவரை. அலைக்கழிக்கத் தொடங்கியது. நீண்ட நேரமாகச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்தார். விளைவு...

சங்கீதா எதுவித இடையூறுமின்றி கல்வியைத் தொடர்ந்தாள். அவளது கல்வியெனும் பயிருக்கு சிவசேகரன் பணம் எனும் நீரை வார்த்து வளர்த்து விட்டார். சங்கீதாவும் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்று ஒரு ஆசிரியராக நியமனம் பெற்று விட்டாள். அவள் உழைக்கத் தொடங்கியதும் தான் கல்விக்காக பட்ட கடனை மீளளிக்க முன்வந்தபோது சிவசேகரன் அதை மறுத்து விட்டார்.

"பிள்ளை சங்கீதா! நான் இங்கு நல்ல வசதியாய் இருக்கிறன். நான் உமக்குச் செய்தது ஒரு சிறு உதவி தான். நன்றாகப் படிக்கக்கூடிய ஒரு பிள்ளையை படிக்க வைத்துவிடவேண்டுமென்பது என்னுடைய குறிக்கோள். அதேபோல் உம்மிடமிருந்து நான் எதிர்பார்ப்பது ஒன்றுதான். யாராவது படிக்க வசதியில்லாமல் திண்டாடும் போது அவர்களுக்கு உதவி செய்து அவர்களை முன்னேற்றி விடவேண்டும்"

சங்கீதாவும் அவரை மறந்துவிடவில்லை. மாதம் ஒருமுறை அவருடன் தொடர்பு கொண்டு கதைப்பாள். நேற்று அவர் கதைக்கும்போது அவரிடம் கூறியிருந்தாள்.

"அங்கிள்! அம்மாவுக்கு இப்ப அடிக்கடி தலைசுற்றல், மயக்கம் என்று வருத்தம் வந்து கொண்டிருக்குது. அவ எனக்கு கலியாணம் செய்து வைக்கவேணும் என்று ஒரேபிடியா இருக்கிறா. அதுதான்..."

" சொல்லும் பிள்ளை. அவ சொல்லுறது நியாயம் தானே"

"என்னோட கம்பஸில படிச்ச ஒரு மாஸ்டரைத்தான் செய்ய இருக்கிறன். அம்மாவுக்கு அதில அவ்வளவு விருப்பமில்லை"

"ஏன் பிள்ளை மாப்பிள்ளைக்கு என்ன குறைச்சல்"

"அப்பிடி ஒன்றுமில்லை அங்கிள். பத்து வருசத்துக்கு முந்தி இறுதிக்கட்டப் போரில முழங்காலுக்குக் கீழ ஒரு காலை இழந்தவர். இப்ப செயற்கைக்கால் போட்டிருக்கிறார். உங்களுக்கு இதிலை சம்மதம்தானே"

"உம்முடைய இந்த முடிவை நான் பாராட்டுறன். எனக்கு உதில பூரண சம்மதம்.

"அங்கிள் வருகிற இருபத்தியிரண்டாம் திகதி செல்வச்சந்நிதியில சிம்பிளா கல்யாணத்தை வைக்கலாம் என்று முடிவு பண்ணியிருக்கிறம். அவ்வளவு தூரத்தில இருந்து உங்களால வரமுடியாதுதானே"

சிவசேகரன் பதில் எதுவும் சொல்லவில்லை. ஆனால் திருமணத்தில் பங்குபற்றுவதென தீர்க்கமான முடிவு எடுத்துக்கொண்டார். தான் எடுத்த முடிவை செயலிலும் காட்டிவிட்டார்.

"மச்சான்! உங்களுக்குச் சொல்லேல்லையே" துவாலையினால் தலையைத் துவட்டியவாறு மதியழகனிடம் கேட்டார்.

"சொன்னவைதான் ஆர் போறது?" சிரத்தையில்லாமல் வந்தது பதில்.

"ஏனடாப்பா சொன்னால் போகத்தானே வேணும்" இப்போது மதியழகனின் மனைவி முந்திக்கொண்டாள்.

"சரசு எங்கட வீட்டில வருசக்கணக்காய் சமையல் காரியாய் இருந்தவள். இப்ப மகள் படிச்சு வேலையாகின பிறகு சமைக்கப் போறதில்லை. அவை இப்ப பெரிய ஆக்கள்"

சிவசேகரனுக்கு அவளின் கதையைக் கேட்க எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. "தங்கச்சி! உது உம்முடைய பிழையான அபிப்பிராயம். இத்தனை காலமும் கஷ்டப்பட்டு உழைத்த தாயை மகள் வேலையாகினதும் இனியாவது அம்மா ஓய்வாய் இருக்கட்டும் என்று நினைச்சிருக்கலாம் தானே. அதை பிழை என்று நான் சொல்ல மாட்டன்"

காலை உணவு அருந்தியதும் மதியழகனையும் அழைத்துக்கொண்டு சிவசேகரன் சங்கீதா வீட்டிற்குப் புறப்பட்டு விட்டார். அவரை நேரில் கண்டதும் சங்கீதாவுக்கும் தாய்க்கும் ஆச்சரியம் தாங்க முடியவில்லை. அந்தக் கடவுளே வானிறங்கி வந்துவிட்டாற் போல் அப்படியொரு மகிழ்ச்சி. தாயும் மகளும் அவரைக் கையெடுத்துக் கும்பிட்டு வரவேற்றனர்.

சிவசேகரனும் சுகநலம் விசாரித்துவிட்டு மாப்பிள்ளையைப் பற்றியும் தீர விசாரித்து அறிந்து கொண்டார். மதிழயகன் இவர்களுடைய பேச்சுவார்த்தைகளில் ஒட்டாது அருகிலிருந்த பத்திரிகையை எடுத்து அதிலிருந்த செய்திகளைப் புரட்டத் தொடங்கினான்.

அவர்கள் அளவளாவிக் கொண்டிருந்தபோது வீட்டு வாசலில் ஒரு ஆட்டோ வந்து நின்றது. அதிலிருந்து ஒரு அம்மாவும் பையனும் இறங்கினார்கள். பையன் சில கொள்கலன்களை ஆட்டோவிலிருந்து இறக்கிவந்து வீட்டினுள் வைத்தான். சங்கீதா அவனைச் செல்லமாகக் கடிந்து கொண்டாள்.

"விமலன் அம்மாவையும் கஷ்டப்படுத்தி உமக்கேன் இந்த வேலை.

"நீங்கள் ஒன்றும் சொல்லாதேயுங்கோ மிஸ்" பையனையும் தாயையும் அழைத்துவந்து அமர வைத்து உபசரித்தார்கள். சரசுதான் சிவசேகரனிடம் முறையிட்டாள்.

"ஐயா! நாங்கள் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் பலகார வகைகள் செய்து கொண்டு வந்திருக்கினம். நினைக்க எனக்கு கஷ்டமாயிருக்கு"

"ஏனம்மா அப்பிடிச் சொல்லுறியள். விமலனுக்குக் கல்விப் பிச்சை போட்டது சங்கீதா ரீச்சர் தானே. அவ மட்டும் தக்கசமயத்தில அவனுடைய படிப்பை பொறுப்பேற்காவிட்டால் இப்ப அவன் கூலிவேலைதான் செய்து கொண்டிருப்பான். அந்த நன்றியை நாங்கள் மறக்கேலுமோ. ஏதோ எங்களாலான மாற்றுதவி என்று வைச்சுக்கொள்ளுங்கோ"

சிவசேகரனுக்கு ஒன்றும் புரியவில்லை. சங்கீதா விளக்கமளித்தாள். " அங்கிள்! விமலன் ஏ.எல். படித்துக் கொண்டிருந்தவன். திடீரென வகுப்புக்கு வாறதை நிறுத்திவிட்டான். நான் தான் அவனுக்கு வகுப்பு ரீச்சர். விசாரிச்சுப் பார்த்ததில வீட்டுக் கஷ்டம் காரணமாக அவன் மேசன்மாரோட •வேலைக்குப் போறதாகக் கேள்விப்பட்டன்.

நல்லாய்ப் படிக்கக்கூடிய பிள்ளை. அவனைக் கூப்பிட்டுப் படிப்பைத் தொடர வைச்சன். இப்ப அவனுக்கு மெடிசின் கிடைச்சிருக்கு. இன்னும் அஞ்சு வருசத்தில அவன் ஒரு டொக்டர். நீங்கள் எனக்குச் செய்த உதவியை நான் அவனுக்குச் செய்தன். அவ்வளவு தான்"

சங்கீதா கூறி முடித்ததும் சிவசேகரன் தனது கண்களில் பனித்த நீரைத் துடைத்துக் கொண்டார்.

"சாங்கீதா! நீர் செய்த உதவி காணும். இனிமேல் அவனைப் படிக்க வைப்பது எனது பொறுப்பு" அவரது குரல் தழுதழுத்தது.

மலரன்னை

# மியன்மார், சீனாவின் அடுத்த இலங்கை!



சீன ஜனாதிபதி சீ ஜின்பிங் அண்மையில் மியன்மாருக்கு மேற கொண்ட இருநாள் விஜயம் பல காரணங்களினால் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. 19 வருடங்களுக்குப் பிறகு மியன்மாருக்கு சீன ஜனாதிபதி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது விஜயமாக இது அமைந்தது மாத்திரமல்ல. 33 உடன்படிக்கைகளும் அந்த விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்டன. மியன்மாருக்கும் சீனாவிற்கும் இடையில் இந்தளவு பெரும் எண்ணிக்கையிலான உடன்படிக்கைகள் முன்னர் ஒருபோதும் கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. அவற்றில் 13 உடன்படிக்கைகள் உட்கட்டமைப்புத் திட்டங்களுடன் தொடர்பு பட்டவையாகும். கோடிக்கணக்கான டொலர்க ளைக் கடனாக வழங்குவ தற்கு மேலதிகமாக சீனாவே இந்த உட்கட்ட மைப்புத் திட்டங்களை செயற்படுத்து கிறது.

ரோஹிஞ்யா முஸ்லிம்களைக் கொடுமைப்படுத்துவதற்காக உலக நாடு களிடமிருந்து பெருமளவு நெருக்குதல்களை மியன்மார் எதிர்நோக்கு கின்ற நிலையில் சீனாவினால் வழங்கப்படுகின்ற நிதி மற்றும் ஏனைய ஆதரவு தருணப் பொருத்தமானது என்பதுடன் மியன்மாரில் பெரிதும் வரவேற்கப்படக்கூடியதும் ஆகும். பதிலாக மியன்மாரின் உட்கட்ட மைப்புத் திட்டங்களில் சீனா செய்கின்ற முதலீடு அதன் மண்டலமும் பாதையும் செயற்றிட்டத்தை **(Belt and Road Initiative)** பெரிதும் மேம்படுத்தும்.

சீ ஜின்பிங்கின் விஜயத்தின் போது இருதரப்பினரும் சீன - மியன்மார் பொருளாதார வழித்தடத்தை **(China - Myanmar Economic Corridor)** அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்களைத் துரிதப்படுத்தி முன்னெடுக்க இணங்கிக்கொண்டனர். மியன்மாரின் மேற்குப் பகுதியிலுள்ள ராக் கைன் மாநிலத்திலுள்ள பிரதான நகரான கியோபியூவில் விசேட பொரு ளாதார வலயத்தை அபிவிருத்தி செய்வதற்காக இருநாடுகளும் சலுகை உடன்படிக்கை ஒன்றிலும் பங்குதாரர் உடன்படிக்கை ஒன்றிலும் கைச்சாத்திட்டிருக்கின்றன.

கியோபியூவில் ஆழ்கடல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு மேலதிகமாக சீனா எரிவாயு மற்றும் எண்ணெய் குழாய் இணைப் புக்களை நிர்மாணித்திருக்கிறது. தனது யுனான் மாகாணத்தை கியோபி யூவுடன் இணைக்கும் தரைமார்க்கப் போக்குவரத்தை சீனா மேம்ப டுத்தியிருக்கிறது. ஆபிரிக்காவில் இருந்தும், மேற்காசியாவிலி ருந்தும் எண்ணெய், எரிவாயு மற்றும் ஏனைய சரக்குகள் இந்த மார்க்கத்தின் ஊடாக சீனாவிற்கு ஏற்கனவே கொண்டு செல்லப்ப டுகின்றன. சீ ஜின்பிங்கின் விஜயத்தின் போது பூர்த்தி செய்யப்பட்ட உடன்படிக்கைகள் வங்காள விரிகுடாவில் சீனாவின் பிரசன்னத்தைப் பலப்படுத்தும் என்பது மாத்திரமல்ல, கியோபியூவின் ஊடாக குறுகிய தூர வாணிப மார்க்கத் தையும் அவை வழங்குகின்றன. இதன்மூலமாக கப்பற்போக்குவரத்து சந்தடி மிக்க மலாக்கா நீரிணையில் சீனா தங்கியிருப்பதைக் குறைக்கமுடியும்.

மக்களின் ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு மியன்மார் இடைநிறுத்திய 130 கோடி டொலர்கள் பெறுமதியான மைற்ஸ் டோன் அணை திட்டம் பற்றி எந்த அறிவிப்பும் சீன ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது செய்யப்படவில்லை. இன்னும் ஒருசில மாதங்களில் பொதுத்தேர்தல் வரவிருப்பதால் மக்களினால் விரும்பப்படாத ஒரு திட்டத்தைப் புதுப்பிப்பதன் மூலம் வாக்காளர்க ளைக் கோபப்படுத்துவ தைத் தவிர்ப்பதில் மியன்மாரின் ஜனநாயகத் திற்கான தேசிய கழகம் **(National League for Democracy Government)** அக்கறை கொண்டி ருப்பது போல் தோன்றுகிறது. சீனாவின் மீது மியன் மார் பெருமள விற்குத் தங்கியிருக்கின்ற போதிலும், பல்வேறு இனக்கு ழுமங்களைச் சேர்ந்த திரட்டல படைகளுக்கு ஆதரவளிப்பதன் மூலம் குழப்பநிலையை உருவாக்குவதற்கு பெய்ஜிங்கிற்கு ஆற்றல் இருக்கின்ற போதிலும் கூட மைற்ஸ்டோன் திட்டம் தொடர்பில் சீனாவின் கோரிக்கைகளுக்கு மியன் மார் அடிபணியவில்லை. மியன்மார் அதன் நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கிறது.

என்றாலும் கூட சீ ஜின்பிங்கின் விஜயத்தின் போது கைச்சாத்திடப் பட்ட பெருவாரியான உடன்படிக்கைகள் இருநாடுகளுக்கும் இடையி லான ஒரு வலுவான உறவுமுறையை வெளிக்காட்டுகின்றன. மியன் மாரில் மண் டலமும் பாதையும் செயற்றிட்டத்தின் கீழான திட்டங்கள் சீனாவிற்கு வங் காள விரிகுடாவிற்கும், இந்து சமுத்திரத்திற்குமான தரைமார்க்க நுழைவு வசதியையும் கேந்திர முக்கியத்துவ பிரசன் னத்தையும் கொடுக்கின்றன.

சீனாவிடமிருந்து மியன்மார் பெறுகின்ற மாபேரளவு கடன்கள் கடன்பொறி ஒன்றுக்குள் அந்த நாடு விழக்கூடிய நிலைமையை உருவாக்குமா? மேலும் முக்கியமாக கடன்சுமை கேந்திர முக்கிய த்துவ சொத்துக்களை சீனாவிற்குக் கையளிப்பதற்கு மியன்மாரை நிர்ப்பந்திக்குமா? இலங்கை செல்கின்ற பொறுப்பற்ற பாதையில் மியன்மாரும் செல்லத் தொடங்கியிருக்கிறதா? இந்தக் கேள்விகள் இந்தியாவில் கலந்துரையாடப்பட்டு, விவாதிக்கப்படுகின்றன. இந்தியாவினால் மியன்மாருக்கு சிறந்ததொரு மாற்றுத்தெரிவை வழங்கமுடியுமா? சிநேக பூர்வமான கடனுதவிக்ளை வழங்குவதுடன். மியன்மாரில் அதன் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதைத் துரிதப்படுத்துவதற்கு மேலதிகமாக இந்தியா, மக்களை மையப்படுத்திய ஊடாட்டங்களை அதிகரிக்க வேண்டும்.

# எரிமலைக் குழம்பிலிருந்து கட்டுமான கற்கள் அசத்தும் பிலிப்பைன்ஸ் அரசு !

பிலிப்பைன்ஸ் பேரழிவின் பூர்வீகம் என்றும் சொல்லலாம். சூறாவளிகள், நிலநடுக்கங்கள், நிலச்சரிவுகள், சுனாமி, எரிமலை வெடிப்பு என எண்ணிலடங்கா பேராபத்துகளை ஆண்டுதோறும் சந்திக்கும் ஒரு நாடு. எரிமலை வெடிப்பு நிகழ்வுகள் சமீபகாலத்தில் அதிகமாகிக் கொண்டி ருக்கின்றன. நியூசிலாந்தின் வெள்ளைத் தீவில் நடந்த வெடிப்பு, ரஷ்யாவில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் சுமார் 35,000 அடி உயரத்துக்கு வெடித்துச் சிதறிய ஷிவெ லுச் எரிமலை, நியூ கினி யாவில் வெடித்த உலா வுன் என்று உலகளவில் எரிமலை வெடிப்பு நிகழ் வுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. அந்த வரிசையில், தற்போது பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள டால் எரிம லையும் வெடித்துள்ளது.



கடந்த 12 ஆம் திகதி வெடிக்கத் தொடங் கிய அந்த எரிமலையால் ஏற்பட்ட சேதங்கள் மிகவும் அதிகம். அந்தச் சேதங்களோடு நிற்காமல், மேலும் சீற்றத்தோடு காணப் படும். அதனால் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து, அந்த இடத்தையே காலி செய்து கொண்டிருக்கின்றனர். டால் எரிமலையிலிருந்து வெளியாகும் கனமான சாம்பல் திட்டுகள் சுமார் 9 மைல்கள் வரை பரவுகிறது. எரிமலைக்கு மிக அருகில் இருந்த வீடுகள் மற்றும் கட்டடங்கள் அனைத்தும்.இதன் விளைவால் முற்றிலும் சேதமடைந்துள்ளன. இந்தச் சாம்பல் திட்டுகளால் அந்நாட்டின் இயற்கை வளங் களும் அழிந்து எங்கும் மாசடைந்து காண ப்படுகிறது. இதனால் மக்கள் கண் எரிச்சல், சுவாசக் கோளாறுகள் மற்றும் தோல் எரிச்சல் போன்ற பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர்.




இந்த நிலையில், பிலிப்பைன்ஸ் அரசு இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தி, சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் ஆலோசனைகளைக் கேட்டு, தற்போது டால் எரிமலையின் சீற்றத் தால் சேதமடைந்த வீடுகளை அந்த எரிம லையின் சாம்பலைக்கொண்டே கற்களைத் தயாரித்து, மீண்டும் கட்டடங்களை எழுப் பும் முயற்சியில் இறங்கியுள்ளது. இந்த முயற்சியில் முதற்கட்டமாக ஒரு நாளைக்கு 5,000 கற்களை தயாரித்து வருகின்றனர். பிலிப்பைன்ஸ் மேயர் வால்பிரேடோ, அந் நாட்டு மக்களை எரிமலைச் சாம்பல் துகள் களைச் சேகரித்து அரசிடம் அளிக்குமாறு அறிவுறுத்தினார். அதன்படி மக்கள் தங்கள் சுற்றங்களில் கிடக்கும் எரிமலைச் சாம்பல் திட்டுகளை சேகரித்து வாகனங்களில் அர சின் தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்கி ன்றனர். அங்கு சாம்பல்கள் பிளாஸ்டிக் கழி வுகள் மற்றும் ஒயிட் சான்ட் போன்றவற் றைக் கொண்டு கட்டுமான கற்களைத் தயாரிக்கின்றனர்.

இதுபற்றி பிலிப்பைன்ஸ் மேயர் கூறு கையில், எரிமலை குழம்பை மூலப் பொரு ளாகக் கொண்டு நெகிழி கழிவுகள் மற்றும் ஒயிட் சான்ட் கொண்டு தயாரிக்கப்படும் இவ்வகை கற்கள், பொதுவாக நாம் கட்டுமா னப் பணிக்குப் பயன்படுத்தும் களிமண் கற்களை விடவும் திடமானது. பிலிப்பை ன்ஸ் மக்கள் இந்த டால் எரிமலையால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இது இயற்கையின் செயல். நம்மால் எதுவும் செய்ய முடியாது என்றாலும் நாங்கள் எரி மலை சீற்றத்தால் இழந்த எங்கள் வீடு களை இதன் மூலம் மீண்டும் கட்டியெழுப்ப திட்டமிட்டுள்ளோம். முதற்கட்டமாக 5,000



கற்களை ஒரு நாளைக்கு நாங்கள் உற்பத்தி செய்து அவற்றைப் பாதிக்கப்பட்ட பகுதி மக்க ளுக்கு வழங்கி வருகிறோம். வரும் நாட்க ளில் உற்பத்தி திறனை இன்னும் அதிக ரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகி ன்றன. மக்களும் மிகச் சிறந்த முறையில் இந்தத் திட்டத்துக்கு தங்கள் ஒத்துழைப்பை வழங்கி வருகின்றனர்" என்றார்.



# மின்சாரத்தில் கை வைத்து விட்டார் ரஜினி!

## கி.வீரமணி விளாசல்

துக்ளக் பத்திரிகையின் 50 ஆவது ஆண்டு விழாவில் பெரியார் குறித்து நடிகர் ரஜினிகாந்த் முன்வைத்த கருத்துகள் தமிழக அரசியல் களத்தை தகிக்க வைத்துள்ளன. பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ள ரஜினியின் பேச்சு தொடர்பாக, திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி வழங்கிய செவ்வி

**“அன்று நடந்த சம்பவம் பற்றி பத்திரிகைகளில் வந்ததன் அடிப்படையில் தானே நடிகர் ரஜினி பேசியிருக்கிறார். அதற்கு ஏன் இவ்வளவு எதிர்ப்பு?”**

“‘அரசியலுக்கு வரப்போகிறேன்’ என்று நடிகர் ரஜினி அவ்வப்போது சொல்லிக்கொண்டிருக்கிறார். எப்போது வருவார் என்பது கேள்விக்குறி. அதற்கு முன்பாக அவர், ‘தமிழக அரசியலில் வெற்றிடம் இருக்கிறது. அதை தன்னால் நிரப்ப முடியும்’ என்று சொல்லிக்கொண்டிருந்தார். தற்போது, இதை ஒரு வாய்ப்பாக அவர் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். மற்றவர்களால் ஒரு கருவியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளார்.

கடவுளர்களைத் தொடர்புபடுத்திப் பேசினால், திராவிட இயக்கத்தின் செல்வாக்கு குறைந்துவிடும். அதன்மூலம் பக்தர்கள் மற்றும் பிற தரப்பினரின் வாக்குகள் தங்களுக்குக் கிடைத்து விடும்’ என நினைக்கிறார்கள். அந்த அடிப்படையில் தான், இதே ராமர் பிரச்சினையை அரசியல் ரீதியாகப் பயன் படுத்தலாம் என சோ நினைத்தார். ஆனால், அது எதிர் விளைவாகத்தான் முடிந்தது. அதுபோலவே இப்போது பெரியாரை ரஜினி சீண்டியிருக்கிறார். இதற்கு எல்லோரும் பதில் சொல்வார்கள். அதன் மூலம் இன்னொரு சாராரின் விளம்பரங்கள் கிடைக்கும். அதை வைத்து வளர்ந்து விடலாம் என்பது அவர்களின் திட்டம். ஆனால் ரஜினியைப் பொறுத்தவரை, அவர் ஒரு மாயக்குதிரை!”

**“மன்னிப்பு கேட்க மாட்டேன் என்று கூறுவது ரஜினியின் தனிப்பட்ட உரிமைதானே?”**


“பெரியாரைக் கொச்சைப் படுத்தவும், உண்மைக்கு மாறான தகவலைச் சொல்லவும் யாருக்கும் உரிமை கிடையாது. உண்மைக்கு மாறாக ரஜினி பேசும் போது, அதைச் சுட்டிக்காட்டுவது எங்கள் கடமை. மன்னிப்பு கேட்பதோ, வருத்தம் தெரிவிப்பதோ மனிதப் பண்பின் பெருந்தன்மையைப் பொறுத்தது. அரசியலுக்கு ரஜினி வந்தால் எப்படி நடந்துகொள்வார் என்பதற்கு இது ஒரு முன்னோட்டம்.”

**“பொதுவாக பெரியார் குறித்து அ.தி.மு.கவினர் பெரும்பாலும் பேசமாட்டார்கள். ஆனால் இப்போது, ‘என்னைப் போன்ற சாதாரண மனிதர்கள்கூட உயர்ந்த நிலைக்கு வருவதற்கு அடித்தளமிட்டவர் தந்தை பெரியார்’ என்று துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சொல்கிறார். ‘தந்தை பெரியாரின் வழியில் அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்துக்காக அ.தி.மு.க. உழைக்கும்’ என்று அமைச்சர் செங்கோட்டையன் சொல்கிறார். இதேபோன்று அமைச்சர் ஜெயக்குமார், ஆர்.பி. உதயகுமார் எல்லோரும் பேசியிருக்கிறார்கள். இதை எப்படிப் பார்க்கிறீர்கள்?”**

“பெரியார் அனைவருக்கும் உரியார் என்பது இதன்மூலம் உறுதியாகிறது. வலதுசாரிகள், பெரியாரை தங்கள் அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம் என நினைக்கிறார்கள். அதற்கு இடம்தரக்கூடாது என்று துணை முதல்வரும் அமைச்சர்களும் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். இது அரசியல் வியூகம் தான். அதில் ஆச்சர்யமில்லை. பெரியார் பல நேரங்களில் பலருக்கும் பயன்படக்கூடிய சுவாசக் காற்று என்பதை, தொடர்ந்து பார்த்து வருகிறோம்.

பெரியார் சிலை உடைக்கப்பட்டபோதும், வேறு விதங்களில் அவர் இழிவுபடுத்தப்பட்ட போதும், ஆத்திகவாதிகள்கூட அதற்கு கண்டனம் தெரிவித்துள்ளார்கள். போராட்டங்களில் ஈடுபட்டார்கள். பெரியார் ஒரு சுப்பர் மார்க் கெட்போல... பல சரக்குகளும் இருக்கும். பெரியாரின் கடவுள்மறுப்புக்கொள்கையை ஏற்காதவர்கள், அவரின் சமூக நீதியால் பயனடைந்திருக்கிறார்கள். அவர்களின் பிள்ளைகள் இடஒதுக்கீட்டில் படித்து முன்னேறியிருப்பார்கள். பெரியார் போராடியதால்தான், குலக்கல்வித் திட்டம் ஒழிக்கப்பட்டு பலரும் கல்வியறிவு பெற்றார்கள். வேலை வாய்ப்பு கிடைத்தது. வாழ்க்கையில் முன்னேறியிருக்கிறார்கள். ‘கடவுளைப் பெரியார் மறுத்தாலும் நாங்கள் பெரியாரை கடவுளாகப் பார்க்கிறோம்’ என்று எத்தனையோ பேர் என்னிடமே சொல்லியிருக்கிறார்கள். இந்த உணர்வு அனைத்து தரப்பினரிடமும் இருக்கிறது.”

**“ரஜினியின் பேச்சை வலதுசாரிகள் ஒட்டுமொத்தமாக ஆதரிக்கிறார்கள். அதே போல், திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து சென்றவர்களும் ரஜினியின் பேச்சால் ஒருங்கிணையும் போக்கையும் பார்க்க முடிகிறது. இதை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?”**



“இந்துத்துவ சக்திகள் தாங்கள் யார் என்ற அடையாளத்தையும், அதே நேரத்தில் திராவிட இயக்கத்தின் வேர் எவ்வளவு ஆழமானது என்பதையும் காலம் தெளிவாகக் காட்டிக் கொண்டிருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ பெரியார் என்ற மின்சாரத்தில் கைவைத்து விட்டார் ரஜினி. 1971ஆம் ஆண்டைப்போல் வரலாறு மீண்டும் திரும்பும்.”

**“பா.ஜ.கவின் தேசியச் செயலாளர் எச்.ராஜா, ‘திராவிடர் கழக குண்டர்கள், ரஜினிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்கிறார்கள். நீதியின் முன்பாக அது நிற் காது. ரஜினியை ஒன்றும் செய்ய முடியாது’ என்று சொல்லியிருக்கிறாரே?”**

“நீதிமன்றத்தை எச்.ராஜா எப்படி மதிப்பார் என்பது மக்களுக்கு நன்றாகவே தெரியும். அவரைப் பற்றி நீதிமன்றத்துக்கு என்ன கருத்து இருக்கிறது என்பதும் எல்லோருக்கும் தெரியும். அதனால், நீதிமன்றத்தில் வழக்கு நிற்குமா, நிற்காதா என்பது அவருக்கும் தெரியும். அந்தத் ‘தகுதி’ அவருக்கு உண்டு. இதற்கு மேல் இதைப் பற்றி எதையும் சொல்ல விரும்பவில்லை.”

**“ரஜினியை பி.ஜே.பி. தூண்டிவிட்டுப் பேசவைக்கிறது என்பது நம்பும்படியாகவா இருக்கிறது?”**

“தமிழக அரசில்களத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு கருவியாக இந்தச் சம்பவம் பயன்படுத்தப்படுகிறது. திட்டமிட்டுத்தான் இதில் அவர்கள் இறங்கியுள்ளார்கள். ஏற்கெனவே ‘பெரியார்’ திரைப்படத்தைப் பார்த்துவிட்டு பெரியாரைப் பற்றி ரஜினிகாந்த் என்ன கருத்துகளைச் சொன்னார் என்பதைப் பார்க்க வேண்டும். அப்போது அவர் தன் கருத்துகளை மிகவும் சுதந்திரமாக வெளிப்படுத்தினார். கடிதம் எழுதியிருக்கிறார். ஆனால், இப்போது அவர் பேசுவது வேறு வகையானது. யாரிடம் அவர் இப்போது சிக்கிக்கொண்டிருக்கிறார் என்பது மிக முக்கியமானது. இந்துத்துவா அவரை விடப்போவதில்லை. அதன் பிடியிலிருந்து விடுபட வேண்டுமென அவர் நினைத்தாலும், அது அவரை விடவே விடாது. காலம் அவரை விடுதலை செய்யலாம். அப்போது அவர் உண்மையை உணர்வார்.”

**“ஆக, ரஜினிகாந்த் பயன்படுத்திக்கொள்ளப்படுகிறார் என்கிறீர்களா?”**

“சினிமாவில் நடிகர்களுக்கு வசனம் எழுதிக் கொடுத்து பேசச் சொல்வார்கள். எப்படி நடிப்பது என்பதை இயக்குநர் சொல்லிக் கொடுப்பார். அந்தப் படம் வெற்றிகரமான படமா, தோல்வி யடையக்கூடிய படமா என்பதை மக்கள் முடிவு செய்வார்கள். இந்தப் படம் நிச்சயம் தோல்விப்படம்தான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இது இன்னொரு ‘பாபா’வாகத்தான் இருக்கும்.”

**“இதை முன்வைத்து தமிழக அரசியலில் ‘மாற்றங்கள் ஏற்படுமா?”**

“இதை நான் முக்கியமான விடயமாகக் கருதவில்லை. திராவிட இயக்கத்தை எதிர்த்து நிறையபேர் அரசியல் செய்கிறார்கள். பெரியாரை எதிர்த்தால் விளம்பரம் கிடைக்கும் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. இப்போதுகூட எங்கள் கருத்துகளை ரஜினி விமர்சனம் செய்வதைப் பற்றி கவலையில்லை. ஆனால், நடக்காத ஒன்றை நடந்ததாகச் சொல்லியிருக்கிறார். ‘ராமர், சீதை உருவப்பொம்மைகளை உடையின்றி எடுத்துச் சென்றார்’ என்று சொல்லியிருக்கிறார். பெண்ணுரிமையை மதிக்கும் ஒருவர், எந்தப் பெண்ணையும் அப்படிக் கொச்சைப்படுத்த மாட்டார். நாங்கள் இன்னொன்றையும் கேட்டு வாதாடினோம். ‘சீதையை ராமர் நெருப்பில் தள்ளலாமா? யாருடைய பேச்சையோ கேட்டு நிறைமாத கர்ப்பிணியாக இருந்த சீதையைக் காட்டுக்கு அனுப்பலாமா?’ என்றெல்லாம் கேட்டோம். பெண்ணுரிமையைப் பற்றியும், மனித உரிமையைப் பற்றியும்தான் நாங்கள் பேசுகிறோம்.”

**ஜூனியர் விகடன்**

## காணாமல் போனவர்கள் என்று யாருமில்லை அனைவரும் இறந்து விட்டார்கள்

# புதிய பரிமாணத்துடன் தொடரும் போராட்டங்கள்



காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் புதிய பரிமாணத்துக்குள் பிரவேசித்திருக்கின்றது. முடிவின்றி தொடர்கின்ற இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்கான போராட்டங்கள் வருடக்கணக்காகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. நிலைமாறுகால நீதியின் அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக் கூறுவதற்காக உருவாக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் என்ற பொறிமுறை செயல் வல்லமை அற்ற நிலையில் தேங்கி நிற்கின்றது.

இத்தகைய பின்னணியில்தான் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் புதிய பரிமாணத்துக்குள் பிரவேசித்திருக்கின்றது. காணாமல் போனவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று இப்போது அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் இலங்கைக்கான இணைப்பாளர் அனா சிங்கருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பின்போது கா்ணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய விடயம் பற்றி குறிப்பிட்ட ஜனாதிபதி, அவர்கள் கொல்லப்பட்டு விட்டனர் எனக் கூறியிருந்தார். இதனை ஜனாதிபதி அலுவகை செய்திக் குறிப்பு அதிகாரபூர்வமாக வெளியிட்டிருந்தது.

விடுதலைப்புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான யுத்த மோதல்களின்போது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் போயுள்ளார்கள். இவர்கள் அரச தரப்பினரால் வலிந்து காணா மல் ஆக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் சர்வதேச மனிதஉரிமை அமைப்புக்களும் குற்றம் சுமத்தியுள்ளன. இந்த வகையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச் செயற்பாடுகளுக் கான பொறுப்புக்கூறும் விடயத்தில் இலங்கையில் ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டமை என்பது மிகவும் பாரதூரமான ஒரு விடயமாகவும் தீர்வு காணப்படாத ஒரு விடயமாகவும் கருதப்படுகின்றது.

காணாமல் போனவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில், காணாமல் ஆக்கப்பட்டார்கள். இதனை இந்த விவகாரம் குறித்த விசாரணைகளை நடத்துவதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கபட்ட ஒன்றுக்கும் மேற்பட்ட ஆணைக்குழுவினரிடம் சாட்சியமளித்த பாதிக் கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த உறவினர்கள் ஆதாரங்களுடன் தெரிவித்திருந்தனர்.

### உயிர்த்துடிப்பு கொண்ட எரியும் பிரச்சினை

இந்த விவகாரம் குறித்து ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள ஐ.நா. மனித உரிமைப்பேரவை இந்த விடயம் தொடர்பில் பிரேரணைகளை நிறைவேற்றி அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. இந்த வகையில் இலங்கையின் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் ஓர் எரியும் பிரச்சினையாக இன்னும் சர்வதேச மட்டத்தில் உயிர்த்துடிப்புடன் தொடர்கின்றது.

பொறுப்புக்கூறுவதற்கான பொறிமுறைகளை உருவாக்கி உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலைமாறு கால நீதியை நிலைநாட்டுமாறு ஐ.நாவின் பிரேரணைகள் இலங்கை அரசாங்கத்தைப் பல தடவைகளில் கோரியுள்ளன. இந்தக் கோரிக்கை தொடர்பிலான ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் பிரேரணைகளுக்கு இலங்கை அரசாங்கம் அனுசரணை வழங்கி அவற்றை தீர்மானங்களாக நிறைவேற்றுவதற்கு இணை அனுசரணை வழங்கியிருந்தது என்பது பலரும் அறிந்த விடயம்.

பொறுப்புக் கூறுவதற்கான நிலைமாறுகால நீதியை நிலைநாட்டுவதற்குரிய பொறிமுறைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் கடந்த அரசாங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குறிப்பாக காணாமல் ஆக்கப்பட் டவர்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற் காக காணாமல் போனோருக்கான அலு வலகம் என்ற பொறிமுறையை உருவாக்கி அதற்கான ஆளணிகளை நியமித்து மாகாண, மாவட்டமட்டங்களிலும்துணை அலுவலகங்களை அரசு உருவாக்கியிருந்தது.

ஆனாலும் அந்த அலுவலகத்தினால் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த விசாரணைகள் எதிர்பார்த்த வகையில் நடத்தப்படவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பொறிமுறை உருவாக்கத்தில் ஐ.நா. அறிவித்திருந்தவாறு பாதிக்கப்பட்ட மக்களின் பங்களிப்பு இல்லாமலேயே அதற்கான அலுவலகம் உருவாக்கப்பட்டது. தன்னிச்சைப் போக்கிலான இந்த நடவடிக்கையை பாதிக்கப்பட்ட குடும்பங்களும், சர்வதேச மனிதவுரிமை அமைப்புக்களும் வன்மையாகக் கண்டித்திருந்தன. அரசு உருவாக்கியுள்ள அலுவலகத்தில் நம்பிக்கையில்லை என தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டங்களின் ஊடாகத் தமது எதிர்ப்பை பல தடவைகள் வெளியிட்டிருந்தனர்.

ஆனால் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அந்த அலுவலகம் உருவாக்கப்பட்டது. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் அமைந்த அலுவலகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வுக்கு எதிரான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முறியடிக்கும் வகையில் அதிகாலைப் பொழுதில் பார்வையாளர்கள், பங்காளர்களான காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் பங்களிப்பின்றி இரகசியமாக அதிகாரிகள் சென்று அதனை வைபவ ரீதியாகத் திறந்துவிட்டு கதவுகளைப் பூட்டி விட்டுச் சென்றார்கள்.

### அர்த்தமில்லாதது

இத்தகைய திறப்பு விழா நிகழ்வைத் தொடர்ந்து யாழ். செயலகத்தில் காணாமல் போனோருக்கான அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்குமிடையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சந்திப்பில் பாதிக்கப்பட்டவர்கள் தரப்பிலிருந்து காரசாரமான கருத்துக்கள் வெளியிடப்பட்டிருந்தன.

அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் முன்னைய விசாரணைகளைப் போலல்லாமல் விரிவான முறையில் நம்பிக்கைக்குரிய வகையில் விசாரணைகளை நடத்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அத்தகைய செயற்பாடுகளை அதிகாரிகளினால் முன்னெடுக்க முடியவில்லை.

மாறாக முன்னைய ஆணைக்குழுக்களைப் போலல்லாமல் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு உண்மையில் என்ன நடந்தது. அவர்கள் என்னவானார்கள் என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகளை நியாயமாகவும் சுதந்திரமாகவும் இந்த அலுவலகம் நடத்தி ஆட்கள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு நீதியையும் நியாயத்தையும் இந்த அலுவலகம் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையை முதலில் ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியது.

இந்த நம்பிக்கையூட்டும் நடவடிக்கையை விழிப்புணர்வு செயற்பாடு என்ற பெயரில் ஒரு பிரசார நடவடிக்கையாகவே அந்த அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகள் மாவட்டந்தோறும் மேற்கொண்டிருந்தனர். ஆனால் அந்த நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்குப் பதிலாக அந்த அலுவலகத்துக்கு எதிரான எதிர்ப்புணர்வை அதிகப்படுத்துவதற்கே வழிவகுத்திருந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றிய விசாரணைகளில் கண்டறியப்படுகின்ற உண்மைகள் வெளிப்படுத்தப்படமாட்டாது. அந்தத் தகவல்கள் ஆட்களைக் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு எதிரான நீதிமன்ற விசாரணைகளுக்குப் பயன்படுத்தப்படமாட்டாது. விசாரணைகளின் மூலம் காணாமல் ஆக்கப்பட்ட ஒருவர் கண்டறியப்பட்டால், அவர் இருக்கின்ற இடமும் வெளிப்படுத்தப்படமாட்டாது. ஆனால் காணாமல் போயுள்ளவர்களுக்கு மரணச் சான்றிதழுடன், இழப்பீட்டுக் கொடுப்பனவும் வழங்கப்படும். - இதுவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்தின் செயற்பாடுகளாக அமைந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் இத்தகைய செயற்பாடுகள் தங்களுக்குத் தேவையில்லை. தங்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவிலும் பார்க்க காணாமல் ஆக்கப்பட்டவர்களை யார் காணாமல் போகச் செய்தார்கள் என்ற உண்மை நிலைமையைக் கண்டறிந்து தெரிவிக்க வேண்டும். அதற்குக் காரணமானவர்கள், பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, தங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதே தமது கோரிக்கை என்றே பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

### முக்கியஸ்தர்களின் முக்கியமான சந்திப்பு

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று அரச தரப்பிலிருந்து முதன்முறையாக ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட கருத்தை சாதாரணமானதாகக் கொள்ள முடியாது. ஏனெனில் இந்தக் கருத்து வெளியிடப்பட்ட சந்தர்ப்பமும், சந்திப்பும் அதி முக்கியத்துவம் வாய்ந்தவை.

இந்த நாட்டின் அதியுய்ர் அதிகார முள்ள தலைவராகிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவருக்கும் ஐக்கிய நாடுகள் மன்றத்தின் இலங்கைக்கான இணைப்பாளருக்குமிடையில் நடைபெற்ற உயர்மட்டச் சந்திப்பாகும். இதில் கலந்து கொண்டவர்கள் இருவருமே இரு முனைகளிலும் நிறுவன ரீதியிலும் பதவி வழியிலும் முக்கியமானவர்கள்.

அதேபோன்று பேசப்பட்ட விடயமும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. அது அனைத்துலக அளவில் மனித உரிமைகள் மற்றும் போர்க்குற்றச் செயற்பாடுகளுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு விடயமாகும். இந்த விடயம் குறித்து நாட்டின் அரச தலைவர் என்ற ரீதியில் தெரிவிக்கப்பட்ட கருத்தை சாதாரணமாகக் கொள்ள முடியாது. அத்துடன் அரச தலைவர் என்ற ரீதியில் பொறுப்பு மிக்க நிலையிலிருந்தே கருத்து வெளியிட வேண்டும். வெளிப்பட்டிருக்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்று அந்த விடயத்துடன் சம்பந்தமும் தொடர்பும் இல்லாத ஒருவர் கூறுகின்ற சாதாரண கருத்தாக அதனை வெளியிட முடியாது.

ஏனெனில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு முன்னர் யுத்த மோதல்கள் இடம்பெற்ற காலப் பகுதியில் அரச படைகளின் செயற்பாடுகளுக்கு மூலகர்த்தா என்ற நிலையில் மிகவும் பொறுப்பான பதவியொன்றை வகித்திருந்தவர்., அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அவர் பொறுப்பேற்றுச் செயற்பட்டிருந்தார்.

அரசியல்வாதி என்ற முன் அனுபவமும் செயல்வழியும் இல்லாமல் இத்தகைய பின்புலத்தைக் கொண்டு ஆட்சி மாற்றத்தின் மூலம் நேரடியாக ஜனாதிபதியாகத் தேர்தல் மூலமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் அனைவரும் கொல்லப்பட்டு விட்டார்கள் என்று நாட்டின் ஜனாதிபதி தெரிவிப்பதை உண்மை என்று ஏற்றுக் கொள்ள முடியாது. அதேவேளை அந்தக் கருத்தை அரசியல்வாதி ஒருவரின் கருத்து என்று சாதாரணமாகக்கொண்டு கடந்து சென்றுவிடவும் முடியாது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களில் கணிசமானவர்கள் இறுதி யுத்தத்தின் போது அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று, தங்களுக்குப் பாதுகாப்பும் பொது மன்னிப்பும் கிடைக்கும் என்ற உத்தரவாதத்தின் மீது நம்பிக்கை வைத்து இராணுவத்தினரிடம் சரணடைந்தார்கள். அவர்களுக்கு என்ன நடந்தது, அவர்கள் எங்கே வைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்ற கேள்விக்குப் பதிலளிக்க வேண்டிய தட்டிக்கழிக்க முடியாத பொறுப்பு அரசாங்கத்துக்குள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பொறுத்தமட்டில் இது இரட்டிப்புப் பொறுப்பானது. ஏற்கனவே யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் குறிப்பாக இராணுவத்திடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு உள்ளது. போர்க்காலச் செயற்பாடுகளில் நேரடியாகப் பங்குகொண்ட இப்போதைய ஜனாதிபதி என்ற வகையில் அந்தப் பொறுப்பும் கடப்பாடும் மிகவும் கனதியானது.

ஐ.நா.அதிகாரியுடனான சந்திப்பின் போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்த கருத்துக்களை ஜனாதிபதி செயலகம் அறிக்கை மூலமாக வெளியிட்டுள்ளது.

அதன்படி, இந்த காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உண்மையிலேயே கொல்லப்பட்டு விட்டார்கள். அவர்களில் அநேகமானோர் எல்.ரீ.ரீ.ஈ.யினரால் வலிந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் இதனை உறுதிப்படுத்தி இருக்கின்றன. ஆயினும் அவர்களுக்கு என்ன நடந்தது என தெரியாமல் அவர்களை இந்தக் குடும்பங்கள் காணாமல் போயுள்ளவர்கள் என கூறுகின்றார்கள். முறையான விசாரணைகளின் பின்னர் காணாமல் போயுள்ளவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கவும், அதன் பின்னர் காணாமல் போயுள்ளவர்களின் குடும்பங்கள் வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்துவதற்கான உதவிகளை வழங்குவதற்கு நடடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்துக்கான இந்தத் தீர்வு தங்களுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலைப் பாதித்துவிடும் என்ற காரணத்துக்காக தமிழ் அரசியல்வாதிகள் இதனை நிராகரித்துள்ளார்கள் என்றும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பின்போது குறிப்பிட்டுள்ளார்.

**பி.மாணிக்கவாசகம்**


# சீனாவை அச்சுறுத்தும் கொரோனா வைரஸ்



சீனாவில் இதுவரை 25 பேர் உயிரிழப்புக்குக் காரணமான புதிய வைரஸ் மேலும் பரவுவதை கட்டுப்படுத்தும் நோக்கில் வுஹானையடுத்து மற்றுமொரு சீன நகரும் முடக்கப்படுகிறது.

1.1 கோடி மக்கள் தொகை கொண்ட வுஹான் நகரத்திற்கு வந்து செல்லும் விமானங்கள், ரயில்கள், பொதுப் போக்குவரத்து மற்றும் படகு போக்குவரத்து ஆகியவை ஏற்கனவே முடக்கப்பட்டுள்ளன. அதேபோல கடந்த வியாழக்கிழமை இரவு முதல் ஹூவாங்காங்க் நகரும் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளது. இந்த நகரத்தின் மக்கள் தொகை சுமார் ஆறு மில்லியன் ஆகும்.

கடந்த வெள்ளிக்கிழமை நிலவரப்படி சீனாவில் இந்த வைரஸ் தொற்றால் 25 பேர் உயிரிழந்துள்ளனர். 830 பேர் பாதிக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சீனாவில் அல்லது வெளிநாடுகளில் மட்டும் இதுவரை 500 இற்கும் மேற்பட்டோருக்கு இந்த வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.



விமானப் பயணிகள் அனைவரும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டே அனுமதிக்கப்படுவார்கள் என்று பல உலக நாடுகள் அறிவித்துள்ளன. சீனாவின் வுஹான் நகரத்தில்தான் முதன் முதலில் இந்த வைரஸ் கண்டறியப்பட்டது. பொதுமக்கள் யாரும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## சீன வைரஸை ஆசிய நாடுகள் எப்படி சமாளிக்க போகின்றன?

சீனாவின் கொரோனா வைரஸ், பலருக்கு சார்ஸ் வைரஸ் நெருக்கடியை ஞாபகப்படுத்தி வருகிறது. தொற்று நோயாக இது மாறுவதற்கு முன்பே, தேவையான தடுப்பு நடவடிக்கைகள் ஆசியா முழுவதும் எடுக்கப்பட்டு வருகின்றன. 2002 ஆம் ஆண்டு பரவிய சார்ஸ் வைரஸால் உலகம் முழுவதும் 774 பேர் கொல்லப்பட்டனர்.

### வடகொரியா

சீன வைரஸ் தனது நாட்டிற்குள் தொற்றாமல் இருப்பதற்காக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகைக்கு வடகொரியா தடை விதித்துள்ளது. வடகொரியாவுக்கு வரும் பெரும்பாலான சுற்றுலா பயணிகள், சீனாவுடனான எல்லைப்பகுதி வழியாக வருகின்றனர். மேலும் வடகொரியா மீதான சர்வதேச பொருளாதார தடைகளில் பட்டியலிடப்படாத ஒரு சில துறைகளில் சுற்றுலாவும் ஒன்று.

இந்த வாரம், வடகொரியாவின் அரசு ஊடகமான கொரியன் மத்திய தொலைக்காட்சியின் முக்கிய செய்தி நிகழ்ச்சியின் போது, சீனாவில் வைரஸ் பரவி வருவது குறித்தும், அதனை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்தும் செய்தி ஒளிபரப்பப்பட்டது. உள்ளூர் மக்களுக்கு சீன வைரஸ் பரவல் குறித்து தெரிவிப்பதற்காக இந்த முயற்சி எடுக்கப்பட்டது.

இந்த வைரஸ் பரவுவதை தடுக்க உலக சுகாதார நிறுவனத்துடன் இணைந்து செயலாற்றி வருவதாக வடகொரியாவின் சுகாதார அமைச்சர் அரசு தொலைக் காட்சிக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்தார்.

### வடகொரியா

சீனாவின் வுஹான் மாகாணத்திலிருந்து தென்கொரிய தலைநகர் சோலுக்கு விமானம் மூலம் வந்த பெண் ஒருவருக்கு சீன வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர்தான் சீன வைரஸால் தென்கொரியாவில் பாதிக்கப்பட்ட முதல் நபர். அந்த பெண் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தென்கொரியாவின் நோய் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை மையம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்த வைரஸ் பரவல் நாட்டின் பொருளாதாரத்திலும் சுற்றுலாத் துறையிலும் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது போல அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிடுவது போன்றுள்ளது. சீன சுற்றுலா பயணிகளை தங்கள் நாட்டுக்குள் அனுமதிக்க தென்கொரியா தடை விதித்துள்ளது.

சீனா மற்றும் தென்கொரியாவுக்கு இடையிலான பதற்றம் குறைந்துள்ள நிலையில், சீன வைரஸ் பரவல், சோலுக்கு வரும் சீன சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என அந்நாட்டு உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வைரஸ் பரவல் காரணமாக பங்குச் சந்தையில் சரிவு ஏற்பட்டுள்ளதாக மற்றொரு தென்கொரிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

### ஜப்பான்

வைரஸ் தொற்று இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நபர்களை தொடர்ந்து கண்காணிப்பில் வைத்திருக்குமாறு ஜப்பான் பிரதமர் ஷின்ஷோ அபே தனது அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார். மேலும் நோயாளிகளை தனிமைப்படுத்தி வைக்கும் நடவடிக்கைகளை வலுப்படுத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.



முப்பது வயதாகும் ஒரு ஜப்பானிய நபருக்கு சீன வைரஸ் தொற்று இருப்பதை அந்நாட்டு அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். அந்த நபருக்கு வைரஸ் தொற்றால் நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனகவா பகுதியை சேர்ந்த ஒரு உணவு பதார்த்த கடை, தனது கடைக்குள் சீன சுற்றுலா பயணிகள் வருவதற்கு தடைவிதித்துள்ளது. ஜப்பானிய சமூக வலைத்தளங்களில் இது பேசுபொருளாகியுள்ளது.

### தாய்லாந்து

தாய்லாந்தின் பாத்தோம் மாகாணத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் சீன வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள 73 வயது மூதாட்டிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக அந்நாட்டின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தற்போது அந்நாட்டில் மூன்று சீன சுற்றுலாப் பயணிகள் மற்றும் ஒரு உள்ளூர் நபர் உள்ளிட்ட நால்வருக்கு வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

### சிங்கப்பூர்

தற்போது வரை வைரஸ் தொற்றினால் யாரும் பாதிக்கப்படவில்லை என்றாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அந்நாட்டு அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களாக நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சீன சுற்றுலாப் பயணிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளதாக உள்ளூர் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும், உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையங்களில் ஒன்றான செங்கி விமான நிலையம், சீனாவிலிருந்து வரும் சுற்றுலா பயணிகளை பிரத்தியேகமாக பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக தனியார் செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### இந்தியா

நாடு முழுவதிலும் உள்ள 7 பெரிய விமான நிலையங்களில் சீனாவிலிருந்து வரும் சுற்றுலர் பயணிகளை பரிசோதிக்க வேண்டும் என விமான போக்குவரத்துத்துறை உத்தரவிட்டுள்ளது.

சீனாவின் ஷென்சென் நகரில் உள்ள பள்ளி ஒன்றில் பணியாற்றி வரும் இந்தியாவைச் சேர்ந்த 45 வயது ஆசிரியை ஒருவருக்கு வைரஸ் தாக்குதல் காரணமாக உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாக பிடிஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

டில்லியைச் சேர்ந்த மிண்ட் வர்த்தக நாளிதழிடம் பேசிய சுகாதாரத்துறை நிபுணர் ஒருவர், "நாட்டின் துறைமுகங்களில் வந்திறங்கும் நபர்களை பரிசோதிக்க போதுமான வசதிகள் இல்லை" என தெரிவித்துள்ளார்.

இந்திய மாணவர்கள் 500 பேர் கல்வி கற்று வரும் சீனாவின் வுஹான் மாகாணத்திற்கு செல்லும் இந்திய குடிமக்கள் பாதுகாப்பாக செல்ல வேண்டும் என இந்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

### பங்களாதேஷ்

வங்கதேச அதிகாரிகள் உச்சகட்ட எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருவதாக அந்நாட்டின் ஆங்கில செய்தித்தாழான டாக்கா டிரிப்யூன் செய்தி வெளியிட்டுள்ளது.

டாக்கா மற்றும் சில்ஹெட் ஆகிய இரண்டு சர்வதேச விமான நிலையங்களில் பயணிகளை சோதனைக்கு உட்படுத்தும் வேலைகள் தொடங்கியுள்ளன். சீனாவுக்கும் சிட்டாகாங் நகருக்கும் எந்த விமானங்களும் இல்லாத போதும் கடந்த ஜனவரி 21 ஆம் திகதி முதல் அந்த விமான நிலையத்தில் பயணிகள் சோதிக்கப்பட்டு வருகின்றனர்.

"மாற்று விமான பயணம் மூலம் எந்த பயணியாவது சீனாவிலிருந்து சிட்டாகாங் வந்திருந்தால், அவர்கள் கண்டிப்பாக பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்" என விமான நிலைய மேலாளர் தெரிவித்ததாக டாக்கா ட்ரிபியூன் செய்தி வெளியிட்டுள்ளது.

B.B.C

# யுத்த சாட்சியம்

போர் குறித்த மயக்கங்கள் இன்னும் தெளியாத சூழலில், போர் எத்தனை கொடுமையானது என்பதைச் சொல்கிறது "1917" படம்.

1914 இல் தொடங்கிய முதல் உலகப் போர் அதன் உச்சத்தில் இருந்த நேரம் நடந்ததுதான், இந்த "1917" ஏப்ரல் மாத சம்பவம். முதலாம் உலகப்போரில் பிரான்ஸின் மேற்கு எல்லையிலிருந்து தன் இராணுவத்தைப் பின்வாங்கிக் கொள்கிறது ஜேர்மனி. தோல்வி, பயம் என எண்ணி, ஜேர்மனியின் பின்வாங்கலைப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிடும் இங்கிலாந்து 1,600 நபர்களை அனுப்பி அந்த இடத்தைக் கைப்பற்ற எத்தனிக்கிறது.



ஆனால், அது ஜேர்மனியின் பதுங்கிப் பாயும் திட்டம் என்பது இங்கிலாந்தின் தலைமைக்குத் தெரிய வருவதற்குள், களத்திலிருக்கும் இராணுவக் குழு போருக்குப் புறப்பட்டு விடுகிறது. தொலைபேசி வயர்கள் அறுபட்டு நிற்க, தங்களின் மரணப்படுக்கைகளைத் தோண்டிக்கொண்டே செல்கிறார்கள் 1,600 போர் வீரர்கள். வேறு வழிகளற்று நிர்க்கதியாய் நிற்கிறது இங்கிலாந்து. இரண்டு நபர்களைக் குறுக்கு வழியில் அனுப்பி, இந்த விபரத்தைச் சொல்லக் கட்டளையிடுகிறார் ஜெனரல் எரின்மோர். முள்வேலிகளின் இடைவெளிகளில் நுழைந்து, தோட்டாக்கள் சிதறி, வழிநெடுகில் உள்ள எதிரிக் கூடாரங்களைக் கடந்து லான்ஸ் கார்ப்போரல்களான டாம் பிளேக்கும், வில் ஸ்காஃபீல்டும் இந்தத் துணிகரச் செயலை மேற்கொள்கிறார்கள். டாம் பிளேக் செல்ல மற்றுமொரு காரணம் அவரது அண்ணன் லெப்டினன்ட் ஜோசப் பிளேக்கும் அந்த 1,600 நபர்களில் ஒருவர் என்பதுதான்.

ஒரு கட்டத்தில் 1,600 நபர்களைக் காக்கும் பொறுப்பு மொத்தமாய் வில் ஸ்காஃபீல்டு தலைமேல் விழுகிறது. இறுதியில் நீர்வீழ்ச்சிகளையும் காட்டுப் பாதைகளையும் ஜேர்மன் துப்பாக்கிக் குண்டுகளையும் கடந்து வில் ஸ்காஃபீல்டு அந்த 1,600 நபர்களைக் காப்பாற்றி விடுகிறார் என்பது வரலாறு. ஆனால், அதில் எட்டிப் பார்க்கும் மனிதமும் விரவிக் கிடக்கும் ஒளிச் சிதறல்களும் அழகியலுடன் சீராக இழைக்கப்பட்ட காட்சியமைப்பும் நம்மை ஆட்கொள்கின்றன.

உலகப்போர் சினிமாக்கள் ஆண்டுதோறும் வெளியாகுபவைதான். ஆனால், அவற்றை எல்லாம் கடந்து 1917 ஈர்க்கக் காரணம், அது பேசும் அரசியலும் அது தரும் காட்சி அனுபவமும்தான். நம்மையே அந்தப் போர்க்களத்துக்குள் இறக்கிவிட்டு, தள்ளி நின்று வேடிக்கை பார்க்கிறது ரோஜர் டீக்கின்ஸின் ஒளிப்பதிவு. படம் நெடுக வரும் நீளமான ஷாட்களைக் கச்சிதமாக இணைக்கும் படத்தொகுப்பு, நல்ல அனுபவத்தை வழங்குகிறது.



இரு இளைஞர்களைப் பின்தொடரும் கமரா, அவர்களுக்கு அருகில் வந்து, பின் சட்டென அவர்களை முந்திச் சென்று, அதில் ஒருவரை மட்டும் தொடரும் தருணம், திரைமொழியின் உச்சம். அதிலும் வெடிகுண்டுகள் மற்றும் தோட்டாக்கள் வெடிக்கும் யுத்தக் களத்தினிடையே ஓடும் வில்லுக்கு முன்னால் ஓடும் கமரா, இந்த தசாப்தத்தின் மகத்தான காட்சி. இந்தக் காட்சிகளை அதன் செழுமை குன்றாமல் இணைத்திருக்கிறார் படத்தொகுப்பாளர் லீ ஸ்மித்.

குப்புறக் கவிழ்ந்து கிடக்கும் பீரங்கிகள், வெட்டப்பட்ட மரங்கள், சிதிலமடைந்த கட்டடங்கள் எனப் போர் முடிந்த நிலத்தின் தடயங்களைக் கண்முன் கொண்டு வருகிறார்கள் கலை இயக்குநர்கள் டென்னிஸ் கேஸ்னரும், லீ சேண்டல்ஸும்.

தனது முதல் படமான 'அமெரிக்கன் பியூட்டி'க்கே ஐந்து ஒஸ்கார் விருதுகளை வென்று அசத்தியவர் இயக்குநர் சாம் மெண்டிஸ். சட்டென கமர்ஷியல் "ஹை-பட்ஜெட்" பல்லக்கில் ஏறி, "ஸ்பெக்டர்", "ஸ்கைஃபால்" என ஜேம்ஸ் பாண்டு சினிமாக்களை இயக்கியவர், தற்போது மீண்டும் உணர்ச்சிபூர்வமாகக் கதை சொல்ல போர்க்களத்துடன் வந்திருக்கிறார். இந்த முறை ஒஸ்காரில் 10 பரிந்துரைகளுடன் முதலிடத்தில் இருக்கிறது "1917."

இராணுவ வீரரான சாம் மெண்டிஸின் தாத்தா ஆல்ஃபிரட்மெண்டிஸ் சொன்ன கதைகளின் ஒரு சொட்டுதான் இந்த "1917". முதலாம் உலகப் போரில் பணியாற்றிய ஆல்ஃபிரட், ஊர் திரும்பிய பின்னும் கைகளைக் கழுவிக்கொண்டே இருப்பாராம். குருதி தோய்ந்த அந்த மண், ஆல்ஃபிரட்டின் கைகளை விட்டு அகன்றதாய் அவரால் இறுதிவரை நம்ப முடியவில்லை. நிகழ்காலத்தில் நாம் இனி எவ்வித யுத்த அபாயத்தையும் நிகழ்த்திவிடக்கூடாது என்பதற்காகவே இறந்த காலத்தில் புதைய மறுக்கும் உலகப் போரின் மீதமிருக்கும் சாட்சியங்கள் இவை.

சினிமா என்பது நெட்ஃபிளிக்ஸ், ஹாட்ஸ்டார் என மொபைலுக்குள் சுருங்கிய ஒரு தருணத்தில், சினிமா என்பது பெரிய திரைகளில் கண்டு இன்புற வேண்டியது என்பதை அழுத்தமாய்ச் சொல்கிறது "1917".

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : தங்கமலை ரகசியம்
இயற்றியவர்: கல்யாணசுந்தரம்
இசை : டி.ஜி.லிங்கப்பா
பாடியவர்: பி.சுசீலா



அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராததேனோ?
அருகில் வராததேனோ?

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராததேனோ?

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராததேனோ?

இதயம் மேவிய காதலினாலே
ஏங்கிடும் அல்லியை பாராய்
ஆ.....
இதயம் மேவிய காதலினாலே
ஏங்கிடும் அல்லியை பாராய்

புது மலர் வீணே வாடிவிடாமல்
புது மலர் வீணே வாடிவிடாமல்
புன்னகை வீசி ஆறுதல் கூற
அருகில் வராததேனோ?
அருகில் வராததேனோ?

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராததேனோ?

மனதில் ஆசையை ஊட்டிய பெண்ணே
மறந்தே ஓடிடலாமா?
ஆ.....,
மனதில் ஆசையை ஊட்டிய பெண்ணே
மறந்தே ஓடிடலாமா?


இனிமை நினைவும் இளமை வளமும்
இனிமை நினைவும் இளமை வளமும்
கனவாய் கதையாய் முடியும் முன்னே
அருகில் வராததேனோ
அருகில் வர்ாதேனோ

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராதாதேனோ?

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராதாதேனோ?

அமுதை பொழியும் நிலவே
நீ அருகில் வராததேனோ
அருகில் வராதாதேனோ?

# டாணா திரை விமர்சனம்



சில ஹீரோக்களிடமிருந்து கலகலப்பான படங்களை ரசிகர்கள் எதிர்பார்ப்பார்கள். அப்படியான ஒருவர் நடிகர் வைபவ். சென்னை 28 படத்தை தொடர்ந்து அவர் இதை தக்கவைத்து வருகிறார். அவ்வகையில் தற்போது டாணா படம் அவருக்கு வெளியாகியுள்ளது. சரி கதைக்குள் போகலாம்.

ஹீரோ வைபவ் பின் குடும்பப் பின்னணி சரித்திரக் கதை கொண்டது. ஆங்கிலேய ஆட்சியின் போது பொலிஸ்துறை ஏற்படுத்தப்பட்டு முதன் முதலாக பொலிஸானது இந்த டாணா குடும்பம் தான். இதற்கு ஒரு பெரும் ஃபிளாஷ்பேக் இருக்கிறது.

அந்த பரம்பரையில் வந்த வைபவையும் பொலிஸ் ஆக்க வேண்டும் என்பது குடும்பத்தினரின் ஆசை. ஆனால் அவருக்கோ இளம் வயதிலிருந்தே ஒரு பிரச்சினை. இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகும் அவர் பொலிஸாகக் கூடாது என வைராக்கியமாக இருக்கிறார்.

இதற்கிடையில் இவர்களின் குலதெய்வம் கோவிலுக்கு அரசாங்கத்தால் பிரச்சினை வருகிறது. இதில் உயிர்ப்பலி நிகழ்கிறது. அந்த வேளையில் தன் வைராக்கியத்தை மாற்றிக்கொள்கிறார் வைபவ். ஆனாலும் அவர் பொலிஸ் ஆவதை தடுக்க ஒரு செக் வைக்கப்படுகிறது.

இதற்கிடையில் ஊரில் ஆதரவற்றவர்களாக சொத்துக்களுடன் இருப்பவர்களை குறிவைத்து கொலை செய்து சொத்துக்களை அபகரிக்கும் சதி வேலை நடந்து வருகிறது. இந்தச் சம்பவத்தில் தனக்கு தெரிந்த ஒருவரையும் இழக்கிறார் வைபவ். இப்படியான கொலைப்பின்னணியில் இருப்பவர் யார் என ஹீரோ தன் வேட்டையை தொடங்க, குற்றவாளி யார், வைபவுக்கு அப்படி என்ன பிரச்சினை, இறுதியில் போலிஸ் ஆனாரா என்பதே இந்த டாணா.

ஹீரோ வைபவ் ஏற்கனவே சொல்லப்பட்டது போல கலக்கலான அக்ஷன் நிறைந்த பொலிஸாக இப்படத்தில் இறங்கியுள்ளார். அவரின் கதை தேர்வு ஓகே தான். ஆனாலும் வேறு மாதிரியான கதைகளை தேர்ந்தெடுத்து அடுத்த லெவலுக்கு போக வேண்டும் என்பதே எல்லோரின் எண்ணம்.

கடந்த படத்தில் அவருக்கு கண் பிரச்சினை. இந்த முறை வாயில் பிரச்சினை. எங்கேயே இடிக்குதே என தோன்றலாம்.

அவருக்கு அப்பாவாக பாண்டியராஜன். அம்மாவாக உமா நடிக்க ஒரு இயல்பான குடும்பம் போல தான். அவரவருக்கு உண்டான கதாபாத்திரத்தை சரியாக கையாண்டுள்ளனர். அதேவேளையில் ஹீரோவுக்கு நண்ப ராக காமெடி நடிகர் யோகி பாபு. அடிக்கும் கவுண்டர் எல்லாம் சிரிப்பு வரவைக்கிறது. ஆங்காங்கே இளைஞர்களுக்கு பிடித்த இரட்டை அர்த்த வசனங்கள் கலந்து அடிக் கிறார். கொஞ்சம் ஃபன். ஆனாலும் ஹீரோ அதற்கு ஈடு கொடுக்கவில்லை என தெரிகிறது.

வைபவுக்கு ஹீரோயினாக நந்திதா ஸ்வேதா, ஹீரோவை பார்த்த மாத்திரத்திலேயே காதல் கொள்வதும், விரட்டி விரட்டி காதல் செய்வதும் பெரிதாக எடுபடவில்லை. ரொமான்ஸ்பாடல்களும்இல்லை.

வில்லனாக ஹரீஷ் பெரடி இப்படத்திலும் ஒரு சைலண்ட் கில்லர் போல தான். அந்தப் பார்வையே வில்லனாய் அவரை சித்திரிக்கிறது. அதிகம் பேச வேண்டியதில்லை. பாரம்பரிய கதையை தொட்டும், இக் காலத்தில் நவீன முறையில் டேட்டா பேஸ், டேட்ட எக்சேஞ் என தனி மனித இரகசிய தகவல்களை திருடி குற்றத்திற்கு துணை போகும் ஏஜென்சிக்களை பற்றியும், சொத்துக்களை அபகரிக்கும் குற்றங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளார். அதே வேளையில் முதல் பாதியில் இயக்குநர் சற்று தேவையில்லாத காட்சிகளை சேர்த்து விட்டரோ என்ற கேள்வி. படத்தின் நேரத்தை சற்று குறைத்திருக்கலாம். இன்னும் கதைக்கு அழுத்தம் கொடுத் தால் சிறந்த படைப்பை கொடுக்க முடியும் என கவனத்தில் கொள்ள வேண்டுமே. வேல ராமமூர்த்தி எண்ட்ரி. தன்னம் பிக்கை எழுப்பும் பாடல் ஓகே ரகம். சோலா காமெடியாக யோகி பாபுவின் காமெடி காட்சிகள் சிரிப்புக்கு ஓகே. வைப வுக்கான கதை ஓகே. நடிப்பும் ஸ்மார்ட் தான். ஹீரோ, ஹீரோயின் கெமிஸ்ட்ரி மிஸ் மேட்ச். வேல ராமமூர்த்தி, பாண்டியராஜன் காட்சி சம்பந்தமில்லாமல் இருந்தது போன்ற ஒரு ஃபீல். மொத்தத்தில் டாணா ஓகே.


**INDIA EDUCATION FAIR 2020**

**WORLD CLASS EDUCATION AT AFFORDABLE COST**

குறைவான கட்டணத்தில் உலகத்தரம் வாய்ந்த கல்வி

தொழில்வள மதிப்பீட்டு வாய்ப்புக்களின் பரந்த வகையறாக்களை வீட்டு வாயில்களுக்கே கொண்டு வரும் 4வது இந்திய கல்விக் கண்காட்சி- 2020 மீண்டும் ஒரு தடவை இலங்கை மாணவர்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பாகும். **இம்மாதம் 29ஆம் 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலிலும் பெப்ரவரி மாதம் 1ஆம் 2ஆம் திகதிகளில் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலிலும்** இடம்பெறும் இக்கண்காட்சி கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம், இலங்கை அரசாங்கத்தின் உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றின் ஆதரவுடன் **"SAPE Events & Media Pvt. Ltd."** நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. **யாழ்ப்பாணம் வலம்புரி ஹோட்டலிலும் கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலிலும் காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை கல்வி கருத்தரங்கு ஒன்றையும் கண்காட்சி ஒன்றையும் நடத்துவதற்காக "SAPE Events & Media Pvt. Ltd."** இந்தியாவிலிருந்து சுமார் 20 பல்கலைக்கழகங்களை சேர்ந்த தூதுக்குழு ஒன்றை அழைத்துவர இருக்கிறது. **இந்தியாவில் பல்வேறு புலமைப்பரிசில் திட்டங்களின் கீழ் கற்பதற்கு மாணவர்களை அழைப்பதே** இந்த முயற்சியின் முக்கிய நோக்கமாகும்.

தென்கிழக்காசியாவின் முன்னணி நிகழ்ச்சி முகாமைத்துவ, கல்வி ஊக்குவிப்பு நிறுவனங்களில் ஒன்றான **SAPE Events & Media Pvt . Ltd. (SAPE)** அநேகமாக மாணவர்களின் வீட்டு வாயில்களிலேயே அவர்களது கல்வி விருப்புரிமைகளையும் வளங்களையும் அவர்கள் அடைய இலகு வழிமுறைகளை காண்பிப்பதன் மூலம் மாணவ சமுதாயத்திற்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகிறது. கல்வி விருப்பத் தேர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நகரங்களிலுள்ள மாணவர்களை சென்றடைவதே **SAPE** இன் முக்கிய நோக்கமாகும். பதினான்கு வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டுள்ள **SAPE** கல்விக் கண்காட்சி இப்பொழுது இந்தியாவிலும் மற்றும் பல்வேறு தெற்காசிய நாடுகளிலும் பலரையும் கவரும் கல்விக் கண்காட்சியாகும்.

பெருமளவிலான இலங்கை மாணவர்கள் வெவ்வேறு மட்டங்களிலும் வெவ்வேறு கற்கைநெறிகளிலும் கல்வியை தொடர்வதற்காக வருடம் தோறும் இந்திய பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுகிறார்கள். அண்மையிலுள்ள நாடு, கலாசார தொடர்புகள், ஒப்பீட்டளவில் உலகத்தரம் வாய்ந்த இந்திய கல்வி ஆகியன இலங்கை மாணவர்களை பெரிதும் கவருகின்றன. சிறந்த கல்வியைப் பெறவேண்டும் என்ற இலங்கை மாணவர்களின் ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில் இந்தியா பெரும் தொகையான புலமைப் பரிசில்களையும் பல்வேறு துறைகளில் வழங்கி வருகிறது. இந்த புலமைப்பரிசில்கள் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து வழங்கப்படுகின்றன. கடந்த வருடம் க.பொ.த. உயர்தரம், பட்டப்படிப்பு, பட்டப்பின்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மட்டங்களில் தகைமை உள்ள இலங்கை மாணவர்களுக்கு 700க்கு மேற்பட்ட புலமைப்பரிசில்களை இந்தியா வழங்கியது.

இலங்கையில் நடைபெறும் இந்த இந்திய கல்விக் கண்காட்சி இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் பற்றியும் இந்திய பல்கலைக்கழகங்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் இலங்கையில் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் பற்றியும் அறிந்துகொள்ள உதவுமென நம்பப்படுகிறது.

கல்வி கற்பதற்கான செலவுகள் இன்று அதிகரித்து வரும் நிலையில் அதற்கான செலவுகள் குறித்து அறியவேண்டியது ஒரு கட்டாய தேவையாகிறது. புலமைப் பரிசில்களை பெற்றுக் கொள்வது குறித்தும் உடனடி அனுமதிகளை பெற்றுக் கொள்வது குறித்தும் மாணவர்கள் விபரங்களை அறிந்து கொள்வதற்கும் அவர்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள -ருவானி பெரேரா**
**0094 - 772270213,**
**மின்னஞ்சல் : ruwanip.srglobalservices@gmail.com**




# 2003 இல் டிராவிட்... 2020 இல் ராகுல்...!

## அவுஸ்திரேலிய தொடரில் கோலிக்குக் கிடைத்த அதிர்ஷ்டம்

2003 உலகக் கோப்பையின்போது அணியில் காம்பினேஷன் சரியாக வரவேண்டும் என்பதற்காக கங்குலி டிராவிட்டை கீப்பிங் செய்யச் சொன்னார். டிராவிட்டும் அணிக்காக அந்தப் பணியை செய்தார். அதேபோல் ராகுலுக்கு இந்த வாய்ப்பு வந்துள்ளது.

மிகவும் பரபரப்பாக நடந்த இந்தியா - அவுஸ்திரேலியா தொடரை 2-1 என வெற்றி பெற்று அசத்தியிருக்கிறது மென் இன் புளூ. கடந்த முறை இந்திய அணி அவுஸ்திரேலியா சென்று வெற்றி பெற்ற போது, வோர்னர், ஸ்மித் இல்லாததால் பலமில்லாத அணியை எளிதாக வெற்றி பெற்றுவிட்டனர் என்ற பேச்சு பரவலாக இருந்தது. அதைப் பொய்யாக்கும் வகையில் இந்த முறை மிகவும் வலுவான அணியாக வந்த அவுஸ்தி ரேலியாவை வதம் செய்து தொடரைக் கைப்பற்றியிருக்கிறது கோலி அண்டு கோ.

வோர்னர், ஸ்மித், ஃபிஞ்ச் என ஸ்டார் பட்ஸ்மேன்கள் இருக்க, கூடவே, வெறித்தன போர்மில் இருக்கும் லாபுஷான் இணைய அவுஸ்திரேலியா பல மடங்கு பலம் வாய்ந்த அணியாக கருதப்பட்டது. மறுபுறம், கோலி 4ஆவது வீரராக ஆடப்போவதாகவும் ராகுலை 3ஆவது வீரராக களம் இறக்கப் போவதாகவும் கூற சோஷியல் மீடியாக்களில் பயங்கர விவாதமே நடைபெற்றது. இது சரி வருமா என்று கேள்விகள் எழ, அதற்கு விடையும் இந்தத் தொடரிலே கிடைத்தது.

இந்தத் தொடரின் சில சிறந்த பெர்போமன்ஸ்கள் இங்கே...

### ஆரோன் பிஞ்ச் & வோர்னர்

முதல் போட்டியில், இவர்கள் இருவரும் இரட்டைக் குழல் துப்பாக்கியாக இந்திய பௌலர்களைச் சுட்டுத் தள்ளினார்கள். பலம் வாய்ந்த இந்திய பௌலிங் படையால் ஒரு விக்கெட் கூட எடுக்க முடியவில்லை. அதுவும் பும்ரா, ஜடேஜா, ஷமி, குல்தீப் போன்ற வீரர்களால் விக்கெட்டே எடுக்க முடியாததைப் பார்த்து, தொடர் எங்கே நம் கையை விட்டுப் போய்விடுமோ என்ற பயம் வந்துபோனது. வோர்னர் வழக்கம்போல் அதிரடியாக ஆட, பிஞ்சும் அவருக்குக் கம்பனி கொடுத்து ஆடினார். இருவரும் சேர்ந்து முதல் 10 ஓவரில் 84 ரன்களை எடுத்தனர். அந்த ரன் ரேட் கடைசிவரை குறையவே இல்லை. கோலி பௌலர்களை மாற்றி மாற்றிப் பார்த்தும் எந்தப் பலனும் இல்லை. 255 ரன்களை வெறும் 37 ஓவர்களில் சேஸ் செய்து விட்டனர். 15 வருடங்களுக்குப் பிறகு இந்தியா 10 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி அடைந்து அதிர்ச்சி அளித்தது.

### தவான் & கே.எல்.ராகுல்

ஓப்பனிங் இடத்துக்கு மியூசிக்கல் சேர் நடைபெற்று வரும் வேளையில் கிடைத்த இரண்டு வாய்ப்புகளையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஆடி அரைசதம் அடித்து அசத்தினார் தவான். அதுவும் இரண்டாவது போட்டியில் ஆக்ரோஷமாக ஆடி வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தார். 90 பந்துகளில் 96 ரன்கள் அடித்து 4 ரன்களில் சதத்தை தவறவிட்டார்.

எந்த இடத்திலும் சிறப்பாக ஆடும் ஒரு பட்ஸ்மனை பல நாட்களாகத் தேடிக் கொண்டிருந்தது இந்திய அணி. அந்தத் தேடலுக்கு இரண்டாவது போட்டியில் ஓரளவு பதில் கிடைத்தது, கே.எல் ராகுல் மூலமாக. ஓப்பனிங், ஒன் டவுன், 2nd டவுன் என ஆடியவரை 3rd டவுனாக ஆடும்படி கூற, தனக்கு விடுக்கப்பட்ட சவாலை ஏற்றுக் கொண்டு சிறப்பாக விளையாடி அசத்திவிட்டார் ராகுல்.

44 ஆவது ஓவரில் 280 ரன்கள் இருக்கும்போது அடுத்தடுத்து கோலி, மனிஷ் பாண்டே என இரண்டு விக்கெட்டுகள் வீழ்ந்துவிட, ஜடேஜாவுடன் இணைந்து அணியின் ஸ்கோரை 340 ரன்களுக்கு உயர்த்தினார் ராகுல். இறுதி ஓவர்களில் கம்மின்ஸ், ஸ்டார்க் இருவரையும் ஒரு வழியாக்கினார். அதுவும் கம்மின்ஸ் பந்தில் 3rd மன் திசையில் அடித்த சிக்ஸ் அவ்வளவு அழகாக இருந்தது. 52 பந்தில் 6 பவுண்டரீஸ், 3 சிக்ஸர்கள் அடித்து 80 ரன்களை எடுத்தார்.

முதல் போட்டியில் பன்ட் தலையில் அடிபட்டு வெளியேற, பக்கப் கீப்பராக களம் கண்ட அதே ராகுல், தனது அசாத்திய பட்டிங் பெர்போமன்ஸினாலும் நல்ல விக்கெட் கீப்பிங்கினாலும் முதல் சாய்ஸ் விக்கெட் கீப்பர் அளவுக்கு வந்துவிட்டார். இரண்டாவது போட்டியில் பிஞ்சை ஸ்டம்பிங் செய்தது டோனியை நினைவுபடுத்தியது. ஐ.பி.எல்., மாநில போட்டிகளின் கீப்பிங் அனுபவத்தை மனதில் வைத்து, "இது தொடரும்" என்று கூறி ராகுலுக்கு பெரும் பொறுப்பை அளித்திருக்கிறார் கோலி. 2003 உலகக்கோப்பையின்போது அணியில் காம்பினேஷன் சரியாக வர வேண்டும் என்பதற்காக கங்குலி, டிராவிட்டை கீப்பிங் செய்யச் சொன்னார். டிராவிட்டும் அணிக்காக அந்தப் பணியைச் செய்தார். அதேபோல் ராகுலுக்கு இந்த வாய்ப்பு வந்துள்ளது. ஆனால், இந்த முயற்சி எந்த அளவுக்கு வெற்றி பெறும் என்பது போகப் போகதான் தெரியும்.



### ஷமி & பும்ரா

இந்தத் தொடர் ஆரம்பிக்கும் போது அனைவரும் எதிர் பார்த்தது ஆஸ்திரேலியாவின் அட்டாக்கிங் பௌலர்களான கம்மின்ஸ் மற்றும் ஸ்டார்க்கைதான். ஆனால், இருவரின் பந்தையும் இந்திய பட்ஸ்மேன்கள் நையப்புடைத்து விட்டனர். இவர்களுக்கே இந்தக் கதி என்றால் நமது பௌலர்களுக்கு என்ன ஆகப் போகிறதோ என்று எண்ணிய போது முதல் போட்டியின் முடிவு நம் பௌலர்களுக்கும் இதே கதிதான் என்பதை உணர்த்தியது.

காயத்திலிருந்து மீண்டு வந்துள்ள பும்ரா சாதிப்பாரா? இல்லை சறுக்கி விடுவாரா? என்ற சந்தேகத்தைக் கொண்டிருந்த ரசிகர்களுக்கு இரண்டாவது போட்டியில், தான் பழைய பும்ராதான் என்பதை உணர்த்தினார். இரண்டாவது மற்றும் மூன்றாவது போட்டிகளில் தொடர்ந்து டைட் லைனில் பந்து வீசி பட்ஸ்மன்களை ரன் எடுக்க விடாமல் செய்து பிரஷரை உருவாக்கினார். மற்ற பௌலர்களின் பந்துவீச்சில் ரன்னுக்குச் செல்லுமாறு பட்ஸ்மேன்களைத் தூண்டினார். பட்ஸ்மன்களும் ரன்களுக்குப் போக மற்ற பௌலர்களிடம் விக்கெட்டுகளை பறிகொடுத்தனர். பட்ஸ்மன்கள் ரன் மழைகள் பொழிந்து கொண்டிருந்த நேரத்தில் 10 ஓவரில் வெறும் 32 மற்றும் 38 ரன்கள் கொடுப்பது எல்லாம் பும்ராவால் மட்டுமே முடியும்.

பும்ரா உருவாக்கிய பிரஷரை நன்றாக பிடித்துக் கொண்ட சைனி மற்றும் ஷமி யார்க்கர்களாகப் போட்டு தள்ளினார்கள். இரண்டாவது போட்டியில் மட்டும் 25 இற்கும் மேற்பட்ட பந்துகள் யார்க்கர்களாக வீசப்பட்டிருக்கும். ஷமி இரண்டாவது மற்றும் மூன்றாவது போட்டிகளில் விக்கெட் வேட்டைகளை நடத்திவிட்டார். இரண்டு போட்டிகளிலும் கம்மின்ஸ்க்கு ஒரே மாதிரி யார்க்கர்கள் வீசி விக்கெட் எடுத்தது எல்லாம் வேற லெவல் பெர்பாமன்ஸ். 7 விக்கெட்டுகள் எடுத்தாலும் ரன்கள் மட்டும் அதிகமாக கொடுத்துக் கொண்டிருக்கிறார். அதை கட்டுப்படுத்துவாரேயானால் இந்திய அணிக்கு அசைக்க முடியாத ஒன்டே பௌலர் கிடைத்துவிடுவார்.

### ஸ்டிவ் ஸ்மித்

டெஸ்ட் போட்டிகள் மட்டுமே நன்றாக ஆடுவார். வன்டே போட்டிகளில் அதே பெர்பாமன்ஸை கொடுக்க முடியாது என்று கூறியவர்களுக்கு சரியான பதிலடி கொடுத்தார். முதல் போட்டியில் பட்டிங் ஆட வாய்ப்பு கிடைக்காதபோதும் இரண்டாவது மற்றும் முன்றாவது போட்டியில் 98 மற்றும் 131 ரன்கள் அடித்து வன்டே போர்மட்டிலும் தான் சம்பியன் பட்ஸ்மன்தான் என்பதை நிரூபித்தார். பாஸ்ட் பௌலர்களாலும் சரி ஸ்பின்னர்களாலும் சரி இவரை கட்டுப்படுத்தவே முடியவில்லை. ரன்கள் வந்து கொண்டே இருந்தது. இவரை அவுட் ஆக்க மற்ற அணிகள் சீக்கிரம் வழி கண்டுபிடிக்க வேண்டும். இல்லையெனில் அனைவர் பாடும் திண்டாட்டம்தான்.


### ரோஹித் & கோலி

ரோஹித் முதல் இரண்டு போட்டிகளில் சறுக்கினாலும் தனது ராசியான பெங்களூர் மைதானத்தில் சதம் அடித்து தொடரை வென்று கொடுத்துவிட்டார். காயம் காரணமாக தவான் பட்டிங் ஆட வராத நிலையில் தனது விக்கெட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்த ரோகித் மிகவும் பொறுமையாக ஆடினார். உலகக் கோப்பையில் தென்னாபிரிக்காவுடனான போட்டிக்குப் பிறகு ரோஹித் ரொம்ப பொறுமையாக விளையாடியது இந்த ஆட்டத்தில்தான். மொத்த சுமையும் தன் மேல் ஏற்றிகொண்டு கோலியை செட்டில் ஆக விட்டார். ஸ்டார்க் பந்தில், டீப் பாயிண்ட்ல ஒரு டிரைவ் அடிப்பார். அதுவும் ஓவர் தி விக்கெட்டில் வந்து போடும் போது! ரோகித்தின் பெஸ்ட் ஷாட் என்று இதை சந்தேகமேயில்லாமல் கூறலாம்! 128 பந்துகளில் 8 பவுண்டரீஸ் மற்றும் 6 சிக்ஸர்கள் அடித்து 119 ரன்கள் எடுத்து அணியை வெற்றிக்கு அருகில் கொண்டு வந்து விட்டுச் சென்றார்.

கோலி தான் ஒரு சேஸிங் கிங் என்று மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறார். முதல் போட்டியில் 4 ஆவது வீரராக களம் இறங்க இந்தியா, பெரிய ஸ்கோரை செட் செய்ய முடியாமல் தோல்வியடைந்தது. தனக்கும் சரி அணிக்கும் சரி 3 ஆவது பேட்டிங் பொஷிசன் ஆடுவதுதான் சரியான முடிவு என்பதை உணர்ந்து மீண்டும் அதே இடத்தில் இரண்டாவது போட்டியில் இறங்கினார். ஆடம் ஜம்பா, லெக் ஸ்பின்னில் கோலியைத் திணறடிக்க, மிகவும் சாதுர்யமான முறையில் ரன் சேகரிப்பில் ஈடுபட்டார். இரண்டாவது போட்டியில் 76 பந்தில் 78 ரன்கள் எடுத்தார் என்றால் முன்றாவது போட்டியில் 91 பந்தில் 89 ரன்கள் அடித்து அணியைக் கரை சேர்த்தார். முன்றாவது போட்டியில் 36ஆவது ஓவரில் கோலி அடித்த **Straight drive** ஒரு நிமிடம் சச்சினை மீண்டும் கண் முன்னாடி கொண்டு வந்து நிறுத்தியது

குல்தீப் ஒரே ஓவரில் இரண்டு விக்கெட்டுகள் எடுத்து ஆட்டத்தை இந்தியாவின் பக்கம் திருப்பியது, மனிஷ் பாண்டேவின் அற்புத கட்ச், ஜடேஜாவின் ஓல்ரவுண்ட் பெர்பர்மன்ஸ் என மற்ற வீரர்களும் தங்கள் பங்களிப்பை அளிக்க இந்தியா 2-1 என, பலம் வாய்ந்த அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது. இந்தியா அடுத்து நியூசிலாந்துக்குப் பயணம் செய்து அனைத்து வகையான போட்டிகளிலும் ஆடக் காத்திருக்கிறது. இந்திய மைதானத்தில் சாதித்த வீரர்களுக்கு உண்மையான சவால் அங்கே காத்திருக்கிறது. சவாலை சமாளித்து சாதிப்பார்கள் என்றே நம்புவோம்.

# உழைப்பும் பிழைப்பும்



ஒரு காட்டில் வாழ்நாள் முழுக்க வேட்டையாடி அலுத்துப் போன புலி ஒன்று ஒரு தொழிற்சாலை ஆரம்பிச்சுது.

அங்கே ஒரு எறும்பு வேலை செஞ்சுது. அதுபாட்டுக்கு வரும் சுறுசுறுப்பாக எல்லா வேலைகளையும் செஞ்சு முடிச்சிட்டு சாயந்திரம் ஆனா வீட்டுக்கு போயிடும். புலியாருக்கு ஏக சந்தோசம் கணிசமான இலாபமும் கிடைச்சுது.

நல்லாத்தான் போய்கிட்டிருந்தது. நம்ம ஆட்சியாளர்களு க்கு தோனுற மாதிரி நடு ராத்தி ரியில் திடீர் ன்னு புலியாருக்கு ஒரு ஐடியா தோனுச்சு. எறும்பு தனியாவே வேலை செய்யுதே அதை கண்காணிக்கற அளவுக்கு நமக்கும் போதுமான அறிவு இல்லை, நாம எறும்பை கண்காணிக்கவும் ஆலோசனை சொல்லவும் ஒரு உற்பத்தி மேலாளரை **(Production Manager)** நியமித்தால் உற்பத்தி அதிகமாகும்னு ஒரு தேனியை கொண்டு வந்தது.

அந்த தேனியும் வேலை யில் ஒரு புலிதான். பல கம் பனிகளில் வேல்ல செய்த பழுத்த அனுபவ சாலி (இப்போ அந்த கம்பனி யெல்லாம் இருக்குதா ன்னு கேக்காதிங்க). அந்த தேனி சொல்லுச்சு. "பாஸ் எறும்பை அதன் போக்குல விட முடியாது. அதுக்கு முறையான ஒர்க் ஷெட்யூல் போட்டுக் கொடுத்தால் இன்னும் கூடுதலா வேலை வாங்கலாம். அதுக்கு நிறைய வேலை இருக்கு எனக்கு ஒரு செக்ரட்ரி வேணும்" னுது.

புலிக்கு ஏக சந்தோஷம் இந்த தேனி என்னமா யோசிக் குது. நமக்கு இவ்வளவுநாளா இது தோனலையேன்னு ஒரு முயலை செக்ரட்டரியாக்குச்சு. அத்தோட புலியார் நமக்கும் கொஞ்சம் தெரியும்னு காட்டிக்க."ஆள் போட்டாச்சு இனிமே எனக்கு தினமும் வேலை முன் னேற்றம் குறித்து ரிப்போர்ட் வரைபடமாவும் அட்டவணை யாவும் கொடுக்கனும்" னுது.

"ஓகே பாஸ் அதுக்கென்ன. பிரமாதமா செஞ்சிடலாம் அது க்கு ஒரு கம்ப்யூட்டர். பிரின்டர். புராஜக்டர் எல்லாம் வேணுமே" ன்னது. அப்படியே வாங்கிகிச்சு ஒரு கம்ப்யூட்டர் டிபார்ட் மெண்டும் பூனை ஒன்றின் தலைமையில் அமைச்சாச்சு.

இப்போ ஏகப்பட்ட கெடுபிடி நெருக்கடிகளால் விரக்தியடைந்த அந்த எறும்போட வேலையில் ஒரு தொய்வு வந்துச்சு. உற்பத்தி குறைந்தது. புலி நினைச்சுது, எல்லாம் சரியா இருந்தும் ஏன் இப்படி? தேனியோட ஐடியாக்களை எறும்புக்கு விளக்கமா எடுத்துச்சொல்ல ஒரு தொழில்நுட்ப ஆலோசகரை போடுவோம்னு ஒரு குரங்குக்கு அந்த வேலையை கொடுத்தது. ஏற்கனவே டல்லான எறும்பை இப்போது குரங்கும் அதன் பங்குக்கு குழப்ப அன்றைய தினத்துக்காக திட்டமிடப்பட்ட வேலைகளை அன்றை க்கே முடிக்காமல் போனது எறும்பு. மேலும் உற்பத்திகுறைவு நட்டத்தில் இயங்கியது பக்டரி.

"எதைத்தான் தின்னா பித்தம் தெளியும்" என்ற மன நிலைக்கு ஆளான புலியார் நட்டத்தை சரி செய்ய என்ன செய்லாம்னு ஆராய ஆந்தையை நியமிச் சது. ஆந்தை மூன்று மாத ஆரா ய்ச்சிக்கு பின் கடைசியா இப்படி சொன்னது. "தொழிற்சாலையில் தேவைக்கு அதிகமா ஆள் இருப்பதே காரணம்யாரையாவதுவேலையை விட்டு எடுத்துட்டா நிலைமை ஓரளவு சீராகும்"

"யாரை எடுக்கலாம் அதையும் நீயே சொல்லிடு" என்றது புலி. "அதிலென்ன சந்தேகம் சரியாக வேலை செய்யாத அந்த எறும் பை தான்" அதிரடியாகசொன்னதுஆந்தை


இப்படித்தான் உலகெங்கும் பொதுத்துறை மற்றும் தனியார்துறைகளில் எதுவும் செய்யாமலே படம் காட்டுபவன் பிழைத்துக் கொள்கிறான். வேறெது வும் தெரியாது வேலையை மட்டுமே செய்பவன் பாதிப்புக்குள்ளாகிறான்.

## சிந்தனைக்கு

வாய் விட்டு சிரித்தால் நோய் விட்டு போகும் என்பார்கள்... அது அந்த காலம். மனம் விட்டு பேசினால் பகை விட்டு போகும்... இது இந்த காலம். (பகை மட்டு மல்ல மன உளைச்சல், சந்தே கங்கள், பயம் இன்னும் பல)

ஒரு பிரச்சினையில் மூன் றாமவர் தலையிட்டு அவரது கருத்துக்க ளுக்கு கொடுக்கப் படும் முக்கியத்துவங்களை தவிர்த்து சம்பந்தப் பட்டவரோடு நேரடியாக கலந்துரையாடி தீர் வினை பெறுவதே சாலச் சிறந்தது.


பின்னொரு காலத்தில் அவ்வாறு கதைத்திருக்கலாமே என எண்ணி வருந்துவது. போய் விட்ட பேருந்திற்கு கை அசைப்பது போன்றது. பிரச்சினைக ளும் அவ(மானங்)தூறுகளும் கழுத்தை நெரித்தாலும் வயதி ற்கும் அனுபவத்திற்கும் இன்று வரை எங்குமே மரியாதை யுள்ளது.



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1957

**மூர்த்தி**

மனிதர்கள் முன் நற்பெயர் எடுப்பதைவிட, மனச்சாட்சியின் முன் நற்பெயர் எடுங்கள்



**ஜீவா**

உனக்காக நான் மட்டுமே இருக்கிறேன் என்று சொல்லும் ஒரு உறவு மட்டும் கிடைத்தால் போதும் வாழ்வில் சோகத்திற்கும் தனிமைக்கும் செல்லத் தேவையில்லை



**கதிர்**

நம்மை மதிப்பவர்களை நாம் தேடிப் போகலாம் தப்பில்லை... ஆனால் நம்மை அலட்சியப்படுத்துபவர்களை திரும்பிக்கூடப் பார்க்கக்கூடாது.




**தனம்**

மன உறுதி மட்டும் இருந்தால் போதாது. அந்த உறுதியைப் போலவே செயல் ஊக்கத்துடன் கூடிய உழைப்பும் சேர்ந்தால் தான் வெற்றிக்கு வழிவகுக்கும்



**மீனா**

காலத்திற்குப் பேசத்தெரியாது. ஆனால் காலம்தான் அனைத்திற்கும் பதில் சொல்லும்



**முல்லை**

நீ எவ்வாறு பேசக் கற்றுள்ளாயோ அதேபோல் மௌனத்தையும் கற்றுக்கொள். பேச்சு உனக்கு வழிகாட்டலாம். ஆனால் மௌனம் நிறைய சந்தர்ப்பங்களில் உன்னைப் பாதுகாக்கும்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 208

# ஆரோக்கிய உணவு அனைவருக்கும் பொதுவானது...



நாம் இன்று உண்ணும் உணவு

மேலைத் தேசமோகம் , நேரமின்மை, காரணமாக நாம் இன்று ஆரோக்கியமற்ற உணவு வகைகளை உண்கின்றோம். விரைவாகத் தயாரிக்கப்படக் கூடிய, சுவையான, இலகுவில் சமிபாடடையக் கூடிய நூடில்ஸ் போன்ற உணவுகளை நாடுகிறோம்.இதனால் உடலுக்கு தேவையான புரதங்கள், கனிப் பொருட்கள், விற்றமின்கள் கிடைக்காமல் போவதுடன் மேலதிக கலோரிகளால் உடற்பருமன் அதிகரிப்பதுடன் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், கொலஸ்ரோல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. நாம் இன்று விரும்பி உண்ணும் உணவுகளில் அதிகசீனி, உப்பு, நிரம்பிய கொழுப்புக்கள், அதிக மாப்பொருள் என்பன அளவுக்கு அதிகமாக உள்ளன. இவை சுவையாக இருக்கின்ற போதிலும் உடலிற்குத் தீங்கானவை

ஆரோக்கியஉணவு (healthy diet)

புரதம், நிரம்பாத கொழுப்புக்கள், சிக்கலான காபோவைதரேற்றுக்கள், விற்றமின்கள், கனியுப்புக்கள், நிறைந்த பூரண உணவுவகைகளே ஆரோக்கிய உணவாகும். ஆரோக்கிய உணவு என்பது வயது, பால், வேறுபாடு இன்றி அனைவருக்கும் பொதுவானது. நாம் சிறுவயது முதல் ஆரோக்கிய உணவு உண்ணப்பழக வேண் டும்.

உடலிற்கு ஆரோக்கியம் அளிக்கும் பழவகைகள்

நமது உணவில் அதிகளவு பழங்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்.பழங்கள் எமக்கு விற்றமின்சி, விற்றமின் ஏ போன்ற அத்தியாவசியமான விற்றமின்களை வழங்குகின்றன. பழங்களில் அதிகமுள்ள பொட்டாசியம் குருதி அமுக்கத்தை குறைக்கின்றது. நீரிழிவு நோய் உள்ளவர்கள் மாம்பழம் , பலாப்பழம், போன்ற அதிக இனிப்புள்ள பழங்களை தவிர்ப்பது நல்லது. அவர்கள் வாழைப்பழம் , பப்பாப்பழம், பச்சை அப்பிள், கொய்யா, நாவல், ஜம்பு போன்ற பழங்களை உண்ணலாம். பழங்களில் உள்ள நார்ச்சத்து மலச்சிக்கலை தடுப்பதுடன் மூலநோய் (piles), பெருங்குடற் புற்றுநோய் போன்றவை ஏற்படாமல் பாதுகாக்கின்றது.

மரக்கறிவகைகளும் கீரைவகைகளும்


பழங்களை போலவே மரக்கறி வகைகளும் கீரைவகைகளும் கனியுப்புக்களையும் விற்றமின்களையும் நார்ச்சத்தையும் தருகின்றன. இவற்றில் உள்ள காபோவைதரேற்றுக்கள் சிக்கலான நிலையில் இருப்பதால் (complex) இலகுவில் உறிஞ்சப்படுவதில்லை. எனவே இரத்தத்தில் குளுக்கோசின் அளவு விரைவாக அதிகரிப்பதில்லை. இது நீரிழிவு நோயாளிகளுக்கு அதிக நன்மை தரும் கீரை வகைகளில் அதிக இரும்புச்சத்து உள்ளது. அது குருதிச் சோகை ஏற்படுவதை தடுக்கிறது. சைவ உணவுமட்டும் உண்பவர்கள் தமது உணவில் நாளாந்தம் பொன்னாங்காணி, வல்லாரை போன்ற கீரைவகைகளை சேர்த்துக்கொள்ளவேண்டும்.

புரதச்சத்து அதிகமுள்ள பருப்பு, கடலை, அவரை வகைகள்

பருப்பு, பயறு, கடலை, கௌப்பி, சோயா, அவரை போன்றவை எமக்கு புரதச்சத்தையும் இரும்புச் சத்தையும் அளிக்கின்றன. இவற்றில் காபோவைதரேற்றுக்கள் குறைவாக இருப்பதால் நீரிழிவு நோயாளிகளுக்கு இவை சிறந்தவை. சோயா அவரையில் சிறந்ததர புரதம் உள்ளது. சிறுவர்களின் வளர்ச்சிக்கு புரத உணவுகள் அவசியமாகும்.

தானிய வகைகள்

தானிய வகைகளை பொறுத்தவரையில் தீட்டாத முழுத்தானியங்களே சிறந்தவை. தீட்டாத அரிசியில் நார்ச்சத்தும், விற்றமின் B உம் அதிகமுள்ளன. ஆசியக் கண்டத்தை சேர்ந்த நாங்கள், அதிக மாச்சத்துள்ள சோறு மற்றும் அரிசிமா, கோதுமை மாப்பண்டங்களை அதிகளவில் உண்கிறோம். உடலை வருத்தி வேலை செய்யாதவர்களுக்கு இது தீங்கானது. எனவே நாம் மரக்கறி வகைகளை அதிகமாகவும் மாப்பொருள்களை குறைவாகவும் உண்ண வேண்டும்.



நாட்டரிசி, குத்தரிசி என்பன சம்பா அரிசி, பொன்னி அரிசி போன்ற வெள்ளை அரிசிகளைவிடச் சிறந்தவை. மாவகைகளில் ஆட்டாமா, குரக்கன், உழுந்து என்பன சிறந்தவை. கோதுமை மாவில் அதிகளவு மாப்பொருள் இருப்பதால் தவிர்ப்பது நல்லது.

எண்ணெய் வகைகள்

பொதுவாக எல்லோரும் எண்ணெய் வகைகளை குறைவாக எடுப்பது நல்லதாகும். நிரம்பிய கொழுப்பமிலங்கள் (saturated fat) உள்ள தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய் என்பன குருதியில் கொலஸ் ரோலின் அளவை அதிகரிக்கச் செய்வதனால் தீங்கானவை. நிரம்பாத கொழுப்பு அமிலங்களால் ஆன (unsaturated fat) சூரியகாந்தி எண்ணெய், ஒலிவ் எண்ணெய், நல்லெண்ணெய், சோயா எண்ணெய், சோள எண்ணெய் போன்றவை சிறந்தவை ஆகும். மாஜரின் மற்றும் பிஸ்கட் வகைகளில் Transfatty acid எனப்படும் தீங்கான கொழுப்பமிலங்கள் உள்ளன என்பதால் அவை தவிர்க்கப்பட வேண்டியவை.



நிறை உணவான பால்

பால் ஒருநிறை உணவு.அதில் கல்சியம், உயர்தரப் புரதம், விற்றமின்கள் நிறைந்துள்ளன. வளரும் பிள்ளைகளுக்கு பால் அத்தியாவசியம்.பாலில் உள்ள பிரச்சினை அதில் உள்ள கொலஸ்ரோலும் நிரம்பிய கொழுப்புமாகும். எனவே வளர்ந்தவர்களும் கொலஸ்ரோல் அதிகம் உள்ளவர்களும் பசுப்பாலையும் முழு ஆடை பால் மாக்களையும் தவிர்த்து கொழுப்பு நீக்கப்பட்ட (Non fat milk) பால்மாவை பயன்படுத்தலாம்.மாமிசம் உண்ணாதவர்களுக்கு (vegetarians) விற்றமின் பி12 பாலின் மூலம் மட்டுமே கிடைப்பதால் அவர்கள் பால் அருந்தவேண்டும்.

மீனும் இறைச்சிவகைகளும்

மீன் எமக்கு தேவையான புரதம், கல்சியம் , விற்றமின்கள் அயடீன் என்பவற்றை அளிக்கின்றது. மீனில் உள்ள கொழுப்பில் ஒமேகா -3 எனும் கொழுப்பமிலம் உள்ளது. இது இருதய நோய்களில் இருந்து எம்மை பாதுகாக்கிறது. பெரிய மீன்கள் தீங்கானவை என்ற கருத்து நம்மிடையே உள்ளது. இது தவறானது. இறைச்சி வகைகளில் கோழி இறைச்சி ஆரோக்கியமானதாகும். ஆட்டு இறைச்சி, மாட்டு இறைச்சி என்பவற்றில் நிரம்பிய கொழுப்பமிலங்கள் ( saturatedfat) கொலஸ்ரோல் என்பன அதிகம் உள்ளதால் தவிர்ப்பது நல்லது. Redmeat உள்ள மாடு,ஆடு என்பவற்றின் இறைச்சி புற்றுநோயை ஏற்படுத்தலாம்

முழு உணவான முட்டை

முட்டையிலும் உயர்தர புரதம் , விற்றமின்கள் கனிப் பொருட்கள் நிரம்ப உள்ளன. ஆனால் முட்டையில் கொலஸ்ரோல் அதிகம் உண்டு. குருதியில் கொலஸ்ரோல் உள்ளவர்கள் முட்டைமஞ்சள் கருவை ஒரு வாரத்துக்கு 3 தடவைக்கு மேல் உண்ணக்கூடாது. முட்டை வெள்ளைக்கருவை அதிகமாக உண்ணலாம்

உப்பை குறைப்பது நல்லது.

உணவில் உப்பை இயன்றவரை குறையுங்கள். உயர் குருதி அமுக்கம் உள்ளவர்கள் அதிக உப்புள்ள சூப் வகைகள் , கருவாடு என்பவற்றை குறைவாக உண்ண வேண்டும். சராசரியாக ஒருவருக்கு ஒருநாளைக்கு ஒருதேக்கரண்டி உப்பு போதுமானதாகும்.



இனிப்பை தவிருங்கள்

எந்த வயதினராக இருந்தாலும் எல்லோருமே இனிப்பு வகைகளை குறைக்க வேண்டும்.இனிப்புள்ள மென்பானங்கள் , ஐஸ்கிறீம், இனிப்பு பிஸ்கட்டுகள், கேக் என்பவற்றை தவிர்க்க வேண்டும்.

தாகமாக இருக்கும் போது மென்பானங்களை தவிர்த்து நீரை அருந்துங்கள். நீர் அத்தியாவசியம்

ஒவ்வாரு நாளும் போதுமான அளவு நீரை அருந்துங்கள்.வளர்ந்த ஒருவர் ஒருநாளைக்கு 2- 2 ½ லீற்றர் கொதித்தாறிய நீரை பருக வேண்டும். இதன் மூலம் சிறுநீரகக்கற்கள், சிறுநீர் கிருமித்தொற்று என்பவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்

ஆரோக்கிய உணவு உண்பதன் மூலம் ஆரேர்க்கியமான வாழ்வை பெறுவதுடன் நோய்களில் இருந்து எம்மை பாதுகாத்துக் கொள்ளலாம். நோய் வாய்ப்பட்ட பின்னர் உணவுக் கட்டுப்பட்டை கடைப்பிடிப்பதை விட வருமுன் காப்பதே சிறந்தது.

Dr.எஸ்.கேதீஸ்வரன்
பொது வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (076 059 4937) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்